DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan, Broker
Joy H Selvanayagam, Broker

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc.
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam, Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam, Sales Representative
RE/MAX Community

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel : 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது வெள்ளி விழா
2021
UTHAYAN
உதயன்
சிந்திக்கும் தமிழ் உலகின் உலகில் எந்திக்கும் சுதிர் வீசும் ...
$1.00
416-752-1524
416-752-6703

உதயம் 1314 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday June 11, 2021

# கனடா — லண்டனில் இஸ்லாமிய குடும்பத்தை வாகனத்தால் மோதிக் கொன்ற இளைஞன் பாதுகாப்புக் கவசம் அணிந்திருந்தாராம்



கனடா - லண்டன் நகரில் இஸ்லாமிய குடும்பம் ஒன்றை தனது வாகனத்தால் மோதிக் கொன்ற வெள்ளையின இளைஞனான 20 வயதான நதானியேல் வெல்ட்மேனை பொலிசார் கைது செய்த போது அவர் சிரித்தபடி நின்றார் என்றும் அத்துடன் தனது உடலை துப்பாக்கிக் குண்டுகளிலிருந்து பாதுகாக்கக் கூடிய உடற் கவசனம் மற்றும் தலையைப் பாதுகாக்கக் கூடிய இராணுவத்தினருக்குரிய தலைக் கவசம் ஆகியவற்றை அணிந்திருந்ததாக் கூறப்படுகின்றது.

அந்த இளைஞன் இரத்தக் கறைகள் நாற்புறமும் சிதறியிருந்த தனது வாகனத்திலிருந்து வெளியே வந்தபோது பொலிசார் கைதுசெய்ததாகவும் அப்போது அந்தக் காட்சியை ஒளிப்பதிவு செய்யும் படி அருகில் நின்ற ஒரு டாக்சி சாரதியை கேட்டுக் கொண்டதாகவும் அந்த கோரமான கொலைச் சம்பவம் இடம்பெற்று சில நிமிடங்களின் பின்னர் அவர் கைது செய்யப்பட்டார் என்றும் தெரியவந்துள்ளது.

*(தொடர்ச்சி உள்ளே 2ம் பக்கத்தில்)*

# பிரான்சின் ஜனாதிபதி மேக்ரானை கன்னத்தில் அறைந்தவருக்கு 14 மாதங்கள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது





பிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதி மேக்ரானை பொது இடத்தில் வைத்து மக்கள் பார்க்கும்படியாக கன்னத்தில் அறைந்த டேமியன் என்பவருக்கு அடுத்த நாளே அங்குள்ள நீதிமன்றம் ஒன்று 14 மாதங்கள் சிறைத்தண்டனை வழங்கியது. பிரான்சில் அமைந்துள்ள ஹோட்டல் பாடசாலை ஒன்றுக்கு ஜனாதிபதி மேக்ரான் சென்ற போது, அங்கு மக்களோடு கூடி நின்ற டேமியன் ஜனாதிபதியின் கன்னத்தில் அறைந்தார்.

இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பொலிசார் உடனடியாக இரண்டு பேரை கைது செய்தனர். அதன் பின் இதற்கு காரணமான டேமியனை உடனடியாக நீதிப்மன்றத்தில் ஆஜர்படுத்தினர். அதைத் தொடர்ந்து விசாரிக்கப்பட்டு, 18 மாத சிறை தண்டனையை நீதிமன்றம் வழங்கி உத்தரவிட்டது. இந்த தண்டனைக் காலத்தின் நான்கு மாதங்கள் சிறையிலும்,14 மாதங்கள் சட்டக் காவல்கண்காணிப்பிலும் கழிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இரண்டு வருடங்களிற்கு இவர் மீதான கண்காணிப்பு தொடரும் எனவும், அதற்குள் வேறு குற்றம் புரிந்தால் முழுமையான காலத்தையும் சிறையிலேயே கழிக்க நேரிடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. தண்டனை பெற்ற டேமியன் மேலும் குற்றங்களைச் செய்யாமல் இருக்க, உளவியல் சிகிச்சைகளையும் பெறவேண்டும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000
Visit GtaCredit.Com
* North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX Realtron AD Team

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7 — 905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905 794 4404

கனடிய செய்திகள் Canadian News

# கனடா – லண்டனில் இஸ்லாமிய குடும்பம் ஒன்றை வாகனத்தால் மோதிக் கொன்ற இளைஞன் உடற் கவசம் அணிந்திருந்தாராம்



கனடா - லண்டன் நகரில் இஸ்லாமிய குடும்பம் ஒன்றை தனது வாகனத்தால் மோதிக் கொன்ற வெள்ளையின இளைஞனான 20 வயதான நதானியேல் வெல்ட்மேனை பொலிசார் கைது செய்த போது அவர் சிரித்தபடி நின்றார் என்றும் அத்துடன் தனது உடலை துப்பாக்கிக் குண்டுகளிலிருந்து பாதுகாக்கக் கூடிய உடற் கவசனம் மற்றும் தலையைப் பாதுகாக்கக் கூடிய இராணுவத்தினருக்குரிய தலைக் கவசம் ஆகியவற்றை அணிந்திருந்ததாகக் கூறப்படுகின்றது.

அந்த இளைஞன் இரத்தக் கறைகள் நாற்புறமும் சிதறியிருந்த தனது வாகனத்திலிருந்து வெளியே வந்தபோது பொலிசார் கைதுசெய்ததாகவும் அப்போது அந்தக் காட்சியை ஒளிப்பதிவு செய்யும் படி அருகில் நின்ற ஒரு டாக்சி சாரதியை கேட்டுக் கொண்டதாகவும் அந்த கோரமான கொலைச் சம்பவம் இடம்பெற்று சில நிமிடங்களின் பின்னர் அவர் கைது செய்யப்பட்டார் என்றும் தெரியவந்துள்ளது.




கனடாவின் லண்டன் நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று, இந்த இன வெறுப்புக் காரணமாக இடம்பெற்ற நான்கு பேர் கொல்லப்பட்ட சம்பவத்தில் பாகிஸ்த்தானிலிருந்து கனடாவிற்கு குடியேறிய குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் மீது வாகனத்தை வேகமாகச் செலுத்தி நதானியேல் வெல்ட்மேன் என்ற இருபது வயது இளைஞரே கொன்றார் என்றும் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவம் இடம் பெற்று சில நிமிடங்களில் ஒரு டாக்சிச் சாரதி தனது இடைவேளையை எடுத்துக் கொண்டிருந்தபோது, சந்தேக நபர் தனது கறுப்பு நிற வாகனத்தை வேகமான ஓட்டிச் சென்று, நிறுத்தியிருந்த சாரதியின் டாக்சிக்கு அருகில் முட்டும் படியாக நிறுத்திய பின்னர், தான் பலரை தனது வாகனத்தால் மோதிக் கொன்றதால் போலீஸை அழைக்கும்படி கேட்டுக் கொண்டதாககவும் டாக்ஸி நிறுவனத்தின் லண்டன் பகுதி தலைவர் ஹசன் சவேலகி என்பவர் மேற்படி டாக்ஸி சாரதி சார்பில் பொலிசாரிடம் தெரிவித்தார்.


போலிசார் வாகனத்திலிருந்து கொலைச் சந்தேக நபரை வாகனத்திலிருந்து வெளியேற்றியபோது, அவர் சிரித்தபடியே இறங்கியதாகவும் இந்த சம்பவத்திற்குப் பிறகு தனது டாக்ஸ் டிரைவர் மீண்டும் வேலைக்கு திரும்பவில்லை என்றும் டாக்சி நிறுவனத் தலைவர் சவேஹிலகி கூறினார்.

இந்த இனக் குரோத அல்லது மத நம்பிக்கைக்கு எதிரான படுகொலைத் தாக்குதலில் பலியானவர்கள் 46 வயதுடைய சல்மான் அப்சல், 44 வயதுடைய அவரது மனைவி மடிஹா, 15 வயதுடைய அவர்களின் மகள் யும்னா, மற்றும் 74 வயதான அந்தக் குடும்பத்தின் பாட்டி, ஆகியோர் சம்பவம் நடந்த இடத்திலேயே கொல்லப்பட்டதாகவும், இறந்து இந்த ஜோடியின் ஒன்பது வயது மகன் பயஸ் என்பவர் லண்டன் மருத்துவமனையில் பலத்த காயங்களோடு தொடர்ந்து கிசிக்சை அளிக்கப்படுகின்றார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளதுஇருக்கிறார்.

கிடைக்கப்பெற்ற விபரங்களின்படி, 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை, இரவு 8.00 மணியளவில் மேற்படி குடும்பத்தின் ஐந்து பேர் வடமேற்கு லண்டனில் ஒரு மாலை நடைப்பயணத்திற்கு வெளியே வந்தபோது, ஒரு கருப்பு டிரக் வீதியோரத்தில் காத்திருந்து வந்தது போன்று வெளியேறி, சிவப்பு விளக்கில் வீதியைக் கடக்கக் கூட்டமாகக் காத்திருந்த இந்தக் குடும்பத்தினர் மீது மோதிய பின்னர் மிகவும் வேகமாக அங்கிருந்து சென்றது என்றும் கொலைச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் பொலிசாரிடம் தெரிவித்துள்ளார்கள். அத்துடன் கனடா - லண்டன் நகரத்தின் வரலாற்றில் முதல் பயங்கரமான படுகொலையாகக் கருதக் கூடியது என்பதால் கனடா எங்கும் உள்ள இஸ்லாமிய சமூகத்தில் அச்சத்தை மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானில் இருந்து 14 ஆண்டுகளுக்கு முன்பு கனடாவுக்கு குடிபெயர்ந்ததாக இந்தக் குடும்பம் ஒரு சிறப்பான குடும்பமாக விளங்கியதாக அவர்களின் வீடுகளுக்கு அருகில் வாழும் அயலவர்கள் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இந்த சம்பவத்தை முஸ்லிம் சமூகத்தை நோக்கமாகக் கொண்ட ஒரு "பயங்கரவாத தாக்குதல்" என்று குறிப்பிட்டார்.



மேற்படி படுகொலைச் சம்பவத்திற்கு செவ்வாய் கிழமை கனடிய நாடாளுமன்றம் கூடிய போது அங்கு பிரதமர் பிரதான எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஆகியோர் உரையாற்றினர் பாராளுமன்றத்தில் உரையாற்றிய அனைவரும் "இது ஒரு பயங்கரவாத தாக்குதல், வெறுப்பால் தூண்டப்பட்டது, எங்கள் சமூகத்தின் பலரின் இதயங்கள் தகர்தெறியப்பட்டுள்ளன" என்று பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்கள் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

"இந்த நாட்டில் இனவெறி மற்றும் இனரீதியான வெறுப்பு இல்லை என்று யாராவது நினைத்தால், நான் இதைச் சொல்ல விரும்புகிறேன்: ஒரு மருத்துவமனையில் உள்ள ஒரு குழந்தைக்கு இதுபோன்ற வன்முறையை எவ்வாறு விளக்குவது?" என்றும் குறிப்பிட்டார்.

அன்று செவ்வாய்க்கிழமை 8ம் திகதி மாலை லண்டன் நகரில் உள்ள பிரதான இஸ்லாமிய பள்ளிவாசல் முன்றலில் நடைபெற்ற மாபெரும் இரங்கல் கூட்டத்தில் பிரதமர் பிரதான எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர ஆகியோரும் ஒன்றாரியோ மாகாண முதல்வர், ஒன்றாரியோ மாகாணத்தின் பிரதான எதிர்க்கட்சித் தலைவர், புதிய ஜனநாயகக் கட்சியின் த-லைவர், ஒன்றாரியோ லிபரல் கட்சியின் தலைவர், மற்றும் லண்டன் நகரத்தின் மேயர், லண்டன் பிராந்திய பொலிஸ் திணைக்களத்தின் த-லைவர், பல்வேறு இடங்களிலிருந்து கலந்து கொண்ட பள்ளிவாசல்களின் தலைமை பிரதிநிதிகள் மற்றும் பலர் அங்கு உரையாற்றினார்கள். ஆயிரக்கணக்கில் மக்கள் இன வேறுபாடு இன்றி கலந்து கொண்ட இந்த இரங்கல் நிகழ்வில் கனடிய பிரதமர் உட்பட அனைத்து அரசியல்வாதிகளும் நிகழ்வின் இறுதிவரையும் காத்திருந்து விடைபெற்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த படுகொலைச் சம்பவத்தை தொடர்ந்து கனடாவின் பல மாகாணங்களிலும் பெருந்தொகையாக வாழ்ந்து வரும் இஸ்லாமிய மக்கள் அதிர்ச்சியோடு காணப்பட்டார்கள் என்றும் தங்கள் உயிர்களை எவ்வாறு காப்பாற்றிக் கொள்வது என்பது அறியாமல் உள்ளோம் என்றும் அச்ச உணர்வோடு பேசிக் கொண்டார்கள் என்றும் செய்தியாளர்கள் அறிவித்துள்ளார்கள்.



இந்த கொலைச் சம்பவத்தில் இறந்தவர்களின் இறுதிக் கிரியைகள் சனிக்கிழமை பிற்பகலுக்கு பின்னர் இறுதி நடைபெறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளதாகவும், இதுவரையில் இனவாதத் தாக்குதல்களினால் கொல்லப்பட்ட இந்த குடும்பத்திற்கான கனடா தழுவிய நிதி சேகரிப்பில் சுமார் ஆறு இலட்சம் டாலர்கள் சேகரிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொலைச் சந்தேக நபர் மீது முதல் நிலை கொலை மற்றும் ஒரு கொலை முயற்சி ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன என்றும் நீதிமன்றத்தில் அவர் ஆஜர் செய்யப்பட்டபோது, தனக்காக வாதிடுவதற்கு அரசின் சார்பான தனது சட்டத்தரணிகளை ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று கேட்டுகொண்டதாகவும் அறியப்படுகின்றது.

குற்றம் சாட்டப்பட்டவரின் வழக்கறிஞர்கள் இந்த வழக்கை ஜூன் 17 அன்று நீதிமன்றத்திற்குத் திரும்பவும் விசாரணைக்கு எடுக்குமாறு கோரினர், ஆனால் அரச வழக்குரைஞர்கள் ஜூன் 14ம் திகதி வழக்கை விசாரணைக்கு கொண்டு வரவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். அதனை ஏற்றுக் கொண்ட நீதிபதி ஜூன் 14ம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார்.







பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# விரிவடையும் வெறுப்புணர்வு கனடாவின் கனிவையும் விழுங்கிடுமோ?

கனடா என்னும் இயற்கை வளங்கள் நிறைந்திருந்த தேசத்தில் மனித வளம் குன்றியிருந்த ஒரு காலத்தில் மக்கள் தொகையை அதிகரிப்பதற்காக வெளிநாட்டவர்களை வரவேற்கும் அரசியல் நெறி அறிமுகம் செய்யப்பட்டது. ஆரம்பத்தில் பல மேற்குலக நாடுகளிலிருந்து கனடாவிற்கு மக்கள் சிறிய எண்ணிக்கையில் குடியேறத் தொடங்கினார்கள்.

ஆனால் நாளடைவில் மனித வளத்தோடு தொழில் சார்ந்த நிபுணத்துவம், அறிவியல், ஆகிய துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கும் கனடாவின் கதவுகள் திறந்தேயிருந்தன. இவ்வாறான அரசியல் நெறியானது நேர்மையாகவும் நிதானமாகவும் கடைப்பிடிக்கப்பெற்றதனால் கனடா வளர்ச்சி கண்டது. புதியவர்களின் வருகையால் புத்துணர்வு பெற்றுது போன்று இந்த கனிவான தேசம் எழுந்து நிற்கத் தொடங்கியது.

தொடர்ச்சியாக இலங்கை இந்தியா, சோமாலியா, மற்றும் தென் அமெரிக்க நாடுகள் ஆகியவற்றில் தோன்றி இன முரண்பாடுகள், போராட்டங்கள் ஆகியவற்றால் அங்கிருந்து வெளியேறிய இலட்சக் கணக்கானவர்களை கனடா 'அரசியல் அகதிகள்' என்ற அங்கமாக ஏற்றுக்கொண்டு அவ்வாறு வந்தவர்களுக்கு 'புதுவாழ்வு' வழங்கியது.

இவ்வாறாக, வந்தாரை வரவேற்கும் நாடாக இருந்து உலகின் அனைத்து நாடுகளிலிருந்தும் வந்தவர்கள் அனைவரையும், அவர்களது மதம், இனம், பேசுகின்ற மொழி, நிறம், கலாச்சாரம், மத வழிபாடு, பண்பாடு போன்றவற்றை தடைக் கற்களாகப் பார்க்காமல், வரவேற்று உறைவிடம் வழங்கி உதவிய கனடாவில் இன்று உலகெங்கும் பின்பற்றப்படுகின்ற அனைத்து மதங்களின் ஆன்மிக அடையாளங்களும் எப்போதும் ஒளிர்ந்த கொண்டே இருக்கின்றன. அனைத்து மதங்களுக்கு சுதந்திரத்தை வழங்கி பார்க்கும் இடமெலலாம் பல்வேறு மதங்களின் வழிபாட்டுச் சின்னங்கள் எழுந்து நின்று தர்மத்தையும் சமாதானத்தையும் போதித்த வண்ணம் உள்ளன.

இவ்வாறாக உலகின் பார்வை படும் அளவிற்கு ஒரு சுதந்திர பூமியாகவும் தர்மத்தின் விளைநிலமாகவும் விளங்கிய நாம் வாழும் கனடிய மண்ணில் 'கரும்புள்ளிகள்' தோன்றி அனைவர் மனங்களிலும் கலக்கத்தை ஏற்படுத்தி அமைதி குன்றிய நிலை காணப்படுகின்றதை நாம் அவதானிக்கலாம்.

பல வருடங்களாக, கரிய மேகங்கள் சூழ்ந்த காட்சியை நாம் கனிவு நிறைந்த இந்த புண்ணிய பூமியின் காண வேண்டிய தேவை என்ன என்று பலரும் கேள்வி எழுப்பத் தொடங்கியுள்ளார்கள்.

ஓவ்வொரு மதத்திற்கும் ஒரு வரலாறு உண்டு. அதற்கென மரியாதை உண்டு, பெருமை உண்டு. அதனால் அந்த மதம் சார்ந்த மக்கள் ஆன்மீகத்தில் வளர்ச்சியடைந்து பின்னர் சமூக ரீதியாக வளர்ச்சியை எட்டுகின்றார்கள். இதனால் ஒரு குறிப்பிட்ட ஒரு மதத்தின் மீது வெறுப்படைய வேண்டிய அவசியம் ஏனையோர் மத்தியில் தோன்ற வேண்டிய அவசியமே இல்லை.

ஆனால் இந்த கனிவான கனடிய தேசத்தில் கடந்த சில வருடங்களாக இடம்பெற்று வரும் இஸ்லாமியர்களுக்கு எதிரான தாக்குதல்கள் மற்றும் வெறுப்புணர் போன்றவை அதிகரித்து கடந்த வாரம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரை பலியெடுத்துள்ளது. ஒரு பாலகனை அனாதையாக்கி விட்டது.

இதனால் நாட்டின் பிரதமர் தொடக்கம் மாநகரத்தின் மேயர் வரை அனைத்து அரசியல் தலைவர்களின் கண்களிலும் கண்ணீர் மல்கி நிற்பதைக் காண்கின்றோம். பாதிக்கப்பட்ட மக்களுக்காகவும் உயிர்களை இழந்து தவிக்கும் அந்த பாலகனுக்காகவும், அந்த குடும்பத்தின் நெருங்கிய நண்பர்களுக்கும் நாம் ஆறுதல் சொல்லி தேற்ற வேண்டியது எமது கடமை என்பதை உணர்வோம். அதற்காக தேவையான வழிகளில் நாம் இணைந்து நின்று எங்கள் கரங்களை அவர்களுக்காக நீட்டிடுவோம்.

# அமெரிக்க வரவாற்றில் முதற் தடவையாக ஒரு இஸ்லாமியர் ஒருவர் மத்திய நீதிமன்ற நீதிபதியான நியமனம்



நியூ ஜெர்சியில் உள்ள மாஜிஸ்திரேட் நீதிபதியாப பணியாற்றிய ஜாஹித் குரைசி என்பவரே, இவ்வாறாக ஒரு மத்திய நீதித்துறையின் உயர் பீடத்திற்கு ஜனாதிபதி ஜோ பிடென் அவர்களால் பரிந்துரைத்ததை

அமெரிக்க செனட் சபை நேற்று வியாழக்கிழமை ஒப்புதல் அளித்து, அவரை அமெரிக்க வரலாற்றில் முதல் இஸ்லாமிய மத்திய நீதிபதியாக ஏற்றுக்கொண்டுள்ளது

ஜனநாயகக் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள செனட் சபை 81-16 என்ற விகிதத்தில் வாக்களித்தது, இதன் மூலம் பாகிஸ்தான் நாட்டிலிருந்து குடியேறிய பெற்றோர்களின் மகனும், முன்னாள் மத்திய மற்றும் இராணுவ வழக்கறிஞருமான 46 வயதான குரைசியை இந்தப் பதவிக்கு உறுதிப்படுத்தினார் அமெரிக்க ஜனாதிபதி அவர்கள்.

அமெரிக்காவில் இஸ்லாமானது, மூன்றாவது பெரிய மதமாக இருந்தாலும், இதுவரை எந்த ஒரு இஸ்லாமியரும் கூட்டாட்சி நீதிமன்றில் பணியாற்றவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**Basement for Rent**

ஸ்காபுறோவில்
**Morningside / McNicoll** சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றில்
2 அறைகள் கொண்ட **Basement** உடனடியாக வாடகைக்கு உண்டு.
**Separate Entrance** உள்ளது.
1 parking வழங்கப்படும்.

விபரங்களுக்கு:
(416) 804-0231

**House for Rent**

ஸ்காபுறோவில்
**Morningside/ Sheppard** சந்திப்பிற்கு அருகில் உள்ள வீடு
யூலை 15ம் திகதி தொடக்கம் வாடகைக்கு உண்டு. 4 அறைகள் மற்றும் அனைத்து வசதிகளும் உண்டு.
**BASEMENT** இதில் அடங்காது.

மேலதிக விபரங்களுக்கு:
(416) 912-1572 அல்லது (416) 299-4904

**General Help தேவை**

ஸ்காபுறோவில் உள்ள தமிழர் நிறுவனம் ஒன்றுக்கு
**General Help** வேலைக்கு ஆட்கள் தேவை.
வாகனம் ஓட்டக் கூடிய லைசன்ஸ் வைத்திருப்பவர்கள் விரும்பத்தக்கது

Call: (416) 543-8170

**Help Wanted**

Full-time / Part-time sprayer & sander needed for a furniture finishing shop.

Call:
(416) 636-3655

**RBS BUSINESS CONSULTANCY**

24 JEFFTON CRES, TORONTO, ON, M1G2R5

SERVICES WE PROVIDE:
BUSINESS CONSULTING
BUSINESS PLAN WRITING
BUSINESS NAME REGISTRATION
OPEN CORPORATION
HST/ BIN/ PAYROLL NUMBER REGISTRATION
MASTER BUSINESS LICENSE
CORPORATE PROFILE REPORT
CORPORATION REVIVAL
CHANGE CORPORATION INFO
IMPORT/EXPORT BUSINESS REGISTRATION
NUANS SEARCH
PERSONAL TAX
FORM FILL-UP OF ANY KIND INCLUDING IMMIGRATION
ORDER CHEQUES

CALL:
RAMNEET SAMDHYAN
(437) 771-5294
FOR ANY QUESTIONS

**LOYAL PEST CONTROL**

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.

Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

RANJAN: (416) 464-2415

**COMPUTER REPAIR**

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

VARUNAN:
(416) 894-6244

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையில் பயணக் கட்டுப்பாடு நடைமுறையில் இருந்த நாட்களிலும் கோவிட் – 19 பரவுகை அதிகரித்தது

இலங்கையில் பயணக் கட்டுப்பாடு நடைமுறையில் இருந்த நாட்களிலும் கோவிட்-19 பரவுகை அதிகரித்தது தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சுகாதார அமைச்சர் ஆகியோர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விளக்கங்கள் கேட்டு கடிதங்கள் அனுப்பியுள்ளதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

கொவிட் 19 தொற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்துவதை நோக்காகக் கொண்டு பயணக் கட்டுப்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த மே மாதம் நடுப் பகுதி முதல் இப்பயணக் கட்டுப்பாடு அமுலில் இருந்து வருகின்றது. மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்த வகையில்தான் இக்கட்டுப்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன் பயனாக மக்களின் நடமாட்டங்களும் பயணங்களும் குறிப்பிடத்தக்களவில் குறைவடைந்துள்ளன. பெரும்பாலான மக்கள் பயணங்களையும் நடமாட்டங்களையும் தவிர்த்து வீடுகளிலேயே தங்கியுள்ளனர். பயணக் கட்டுப்பாடு மற்றும் தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறி செயற்படுபவர்கள் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதும் இதற்குக் காரணமாக அமைந்துள்ளது. கொவிட்-19 தொற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்துவதைப் பிரதான இலக்காகக் கொண்டுதான் இந்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆனால் கொவிட்-19 தொற்று பரவுதல் தவிர்ப்புக்கான பயணக் கட்டுப்பாடு நடைமுறையில் உள்ள இக்காலப் பகுதியில் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாகத் தினமும் பதிவாகின்றவர்களின் எண்ணிக்கை பெரிதும் அதிகரித்து காணப்படுகின்றது. அத்தோடு மரணங்களின் எண்ணிக்கையும் குறைந்ததாக இல்லை. இக்கட்டுப்பாட்டு முறை நடைமுறைக்கு வந்த பின்னரான ஒரு சில நாட்களில் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாகப் பதிவானவர்களின் எண்ணிக்கை முன்னொரு போதுமே இந்நாட்டில் பதிவாகாத அளவுக்கு உயர்வடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். தற்போது இத்தொற்றுக்கு உள்ளானவர்களாகப் பதிவாகின்றவர்களின் நாளாந்த எண்ணிக்கை சராசரியாக 2500-3500 இற்கு இடைப்பட்டதாகக் காணப்படுகின்றது.

மக்களின் பயணங்களையும் நடமாட்டங்களையும் கட்டுப்படுத்தி கொவிட்-19 தொற்று பரவுதலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டுள்ள இப்பயணக் கட்டுப்பாடு நடைமுறையில் இருக்கும் காலப் பகுதியில் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாகப் பதிவாகின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதை ஒரு சாதாரண விடயமாக நோக்க முடியாது. அந்த வகையில்தான் இவ்விடயம் சம்பந்தப்பட்ட எல்லா மட்டங்களதும் அவதானத்தைப் பெரிதும் பெற்று இருக்கின்றது.

தற்போதைய பயணக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின் ஊடாக மக்களின் பயணங்களும் நடமாட்டங்களும் குறைவடைந்துள்ள போதிலும், அவை முழுமையான கட்டுப்பாட்டு நிலையை அடையவில்லை என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இதன் விளைவாக கொவிட்-19 தொற்று தவிர்ப்பு தொடர்பில் கவனயீமாக நடந்து கொள்ளும் சந்தர்ப்பங்களும் ஏற்படவே செய்கின்றன.

ஆனால் வேகமாகப் பரவும் நோய் அச்சுறுத்தல் காணப்படும் சூழலில் அதன் பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரத் தரப்பினரும் அதிகாரிகளும் என்னதான் நடவடிக்கைகளை முன்னெடுத்தாலும் அதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும். மக்களின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் இன்றி எந்தவொரு தொற்று நோயையும் கட்டுப்படுத்த முடியாது. இதற்கு நிறையவே முன்னுதாரணங்கள் உள்ளன.

அதனால் இத்தொற்றின் பரவுதல் அச்சுறுத்தல் காணப்படும் தற்போதைய சூழலில் அத்தியாவசியமற்ற பயணங்களையும் நடமாட்டங்களையும் தவிர்த்துக் கொள்வதற்கு ஒவ்வொருவரும் அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும். அது தமக்காகவும் தம் சமூகத்திற்காகவும் நிறைவேற்றப்படும் பாரிய பொறுப்பாகக் கருதப்பட வேண்டும்.

அத்தியாவசியத் தேவைகளின் நிமித்தம் வீட்டிலிருந்து வெளியே செல்லும் போது முகக்கவசம் அணிந்து கொள்ளவும், செல்லும் இடங்களில் சமூக இடைவெளியைப் பேணிக் கொள்ளவும் கைகழுவவும் தவறக் கூடாது. முகக்கவசமானது கொவிட்-19 தொற்றைத் தவிர்த்துக் கொள்வதற்கான ஒரு முக்கிய சுகாதார வழிகாட்டலாகும். மாறாக முகக்கவசம் அணியா விட்டால் பொலிஸார் கைது செய்வர் என்பதற்காக அணியக் கூடிய ஒன்றல்ல அது. இதனை ஒவ்வொருவரும் புரிந்து கொண்டு செயற்படுவது அவசியம்.

இதேவேளை கொவிட்-19 தவிர்ப்புக்கான தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையும் தற்போது பரவலாக்கப்பட்டுள்ளது. இத்தொற்றின் தீவிரத்தன்மையை இத்தடுப்பூசி கட்டுப்படுத்தக் கூடியதாகும்.

ஆனால் இலங்கையின் அனைத்துப் பகுதியிலும், கோவிட்-19 தொடர்பான கட்டுப்பாடுகள் தகுந்த முறையில் பேணப்படவில்லை என்றும் இதனாலேயே நாடு முழுவதும் நோய்த் தொற்று அதிகமாகியுள்ளதாகவும் அனைத்து தரப்பினரும் விளக்கம் அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது

# கனடா – ரொரன்ரோ பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை அமைவதைக் கொண்டாடும் இணைவழி சந்திப்பு




சுமார் 3 வருடங்கள் சவால்கள் நிறைந்த ஒரு போராட்டக் களமாகத் தெரிந்த கனடா - ரொரன்ரோ பல்கலைக் கழக தமிழ் இருக்கைக்காக 3 மில்லியன் கனடிய டாலர்கள் சேகரிக்கும் திட்டம் இறுதியில் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பெற்றது.

அந்த இலக்கை அடைந்த வெற்றியோடு இனிமேல் "தமிழ் இருக்கை" நிறுவப்படுவதுதான் "பாக்கி" என்ற கட்டத்தை மேற்படி "தமிழ் இருக்கை குழு" எட்டியுள்ளது. இதற்காக உலகெங்கும் இருந்து தங்கள் நேசக்கரங்களை மட்டுமல்ல நிதி அன்பளிப்புக்களையும் நீட்டியிருந்தார்கள்.

தற்போது தமிழ் இருக்கை அமைவதைக் கொண்டாடும் இணைவழி சந்திப்பு ஒன்று எதிர்வரும் 12ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றார்கள்.

இந்த அழைப்பை கனடா - ரொரன்ரோ பல்கலைக் கழகத்தின் ஸ்காபுறோ வளாகத்தினர் மற்றும் தமிழ் இருக்கை குழுவினர் மற்றும் கனடிய தமிழர் பேரவையினர் ஆகியோர் இணைந்து விடுத்துள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**Professor Wisdom Tettey**
**Vice President, University of Toronto**
**Principal, University of Toronto Scarborough,**

**The Canadian Tamil Congress**
**&**
**The Tamil Chair Inc.**

cordially invite you to a special event in celebration of having reached our campaign goal to establish a Chair in Tamil Studies at the University of Toronto Scarborough Campus.

**Tamil Chair Campaign Celebration**

**Saturday, June 12th, 2021**
10:30 am - 1 pm EST

**Virtual Celebration**
Join us below

YouTube

Facebook

*"Honoring the Past, Inspiring The Future"*

கனடிய செய்திகள் Canadian News

# எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்காக காத்திருக்கும் ஒன்றாரியோ மக்களும் வர்த்தகர்களும்

எதிர்வரும் 11ம் திகதி வெள்ளிக்கிழமை என்னும் சிறந்த ஒரு பிரகாசமான நாளுக்காக கனடாவின் ஒன்ராறியோ மாகாண மக்களும் வர்த்தகர்களும் காத்திருப்பதாகவும் இதற்கான முக்கிய காரணம் ஒன்றாரியோ அரசு இந்த நாள் முதல் பல கட்டுப்பாடுகளை நீக்கி பல வர்த்தகச் செயற்பாடுகளை தொடர்வதற்கு அனுமதியளிக்கவுள்ளதே என்று ஒன்றாரியோ மாகாண பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் உதயன் ஆசிரிய பீடத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். இவர் தொடர்ந்து கூறுகையில் "இந்த வெள்ளிக்கிழமை முதல் ஒன்றாரியோ மாகாணத்தின் பொருளாதாரத்திற்கு மீண்டும் திறப்பு விழா நடைபெறுகின்றது" என்றும் நகைச்சுவையாகக் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில் "கடந்த மாதம் வெளியிடப்பட்ட மூன்று கட்ட திட்டத்தின் ஒரு பகுதியாக, ஒன்றிரியோ அரசாங்கம் உணவகங்களின் உள் பகுதி மற்றும் அத்தியாவசியமற்ற சில்லறை விற்பனையாளர்களையும் வாடிக்கையாளர்களை தங்கள் கடைகளில் 15 சதவீத விற்பனைத் திறனுடன் மீண்டும் திறக்க அனுமதியளிக்கின்றது.

மூன்றாவது அலைகளைத் தணிக்க ஏப்ரல் நடுப்பகுதியில் இருந்து ஒன்ராறியோ வணிகங்கள் பூட்டப்பட்டுள்ளன, ரொராண்டோ மற்றும் பீல் போன்ற கடுமையாகப் பாதிக்கப்பெற்ற பகுதிகளில் நவம்பர் பிற்பகுதியிலிருந்து கடும் பொது சுகாதார கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுள்ளன. வெள்ளிக்கிழமை மீண்டும் திறப்பது, ஜூலை 2ம் தேதி தொற்றுநோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான இரண்டு கட்டங்களுக்கு முந்தைய நகர்வுக்கு வழிவகுக்கிறது, முடி வெட்டுதல் மற்றும் பிற தனிப்பட்ட பராமரிப்பு சேவைகள் போன்ற வர்த்தக நிலையங்களும் மீண்டும் இயக்கப்படுகின்றன. கடந்த வாரம் ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் அவர்கள் தான் "எச்சரிக்கையுடன் நம்பிக்கையுடன்" இருப்பதாகவும் கூறினார், திட்டமிட்டதை விட அதற்கு முன்னதாக மாகாணத்தை திறக்க தற்போது அனைத்தும் சாதகமாக உள்ளன" என்றார் அவர்.



# எதிர்வரும் வெள்ளிக்கிழமை மீளத்திறக்கப்படவுள்ள ஒன்றாரியோ மாகாணத்தின் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் வெளியாகியுள்ளன

## Canada's Ontario to Move to Step One of Road Map to Reopen on June 11

### Improvements in Key Indicators Allowing Province to Begin the Safe and Gradual Lifting of Public Health Measures

June 07, 2021

TORONTO — Based on the provincewide vaccination rate and continuing improvements in key public health and health system indicators, the Ontario government, in consultation with the Chief Medical Officer of Health, will move the province into Step One of its Roadmap to Reopen at 12:01 a.m. on Friday, June 11, 2021.

"Thanks to the ongoing success of Team Ontario's vaccine rollout and the ongoing improvements in public health trends, we are able to enter step one of the Roadmap and begin to safely and cautiously lift restrictions," said Premier Doug Ford. "The only reason we're able to do so is because of the enormous sacrifices made by individuals, families and communities across Ontario. As we begin to enjoy the benefits of the first step in our roadmap like meeting friends on a patio or visiting your favourite local store, please do so safely by continuing to follow all public health guidelines."

In order to safely enter Step One of the Roadmap to Reopen, Ontario needed to have vaccinated 60 per cent of adults with at least one dose for two weeks or longer, ensuring the first dose offers a strong level of protection against COVID-19. As of June 6, 2021 at 8:00 p.m., 72 per cent of the 18+ population in Ontario had received at least one dose of a COVID-19 vaccine with over 10 million doses now having been administered.

Before entering Step One, the province also needed to see continued improvement in key public health and health system indicators. During the period of May 25 to 31, 2021, the provincial case rate decreased by 35.1 per cent. As of June 6, the number of patients with COVID-19 in ICUs is 497, including 31 patients from Manitoba, as compared to 687 two weeks ago. The province's situation is currently exceeding the best-case scenario presented in recent modelling, which indicated the province would reach below 1,000 new daily infections by June 30, 2021. The province expects these trends to continue over the coming days before entering Step One.

"Thanks to the tremendous efforts of every Ontarian, beginning June 11 we will be able to cautiously lift public health measures in the settings we know are safest," said Christine Elliott, Deputy Premier and Minister of Health. "While this is exciting news, as we move to enter Step One of Ontario's Roadmap it remains critical that all Ontarians continue to follow public health advice and roll up their sleeves to receive the vaccine."

Step One of the Roadmap focuses on the resumption of more outdoor activities with smaller crowds where risk of transmission is lower. It will also permit more limited indoor settings to be open, all with restrictions in place. In consultation with the Chief Medical Officer of Health, the Ontario government has amended Step One to also permit indoor religious services, rites and ceremonies, including wedding and funeral services limited to 15 per cent capacity.

Step One of the Roadmap to Reopen includes but is not limited to:

Outdoor social gatherings and organized public events with up to 10 people;
Outdoor religious services, rites, or ceremonies, including wedding services and funeral services, capped at the number of people that can maintain a physical distance of two metres;
Indoor religious services, rites, or ceremonies, including wedding services and funeral services permitted at up to 15 per cent capacity of the particular room;
Non-essential retail permitted at 15 per cent capacity, with no restrictions on the goods that can be sold;
Essential and other select retail permitted at 25 per cent capacity, with no restrictions on the goods that can be sold;
Outdoor dining with up to four people per table> with exceptions for larger households;
Outdoor fitness classes, outdoor groups in personal training and outdoor individual/team sport training to be permitted with up to 10 people, among other restrictions;
Day camps for children permitted to operate in a manner consistent with the safety guidelines for COVID-19 produced by the Office of the Chief Medical Officer of Health;
Overnight camping at campgrounds and campsites, including Ontario Parks, and short-term rentals;
Concert venues, theatres and cinemas may open outdoors for the purpose of rehearsing or performing a recorded or broadcasted concert, artistic event, theatrical performance or other performance with no more than 10 performers, among other restrictions;
Outdoor horse racing tracks and motor speedways permitted to operate without spectators; and
Outdoor attractions such as zoos, landmarks, historic sites, botanical gardens with capacity and other restrictions.
In addition, to support students who have worked incredibly hard throughout the pandemic, the government is enabling school boards for public and private elementary and high schools to invite students back for brief outdoor end-of-year celebration. Any in-person school year celebrations will need to meet specific requirements.

The province will remain in Step One for at least 21 days to evaluate any impacts on key public health and health system indicators. If at the end of the 21 days the province has vaccinated 70 per cent of adults with one dose and 20 per cent of adults with two doses and there are continued improvements in other key public health and health system indicators, the province will move to Step Two of the Roadmap.

All public health and workplace safety measures currently in place will remain in effect until the province moves to Step One on June 11, 2021 at 12:01 a.m. During this time, the government will continue to work with stakeholders on their reopening plans, including targeted measures for specific sectors, institutions and other settings to ensure that they have full awareness of when they can begin to safely reopen and how.

"While we have reached the point where we can safely move into Step One, now is not the time to get complacent," said Dr. David Williams, Chief Medical Officer of Health. "We must all remain vigilant, as the fight against COVID-19 is not over. By continuing to follow public health advice and measures we can continue to reduce transmission, safeguard health system capacity and save lives."

# கட்டுப்பாடு இல்லா ஊரடங்கு; கரோனா பரவ சிவப்புக் கம்பளம் விரிக்கக் கூடாது: ராமதாஸ் எச்சரிக்கை



இனி வரும் நாட்களிலும் ஊரடங்கு முழுமையாக கடைபிடிக்கப்படாவிட்டால் அடுத்த சில நாட்களில் தினசரி கரோனா தொற்றுகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் ஆபத்து இருப்பதை மறுக்க முடியாது, இதை அரசும், பொதுமக்களும் உணர வேண்டும். கரோனா ஆபத்திலிருந்து இன்னும் தமிழ்நாடு விடுபடவில்லை; இது கொண்டாட்டத்திற்கான நேரமும் அல்ல என ராமதாஸ் எச்சரித்துள்ளார்.இதுகுறித்து பாமக நிறுவனர் ராமதாஸ் விடுத்துள்ள எச்சரிக்கை: "தமிழ்நாட்டில் முழு ஊரடங்கு செயல்படுத்தப்படும் விதம் குறித்து சென்னை உயர்நீதிமன்றம் கடுமையான விமர்சனங்களை வெளிப்படுத்தியிருக்கிறது.

சென்னை உயர்நீதி மன்றத்தின் விமர்சனம் தமிழ்நாட்டு மக்கள் மீதான அக்கறை காரணமாக வெளியிடப்பட்ட பொறுப்பான கருத்துகளாகும். அவை வரவேற்கத்தக்கவை. தமிழ்நாட்டில் கரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக மே 10ஆம் தேதி முதல் இரு வாரங்களுக்கு தளர்வுகளுடன் கூடிய ஊரடங்கும், மே 24ஆம் நாள் முதல் இரு வாரங்களுக்கு தளர்வுகள் இல்லாத முழு ஊரடங்கும் நடைமுறைப்படுத்தப்பட்டன. ஜூன் 7ஆம் தேதி முதல் தளர்வுகளுடன் கூடிய ஊரடங்கு நடைமுறையில் இருந்து வருகிறது. ஆனால், தமிழ்நாட்டில் ஊரடங்கு என்ற ஒன்று நடைமுறையில் உள்ளதா? என்று சந்தேகிக்கும் அளவுக்கு சென்னையில் தொடங்கி கன்னியாகுமரி வரை அனைத்து நகரங்களிலும் பொதுமக்கள் இரு சக்கர ஊர்திகளிலும், மகிழுந்துகளிலும் சாலைகளில் வலம் வருவதை பார்க்க முடிகிறது. இதே வினாவைத் தான் உயர்நீதிமன்றமும் எழுப்பியிருக்கிறது.

சாலைகளில் பொதுமக்கள் கட்டுப்பாடின்றி நடமாடுவதைக் கட்டுப்படுத்தும்படி தமிழக அரசுக்கு உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஆணையிட்டிருக்கிறார். தமிழ்நாட்டில் கடந்த மாதம் 10ஆம் தேதியில் தொடங்கி இப்போது வரை ஒரு மாதத்திற்கும் கூடுதலாக ஊரடங்கு நடைமுறையில் இருந்தாலும் கூட, ஒரு நாள் கூட அது முறையாக செயல்படுத்தப்படவில்லை என்பதை தமிழக முதல்வரால் கூட மறுக்க முடியாது. ஊரடங்கு என்றால் தவிர்க்க முடியாத தருணத்தைத் தவிர வேறு எதற்காகவும் வெளியில் செல்லக்கூடாது. ஆனால், சென்னையில் அனைத்து சாலைகளிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த அனைத்து சாலைகளிலும் சிக்னல்கள் இயக்கப்படுகின்றன என்றால், அங்கு ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை நம்ப முடிகிறதா? சென்னையிலிருந்து பிற ஊர்களுக்கும், பிற ஊர்களில் இருந்து சென்னைக்கும் செல்வதற்காக இ பதிவு செய்ய ஒரே நேரத்தில் 60 லட்சம் பேர் விண்ணப்பித்ததால் அந்த வலைத்தளமே முடங்கி விட்டது என்பதிலிருந்தே தமிழ்நாட்டில் ஊரடங்கு எப்படி செயல்படுத்தப்படுகிறது? என்பதை அறிந்து கொள்ளலாம்.

சென்னையில் மே மாதத்தில் ஊரடங்கு அறிமுகம் செய்யப்பட்ட போது மளிகை மற்றும் காய்கறி கடைகள் 4 மணி நேரம் மட்டுமே இயங்க அனுமதிக்கப்பட்டது. முழு ஊரடங்கு தளர்த்தப்பட்ட பிறகு இப்போது காலை 6 மணி முதல் மாலை 5 மணி வரை பெரும்பாலான கடைகள் 11 மணி நேரம் திறக்க அனுமதிக்கப்பட்டு உள்ளன.இவை ஒருபுறமிருக்க தளர்வுகள் இல்லாத ஊரடங்கு காலத்தில் இயங்க அனுமதிக்கப்பட்ட மூவாயிரத்திற்கும் மேற்பட்ட நடமாடும் கடைகளும் செயல்படுகின்றன. அவ்வாறு இருக்கும் போது சாலைகளில் கூட்டம் கூட்டமாக பொதுமக்கள் நடமாடுவதையும், பயணிப்பதையும் எப்படி தடுக்க முடியும்?தில்லியில் தினசரி கரோனா தொற்றுகளின் எண்ணிக்கை 300 என்ற அளவில் குறைந்து விட்டது. கர்நாடகம், கேரளம் உள்ளிட்ட மாநிலங்களிலும் கரோனா தொற்றுகளின் எண்ணிக்கை தமிழ்நாட்டை விட குறைவாகத் தான் உள்ளன.

ஆனால், அந்த மாநிலங்களில் இன்னும் கடுமையான கட்டுப்பாடுகள் நடைமுறையில் உள்ளன. தமிழ்நாட்டிலும் அதே போன்ற கட்டுப்பாடுகள் இன்னும் சில வாரங்களுக்கு கடுமையாக செயல்படுத்தப்பட்டால் தான் கரோனா பரவலைக் கட்டுக்கும் கொண்டு வர முடியும். ஆனால், இதை அரசும் உணரவில்லை. பொதுமக்களும் புரிந்து கொள்ளவில்லை என்பது தான் வேதனை.தமிழ்நாட்டில் தினசரி கரோனாத் தொற்று 35,000 என்ற உச்சத்துக்கு சென்று, இப்போது அதில் பாதியாக குறைந்திருக்கிறது என்பது உண்மை தான். இது தான் அரைகுறை ஊரடங்கால் கிடைத்த அரைகுறை பலனாகும். கடந்த ஒரு மாதத்தில் ஊரடங்கு கடுமையாக செயல்படுத்தப்பட்டிருந்தால், கரோனா தொற்று பரவல் இப்போது கட்டுப்படுத்தப்பட்டிருக்கும். ஊரடங்கு முறையாக செயல்படுத்தப்படாததால் தான் தொற்று பரவலை இன்னும் கட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை.

இனி வரும் நாட்களிலும் ஊரடங்கு முழுமையாக கடைபிடிக்கப்படாவிட்டால் அடுத்த சில நாட்களில் தினசரி கரோனா தொற்றுகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் ஆபத்து இருப்பதை மறுக்க முடியாது. இதை அரசும், பொதுமக்களும் உணர வேண்டும். கரோனா ஆபத்திலிருந்து இன்னும் தமிழ்நாடு விடுபடவில்லை; இது கொண்டாட்டத்திற்கான நேரமும் அல்ல. தினசரி கரோனா தொற்றுகளின் எண்ணிக்கை 500க்கும் கீழாக குறைந்து விட்டாலும் கூட நாம் அபாயக் கட்டத்தை கடந்து விட்டதாக அர்த்தமல்ல.தமிழக மக்களில் 70%க்கும் கூடுதலானோருக்கு தடுப்பூசி போடப்பட்ட பிறகு தான் கரோனா ஆபத்திலிருந்து நாம் தப்பிக்க முடியும். அதற்கு இன்னும் பல மாதங்களோ, சில ஆண்டுகளோ ஆகலாம்.

அதுவரை ஊரடங்கு அறிவிக்கப்பட்டிருந்தாலும், இல்லா விட்டாலும் பொதுமக்கள் கட்டுப்பாட்டை கடைபிடிக்க வேண்டியது அவசியமாகும்.ஒரு சில வாரங்களுக்கு முன்பு வரை சென்னையில் லட்சங்களைக் கொட்டிக் கொடுத்தாலும் கூட, சிகிச்சை பெற மருத்துவமனைகளில் படுக்கைகள் இல்லாத நிலை இருந்ததை நாம் மறந்து விடக்கூடாது. ஊரடங்கை தமிழக அரசு கடுமையாக நடைமுறைப்படுத்தாததும், மக்கள் கடைபிடிக்காததும் கரோனாவுக்கு சிவப்புக் கம்பளம் விரிக்கும் செயலாகும். எனவே, தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதி ஊரடங்கை கடுமையாக செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல், தமிழ்நாட்டு மக்களும் தங்களின் பொறுப்பை உணர்ந்து தேவையின்றி வெளியில் செல்வதை தவிர்க்க வேண்டும். வெளியில் வந்தாலும் கண்டிப்பாக முகக்கவசம் அணிய வேண்டும்". இவ்வாறு ராமதாஸ் எச்சரித்துள்ளார்.

# ஜெயலலிதா வைத்திருந்ததுபோல மீண்டும் கட்சியை கொண்டு வருவோம்; அதிமுக நிர்வாகிகளுடன் தொடர்ந்து பேசும் சசிகலா உறுதி: கட்சி சிறப்பாக செயல்படுவதாக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் விளக்கம்

'ஜெயலலிதா அதிமுகவை எப்படி வைத்திருந்தாரோ, அதேபோல மீண்டும் கொண்டு வருவாம்' என்று முன்னாள் அமைச்சர் ஆனந்தனிடம் சசிகலா பேசியுள்ள நிலையில், சசிகலா இல்லாமல் அதிமுகசிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் அதிமுகவின் நிரந்தர பொதுச் செயலாளர் ஜெயலலிதாதான் என்றும் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் விளக்கம் அளித்துள்ளார். மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் தோழி சசிகலா, பெங்களூரு சிறையில் இருந்து விடுதலையாகி சென்னை வந்ததும்தீவிர அரசியலில் ஈடுபடப்போவதாகக் கூறினார். அதன்பின் கடந்த மார்ச் 3ம் தேதி தீவிர அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொள்வதாக அறிவித்தார்.

இந்நிலையில், கடந்த மே 29ம்தேதி திடீரென தொண்டர் ஒருவரை தொலைபேசியில் தொடர்பு கொண்ட சசிகலா, ''கரோனா முடிந்ததும் நான் வந்துவிடுவேன். கண்டிப்பாக கட்சியை சரி செய்துவிடுவேன்'' என்று பேசினார். இது பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், தற்போது தொடர்ந்து கட்சியினர் பலருடன் சசிகலா பேசி வருகிறார்.இந்நிலையில் நேற்று முன்தினம், ராமநாதபுரம் மாவட்ட எம்ஜிஆர் இளைஞரணி செயலாளர் வின்சென்ட் ராஜாவிடம் பேசினார். தொடர்ந்து, 1991ல் ஜெயலலிதா அமைச்சரவையில் பால் வளத்துறை அமைச்சராக இருந்த, உளுந்தூர்பேட்டையைச் சேர்ந்த ஆனந்தனிடம் நேற்று பேசினார். அப்போது அவர், '' நான் நிச்சயம் வருவேன். கவலைப்படாதீர்கள். நீங்கள் பழைய ஆட்கள். நான் எல்லோரிடமும் பேச ஆரம்பித்துவிட்டேன். கட்சி நம் கண்ணெதிரிலேயே இப்படி ஆகும்போது வருத்தமாக இருக்கிறது. கவலைப்படாதீர்கள்.

கட்சியை நன்றாக கொண்டு வரலாம். ஜெயலலிதா எப்படி கட்சியை




வைத்திருந்தார்களோ அதேபோன்று கொண்டு வரலாம்'' என்றார். அதேபோல, சசிகலாவிடம் சென்னை மாவட்ட அதிமுக பெண் நிர்வாகி தேவி பாண்டியன் பேசும்போது, ''கட்சியை இணைப்பது குறித்து ஏதேனும் திட்டம் வைத்துள்ளீர்களா? உங்கள் ரூபத்தில் ஜெயலலிதாவை பார்க்க ஆசைப்படுகிறோம். அவர் மாதிரியான ஆளுமை கட்சிக்கு வேண்டும். உண்மையான தொண்டர்களை தற்போது விரட்டிவிட்டனர். அதிமுக தோல்விக்கு காரணமே கட்சியின் தகவல் தொழில்நுட்ப பிரிவுதான். என்றைக்கு பழனிசாமி எனது தலைமையிலான அரசு என்று கூறினாரோ அன்றுடனே முடிந்துவிட்டது. மாவட்ட செயலாளர்கள் உண்மையாக உழைப்பவர்களை தள்ளிவைத்துள்ளனர்.

சினிமா நடிகைகள், உலக அழகிகளைத் தான் நிர்வாகிகளாக வைத்துள்ளனர். கொடிபிடித்த பெண்களை ஒதுக்கி வைத்துள்ளனர்'' என்று தனது மனக்குமுறலை வெளிப்படுத்தினார்.அதற்கு பதிலளித்த சசிகலா, ''எனக்கு வரும் கடிதங்களை பார்க்கும்போது மனசுக்கு மிகவும் கஷ்டமாக உள்ளது. தொண்டர்கள் வேதனையில் உள்ளனர். அனைவரது கஷ்டமும் தெரிகிறது. தலைவர் எம்ஜிஆர் காலத்திலும் ஜெயலலிதா காலத்திலும் கட்சியை மேன்மேலும் வளர்த்தோம். அதை பார்த்த நான் இந்த சூழலை பார்க்கும்போது மிகவும் மனது வருத்தமாகிறது. கவலைப்படாதீர்கள். நிச்சயம் சரி செய்யலாம். எல்லாவற்றையும் சரி செய்துவிடுவேன். தொண்டர்கள் என்கூட இருக்கும்போது யாரும் எதுவும் செய்ய முடியாது. தைரியமாக இருங்கள்'' என்றார்.இந்நிலையில் நேற்று காலை சென்னை டிஜிபி அலுவலகம் அருகில் செய்தியாளர்களை சந்தித்த முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமாரிடம், சசிகலா தொண்டர்களுடன் பேசுவது குறித்தும், அவர் பொதுச் செயலாளராக இருக்கிறாரா என்றும் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு அவர் பதிலளித்ததாவது: எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி, முதல்வராக இருந்தபோது டெல்லியில் செய்தியாளர்களிடம் சசிகலாவை கட்சியில் சேர்க்க 100 சதவீதம் வாய்ப்பில்லை என்று தெரிவித்துவிட்டார். துணை ஒருங்கிணைப்பாளர் கே.பி.முனுசாமியும் சசிகலா கட்சியில் தற்போதுஇல்லை என்றும், அவர் பேசியதும் அதிமுக கட்சியினரிடம் இல்லை என்றும் கூறிவிட்டார். அதிமுக தலைமை அலுவலகத்துக்கு சமீபத்தில் வந்த எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி,' சசிகலாவுக்கும் அதிமுகவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை' என்று கூறிவிட்டார். அதிமுகவைப் பொறுத்தவரை சசிகலா இல்லாமல் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்த நிலை எப்போதும் தொடரும். அதிமுக பெயரும், இரட்டை இலை சின்னமும் ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் தலைமையிலான கட்சிக்குத்தான் என்றுஉச்ச நீதிமன்றமே தீர்ப்பளித்துவிட்டது. எங்களுக்கு நிரந்தர பொதுச் செயலாளர் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாதான். அந்த பதவி அப்படியேதான் உள்ளது. பொதுச்செயலாளர் தேர்வு இல்லை. இவ்வாறு அவர் பதிலளித்தார்.

இந்தியா செய்திகள்
India News

# இந்திய வீரர் விராட் கோலி நல்ல பந்து வீச்சுகளுக்கு மரியாதை அளிப்பவர் என்கிறார் ஆப்கானிஸ்த்தான் சுழற்பந்து வீச்சாளர் ரசீட் கான்



இந்தியாவின் விராட் கோலி நல்ல பந்து வீச்சுகளுக்கு மரியாதை அளிக்கும் திறன் கொண்டவர். அவரது கிறிக்கெட்ட ஆட்டத்தின் வெற்றிக்கு காரணம், அவர் ஒருபோதும் பந்து வீச்சின் தரத்தைப் தீர்மானிக்காமல் தனது ஆட்டத்தின் செயல்முறையிலிருந்து விலகுவதில்லை.

லெக்-ஸ்பின்னர் ஆற்றல் கொண்ட கோஹ்லியின் வலுவான வழக்கம் என்னவென்றால், அவர் தான் ஆடும் போது தனது ஆற்றல்களில் நம்பிக்கை வைத்திருக்கிறார், மேலும் அவர் நம்பிக்கையற்ற வகையில் தன்னை "நோக்கி வரும் பந்து வீச்சுகளுக்கு பதிலளிக்க மாட்டாடர்" என்றார் ஆப்கானிஸ்த்தான் சுழற்பந்து வீச்சாளர் ரசீட் கான். யுரியுப் இணையத்தளத்திற்கு அளித்த ஒரு விசேட பேட்டியிலேயே ரசீட் கான் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேற்படி பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, "விராட் கோலியிடம் நான் பல சிறப்புக்களையும் அதே வேளை எதிர்மறையான குணாம்சங்களையும் கண்டுள்ளேன். வேறு எந்த பேட்ஸ்மேன இருந்தால், நீங்கள் அவருக்கு சிறந்த முறையில் பந்து வீசினால் அவர் மன அழுத்தத்திற்கு ஆளாகி விடுவார் ஆனால் விராட் கோலி அப்படியல்ல. சிறந்த பந்து வீச்சுக்களை ரசிக்கும் தன்மை கொண்டவர். அதனால் தான் அவ்வாறான பந்து வீச்சுகளையும் அவரால் தோற்கடிக்க முடிகின்றது.

மேலும், எப்போதும் விராட் அவர்கள் தனது சொந்த செயல்முறையைத்தான் பின்பற்றுவார். வேறு எவருமைய ஆட்டத்தை பின்பற்ற மாட்டார். அவர் மைதானங்களில் தான் தனது கிறிக்கெட் ஆட்டத்தையும் எவ்வாறு பந்து வீச்சுக்கு பதிலடி கொடுக்க வேண்டும் என்பதை தனது சொந்த அனுபவங்களின் மூலம் தான் கற்றுக்கொண்டார். இதை விட அவர் வேறு எதுவும் செய்யவில்லை. அதனால்தான் அவர் மிகவும் வெற்றிகரமானவராக பிரகாசிக்கின்றார்" என்று நான் நினைக்கிறேன். அவருக்கு ஒரு செயல்முறை உள்ளது.



"அவர் நல்ல பந்துகளை மதிப்பார். சற்று தளர்வான பந்து வீச்சுக்களுக்கு பலிலடி கொடுத்து பந்து வீச்சாளர்களைத் தண்டிப்பார். விராட் கோலிக்கு மிகுந்த தன்னம்பிக்கை உள்ளது. சில ஆட்டக் காரர்களுக்கு (பேட்ஸ்மேன்களுக்கு) தன்னம்பிக்கை இல்லை. அதனால்தான் அவர்கள் போராடுகிறார்கள். பல தடவைக-ளில் தோல்வியை தழுவ வேண்டியுள்ளது. அவர்களால் பிரகாசிக்க முடியாமல் உள்ளது. விராட் கோலி வித்தியாசமானவர். அவர் தனது சொந்த பலத்தை நம்புகிறார்" என்று ரிசாட் மேலும் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் இந்திய வீரர் தோனி பற்றியும் குறிப்பிட்டார்.: "ஏம்.எஸ். தோனியோடு நான் மைதானத்தில் ந விளையாடும் ஒரு கனவு எனக்கு இருக்கிறது. ஏனென்றால் அவருடன் விளையாடும் அனுபவம் அவருக்கு மிகவும் முக்கியமானது. ஒரு பந்து வீச்சாளரைப் பொறுத்தவரை விக்கெட் கீப்பரின் பங்கு மிகவும் முக்கியமானது, மேலும் அவரை விட சிறந்தவர் வேறு யாருமில்லை என்று நான் நினைக்கின்றேன்" என்றார் ரசீட் கான்.

# சென்னை போக்குவரத்துகூடுதல் ஆணையாளராக பிரதிப்குமார் அவர்கள் இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.



சென்னை பெருநகர காவல், போக்குவரத்துகூடுதல் ஆணையாளராக பிரதிப்குமார், இ.கா.ப., அவர்கள் 05.06.2021 சனிக்கிழமை அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். காவல்துறையில் நீண்ட நாள் அனுபவமும் நற்பெயரும் கொண்ட இவரது வருகை சென்னை பெருநகரத்தில் போக்குவரத்துத்துப் பிரிவில் பணியாற்றும் கனிஸ்ட நிலை காவல் துறை உத்தியோகத்தர்களுக்கு உற்சாகத்தைத் தந்துள்ளதாக எமது சென்னைச் செய்தியாளர் அறிவித்துள்ளார்.





# தாயகத்தில் அரைச்சமூக முடக்கமும் தமிழ் அரசியல்வாதிகளும்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

கிளிநொச்சியைச் சேர்ந்த ஓர் ஊடகவியலாளர் சொன்னார். திரு நகரிலும் உதய நகரிலும் 2 கொரோனாச் சந்தைகள் இயங்குவதாக. பிரதான சந்தைகள் மூடப்பட்ட காரணத்தால் தற்காலிக கள்ளச் சந்தைகளாக இவைகள் இயங்குவதாகவும் அவர் தெரிவித்தார். சிலசமயங்களில் உதயநகர் சந்தையில் படைத்தரப்பும் வாகனத்தை நிறுத்திவிட்டு பொருள் வாங்குவதை தான் கண்டதாகவும் சொன்னார்.

இதைப்போலவே யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஓர் ஊடகவியலாளர் சொன்னார் கொக்குவில் இந்து பள்ளிக்கூடத்தின் மைதான வீதியில் காலை வேளைகளில் ஒரு மீன் சந்தை இயங்குவதாகவும் அது மிகவும் நெரிசலான ஒரு சந்தை என்றும். யாழ்ப்பாணம் பாசையூர் சந்தையும் இயங்குகிறது. இடையில் போலீசாரோடு சில முரண்பாடுகள் வந்தன. வழமையான நாட்களோடு ஒப்பிடுகையில் சனத்தொகை குறைவு என்றாலும் அதுவும் ஒரு சனத்திரட்சிதான்.

இப்படித்தான் யாழ் திருநெல்வேலி சந்தையும் அயலில் இருக்கும் உள் வீதிகளில் சிதறி இயங்குகிறது. இடைக்கிடை போலீசார் பாய்வார்கள். எனினும் போலீசாரை கண்டதும் மூடி போலீசார் போனதும் திறந்து ஆங்காங்கே வீதியோரங்களிலும் வீடுகளுக்குள்ளேயே சிறு சிறு சந்தைகள் இயங்குகின்றன.

யாழ் பருத்தித்துறை வீதியிலும் தோட்டக் காணிகள் அதிகமுள்ள பகுதிகளில் குறிப்பாக புத்தூர் பகுதியில் வீடுகளுக்குள் சந்தைகள் இயங்குவதாக ஒரு செய்தியாளர் தெரிவித்தார்.

மேற்படி உத்தியோகபற்றற்ற சிறிய சந்தைகள் யாவும் அவற்றின் விளைவுகளை கருதிக் கூறின் மெய்யான பொருளில் கொரோனாத் தொற்றுச் சந்தைகளே என்று ஒரு நண்பர் கூறினார். ஏனெனில் இந்த சிறு சிறு சந்தைகள் யாவும் சில சமயங்களில் வைரஸ் தொற்றுக் கொத்தணிகளாக மாறக்கூடிய வாய்ப்பு உண்டு என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கண்டி வீதியில் போய் நின்று பார்த்தால் தெரியும் டிப்பர்கள் வழமைபோல ஓடுகின்றன. இது இப்பொழுது மட்டுமல்ல உலகத்தொற்றுநோய் பீடித்த நாட்களிலிருந்து எல்லா தொற்றலைகளின் போதும் எல்லா சமூக முடக்கங்களின் போதும் கண்டி வீதி பெருமளவுக்கு பொது சன நடமாட்டம் இன்றி வெறிச்சோடிக் கிடந்த நாட்கள் எல்லாவற்றிலும் டிப்பர்கள் மட்டும் போவதை-யும் வருவதையும் காணலாம். பூநகரி வீதியிலும் அப்படித்தான்.

ஒரு பெரும் தொற்றுநோய் காலத்திலும் கிளிநொச்சியில் அக்கராயனில் மரங்களை வெட்டி மண் அகழப்படுவதாக கிளிநொச்சியை மையமாகக்கொண்ட முன் சொன்ன ஊடகவியலாளர் தெரிவித்தார்.

அரசாங்கம் அத்தியாவசிய தேவைகள் என்று சொல்லி ஒரு தொகுதி சேவைகளை பட்டியலிட்டிருக்கிறது. அதன் பிரகாரம் மீன் பிடிக்கலாம் வேளாண்மை செய்யலாம். அப்படியென்றால் பிடித்த மீனை எங்கே எப்படி விற்பது? விவசாய விளைபொருட்களை எங்கு எப்படி விற்பது? இது விடயத்தில் அரசாங்கம் நடமாடும் வியாபாரிகளை அனுமதித்திருக்கிறது. நடமாடும் வியாபாரிகள் ஆங்காங்கே உள் வீதிகளில் சில இடங்களில் வீதியோரங்களில் நின்று சிறு சந்தைகளை திறந்து விடுகிறார்கள்.

இதுதான் தமிழ் பகுதிகளில் பயணத் தடை அல்லது சமூகமுடக்கத்தின் தொகுக்கப்பட்ட சித்திரமாகும். அப்படியென்றால் இந்த பயணத்தடை அல்லது சமூகமுடக்கத்தின் நோக்கம் என்ன? அல்லது இதை மாற்றியும் கேட்கலாம் அரசாங்கம் சமூகத்தை முழுமையாக முடக்கத் தயார் இல்லையா? அதனால்தான் உத்தியோகபற்றற்ற விதங்களில் சிதறிப்போன சிறிய சந்தைகளை அல்லது கொரோனா சந்தைகளை கண்டும் காணாமல் விடுகிறதா?

ஆம். அரசாங்கம், பயணத்தடையையும் சமூக முடக்கத்தையும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கத் தயங்குகின்றது. முடக்க நாட்களைக்கூட ஒரேயடியாக அறிவிக்காமல் கட்டங்கட்டமாக அறிவித்து ஒரு முடக்க காலம் முடியும்போது அதைதொடர்ந்து அடுத்த கட்ட முடக்கத்தை அரசாங்கம் நீடிக்கிறது. இதனால் பாதிக்கப்படுவது சாதாரண ஜனங்கள் தான். அவர்கள் பொருட்களைத் தேடி வீதிக்கு வருகிறார்கள். பிரதான சாலைகளில் தடைகளை ஏற்படுத்தி படையினரும் போலீசாரும் நிற்கிறார்கள். சிலவேளைகளில் பயணத் தடையை மீறி வருகிறவர்களை அடிக்கவும் செய்கிறார்கள். ஆனால் உட்தெருக்களில் வாழ்க்கை வழமைபோல இயங்குகிறது.

அப்படியென்றால் இதை முழுமையான சமூகமுடக்கம் என்றோ முழுமையான பயணத்தடை என்றோ அழைக்கலாமா? இல்லை. அவ்வாறு முழுமையாக சமூகத்தை முடக்கினால் பொருளாதார ரீதியாக வரக்கூடிய விளைவுகளையிட்டு அரசாங்கம் அதிகம் சிந்திப்பதாக தெரிகிறது. இதனால் உத்தியோகபற்றற்ற விதத்தில் ஒரு அரைச் சமூகமுடக்கமே நடைமுறையில் உள்ளது. இதனால் அதிகம் பாதிக்கப்படுவது அன்றாடம் காய்ச்சிகளும் கீழ் மத்தியதர வர்க்கத்தை சேர்ந்தவர்களும்தான்.

பெருநகரங்களில் இருப்பதைப்போல ஒண்லைன் வினியோகத்துக்கான வலைப்பின்னல்கள் தமிழ் மக்கள் மத்தியில் பலமாக இல்லை. இதனால் ஒண்லைன் வினியோகம் எனப்படுவது சீரானதாக இல்லை. அதிலும் குறிப்பாக சில பூட் சிற்றிகளின் இலக்கங்கள் மக்களுக்கு தரப்பட்டன. ஆனால் அந்த இலக்கங்களுக்கு அழைத்தால் பதில் கிடைப்பதில்லை என்று சனங்கள் முறையிடுகிறார்கள். எனவே ஒருபுறம் உற்பத்தியை அனுமதித்துவிட்டு இன்னொருபுறம் சந்தைகளை மூடுவதன் மூலம் அரசாங்கமே உத்தியோகபற்றற்ற விதமாக உள்ளூரில் சிதறிய சிறிய சந்தைகளை ஊக்குவிக்கின்றதா?

இந்த வாரம் சில தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சில விடயங்களை சுட்டிக்காட்டிப் பேசியிருகிறார்கள். இது தவிர தமிழ்க்கட்சிகள் ஆங்காங்கே நிவாரணம் வழங்குவதையும் காண முடிகிறது. எனினும் முன்னைய கொரோனா தொற்று அலைகளோடு ஒப்பிடுகையில் இம்முறை புலம்பெயர்ந்த தமிழ் தரப்பின் ஈடுபாடு குறைவாகவே காணப்படுகிறது. லண்டனைச் சேர்ந்த சில புலம்பெயந்த தமிழர்கள் தமிழ்ப்பகுதிகளுக்கு பி.சி. ஆர். கருவிகளை வழங்க முன்வந்ததாக தெரிகிறது. ஆனால் அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது. முதலாவது தொற்றலையின் போது பெருமளவுக்கு அள்ளிக்கொடுத்த புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம் பிந்திய அலைகளின் போது அந்தளவுக்கு உதவவில்லை என்று தெரிகிறது. அதுபோலவே கட்சிகளும் தன்னார்வ நிறுவனங்களும் முதலாவது அலையின்போது உதவிய அளவுக்கு பின்வந்த அலைகளில் உதவவில்லை. சமூகமுடக்கம் ஒரு பழகிப்போன விடயமாக மாறிவிட்டது இதற்கொரு காரணம். ஆனால் இதனால் பாதிக்கப்படுவது அன்றாடம் காய்ச்சிகள்தான்.

இதுதொடர்பில் அரசியல்வாதிகளும் கட்சிகளும் அரசியல் செயற்பாட்டாளர்களும் சமூக செயற்பாட்டாளர்களும் குறிப்பாக சிவில் சமூகங்களும் ஊடகங்களும் மத நிறுவனங்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய ஒரு தேவை இருக்கிறது. ஆனால் அவற்றை யார் ஒன்றிணைப்பது? அதைச் செய்யவேண்டியது தமிழ் கட்சிகள்தான் தமிழ்மக்களுடைய பிரதிநிதிகள்தான். ஆனால் அவர்களில் அனேகர் நாடாளுமன்றத்தில் உரையாற்றுவது அல்லது தெரிந்தெடுக்கப்பட்ட சில இடங்களுக்கு நிவாரணம் வழங்குவது என்பவற்றுக்கும் அப்பால் சமூகத்திற்கு வழிநடத்த வேண்டிய தமது பொறுப்புகளிலிருந்தும் தவறுகிறார்கள் என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

சமூகமுடக்க காலத்தில் அரசாங்கத்தின் கைகளிலேயே எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு சாதாரண ஜனங்களோடு சேர்ந்து முடங்கிப் போவதற்கு மக்கள் பிரதிநிதிகள் தேவையில்லை. சமூகம் முடக்கப்பட்டிருக்கும் ஒரு காலகட்டத்தில் தெருவில் இறங்கி தமக்கு இருக்கக்கூடிய சிறப்புரிமையை பயன்படுத்தி ஏதோ ஒரு விதத்தில் சமூகத்துக்கு விழிப்பூட்ட வேண்டியது தமிழ் அரசியல்வாதிகளும் மக்கள் பிரதிநிதிகளும்தான். ஆனால் எத்தனை பேர் அதை செய்கிறார்கள்? அல்லது அவர்களால் ஏன் அப்படிச் செய்ய முடியவில்லை என்றும் கேட்கலாம்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றுவது நல்லதுதான். நிவாரணம் வழங்குவதும் தேவைதான். ஆனால் அதற்குமப்பால் ஒருபெரும் தொற்றுநோயிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளுமாறு தமிழ் மக்களுக்கு விழிப்பூட்ட வேண்டும். அதை சுகாதாரத்துறையும் தமிழ் அரசியல்வாதிகளும் அரசியல் செயற்பாட்டாளர்களும் சிவில் சமூகங்களும் மத நிறுவனங்களும் ஒன்றிணைந்து செய்ய வேண்டும். அப்படி ஒரு ஒன்றிணைவை சமூகத்தில் காணமுடியவில்லை.

ஒரு சமூகமுடக்க காலத்தில் மக்களுக்கு எப்படி விழிப்பூட்டுவது என்று கேட்கலாம். இங்கேதான் ஒரு முக்கியமான விடயத்தை சுட்டிக்காட்ட வேண்டும். கட்சிகளுக்கு உள்ளூர் வலையமைப்புகள் பலமாக இருந்தால் அதன் மூலம் அந்த விழிப்புணர்வைச் செய்யலாம். உள்ளூர் சந்தைகள் இயங்கலாம் என்றால் உள்ளூர் கடைகளைத் திறக்கலாம் என்றால் உள்ளூரில் வாழ்க்கை வழமைபோல இயங்கலாம் என்றால் ஏன் உள்ளூர் வலையமைப்புக்கள் ஊடாக மக்களுக்கு விழிப்பூட்டக்கூடாது?

ஆனால் இங்குள்ள பாரதூரமான வெற்றிடம் என்னவென்றால் கட்சிகளிடம் அப்படிப்பட்ட உள்ளூர் வலையமைப்புகள் பலமாக இல்லை என்பதோடு கட்சித் தலைவர்களிடமும் இது தொடர்பில் தெளிவான தரிசனம் இல்லை என்பதுதான். அவர்கள் தமிழ் அரசியல் என்று விளங்கி வைத்திருப்பது நாடாளுமன்றத்தில் முழங்குவது அல்லது அனர்த்த காலத்தில் நிவாரணம் வழங்குவது. இவற்றுக்கும் அப்பால் ஒரு சமூக விழிப்பை ஏற்படுத்தி வேண்டிய பொறுப்பை குறிப்பாக சமூக முடக்கம் ஒன்றில் சமூகத்திற்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்பை எத்தனை தலைவர்கள் உணர்ந்து வைத்திருக்கிறார்கள்?

தமிழ்ச் சமூகத்தை உள்ளூர் உற்பத்திகளை நோக்கியும் வீட்டுத் தோட்டங்களை நோக்கியும் சுத்தமான காற்று சுத்தமான மரக்கறி உடற்பயிற்சி போன்றவற்றை நோக்கியும் ஊக்குவித்து வழிநடத்தி ஒருங்கிணைக்க வேண்டிய ஒரு பொறுப்பு தமிழ் அரசியல்வாதிகளுக்கு இல்லையா? மிகக்குறிப்பாக நோய்த்தொற்றுச் சங்கிலியை உடைக்கும் விதத்தில் சமூக நெருக்கத்தை சமூகத்திரட்சியை உள்ளூர்ச் சந்தைகளை எப்படித் தவிர்க்கலாம்? எப்படி தற்காப்புணர்வோடு நடந்து கொள்ளலாம்? என்பதை குறித்து மக்களுக்கு விழிப்பூட்ட வேண்டியது உள்ளூர் தலைவர்கள் தான்உள்ளூர் தொண்டர்கள்தான். மேலும் தடுப்பூசி தொடர்பாக தமிழ் மக்கள் மத்தியில் ஒருவித தயக்கம் உண்டு. அந்த தயக்கத்தை நீக்கி தடுப்பூசியை ஏற்றுக்கொள்ளும் ஒரு கூட்டு உளவியலை உருவாக்க வேண்டிய பொறுப்பு தமிழ் அரசியல்வாதிகளுக்கு இல்லையா?

இதுவிடயத்தில் சில கிழமைகளுக்கு முன் விக்னேஸ்வரன் ஓர் அறிக்கை விட்டிருந்தார். அதிலவர் வடக்கு கிழக்கிற்கு தடுப்பூசிகளை வழங்குமாறு இந்தியாவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். அது ஒரு வேண்டுகோள் மட்டுமே. அதற்குமப்பால் தடுப்பூசி ஒரு பொருத்தமான தற்காப்பு நடைமுறை என்பதனை மக்களுக்கு தெரியப்படுத்தி மக்களை விழிப்பூட்ட வேண்டிய பொறுப்பு அரசியல்வாதிகளுக்கு இல்லையா? நிவாரண அரசியலுக்குமப்பால் தமிழ்த்தேசிய அரசியலில் செயற்பாட்டு வெளி என்பது கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக தொடர்ந்து வெற்றிடமாகவே இருப்பதைத்தான் ஆகப்பிந்திய கொரோனாத் தொற்றலையும் நிரூபிக்கின்றதா?

**வீணாவின் கவிக்கணை**

தீர்க்கவே முடியாத
பிரச்சனையென்றோ!
தீரவே தீராத துன்பமென்றோ!
இவ்வுலகில் ஒன்றுமே இல்லை,
உறுதியான முடிவுகளை
எடுக்கும் மனமும்,
எடுத்த முடிவை கடைசிவரை
திடமாக காக்கும் தைரியமும்,
மட்டும் இருந்தாலே போதும்,
எதையும் எளிதில்
தீர்த்திடலாம்!
இனிதே வாழ்ந்திடலாம்!

கனடிய செய்திகள்
Canadian News

# கனடா ஒன்றாரியோ மாகாணத்தில் 9ஆம் வகுப்பு புதிய கணித பாடத்திட்டம் அறிமுகமாகின்றது

அனைத்து மாணவர்களும் கல்வியில் சிறந்து விளங்குவதற்கும் வெற்றி பெறவதற்கும் தேவையான திறமையையும் நம்பிக்கையையும் வளர்த்துக்கொள்வதை உறுதிப்படுத்துவதற்கு வேண்டிய புதிய 9ஆம் வகுப்புக்கான கணித பாடத்தினை கல்வி அமைச்சர் ஸ்டீபன் செச்சே வெளியிட்டு வைப்பதாக அறிவித்தார். வருகின்ற செப்டெம்பரில் வரவிருக்கும் மேற்படி புதிய பாடத்திட்டமானது, குறிப்பாக பின்வருவனவற்றில் மாணவர்களின் வாழ்க்கைக்கு உகந்த கற்றல் வாய்ப்புகளை வழங்கும் நோக்கத்தினைக் கொண்டிருப்பதுடன், வேலைவாய்ப்புகளில் அவர்களின் வெற்றிக்கும் உறுதுணையாக அமையும்:

- குறியீட்டு முறை, தரவுகளின் அடிப்படையிலான கல்வியறிவு, கணித மாதிரிகள் மற்றும் நிதியியல் தொடர்பான கல்வியறிவு போன்றன புதிய பாடத்திட்டத்தின்படி கட்டாயமாக அமையவுள்ளன.

- 9ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இதுவரையும் பயன்பாட்டுக் கல்வி மற்றும் படிப்பில் நடைமுறையிலிருந்த streaming முறைமை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இம்முறைமையானது கடந்த காலத்தில் சில மாணவர்களுக்கு பாதகமானதாக அமைந்திருந்தது.

இப்புதிய பாடத்திட்டம் ஒன்றாறியோவில் உள்ள மாணவர்கள் கடந்த ஒரு தசாப்த காலத்தில் எதிர்கொண்ட பின்னடைவினைச் சரிசெய்வதற்காக அரசாங்கத்தினால் போடப்பட்டுள்ள அடுத்த நான்கு ஆண்டுக்கான 200 மில்லியன் டொலர் கணிதத்துக்கான மூலதனத்தின் அடுத்த கட்டமாகும். கோடைகால கற்பித்தல், பயிற்சி மற்றும் கல்வியாளர்களுக்கான பயிற்சி, அவற்றுக்கான உபகரங்களுக்கான வளங்களை அளிப்பது போன்றவை உட்பட கணிதக் கல்விக்கான மேலதிக நிதியினை அரசாங்கம் அளித்துள்ளது.

ஒன்றாரியோ கல்வி அமைச்சரின் *இந்த அறிவிப்பை உதயன் ஆசிரிய பீடத்திற்கு அனுப்பிவைத்தவர் விஜய் தணிகாசலம், மாநில சட்டமன்ற உறுப்பினர், ஸ்காபரோ - றூஜ் பார்க்*



# கனடா – ஒன்ராறியோ மாகாணம் இன்று வெள்ளி தொடக்கம் மீளியங்கு நிலைக்குத் திரும்பும் முதலாவது கட்டத்துக்கு செல்கிறது



கனடாவில் மாகாண அளவில் வழங்கப்பட்டுள்ள தடுப்பூசி வீதம் மற்றும் கிடைக்கப்பெற்றுள்ள பொது சுகாதார தரவுகளின் முன்னேற்றங்களின் அடிப்படையிலும், ஒன்றாரியோ மாகாணத்தின் சுகாதார தலைமை அதிகாரிகாரியுடனான ஆலோசனையின் பின்னர் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையிலும். இன்று வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12:01 மணிக்கு ஒன்றாறியோ அரசாங்கம் மாகாணத்தின் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முதலாம் கட்ட நிலைக்கு செல்லவுள்ளது.

இத்திட்டத்தின்படி, இதன் முதற்கட்டத்தின் ஒரு பகுதியாக நோய்ப்பரம்பலுக்கான சாத்தியக்கூறுகள் குறைவாகக் காணப்படும் வெளிப்புற நடவடிக்கைகள் மற்றும் வெளியரங்குகளில் சிறு அளவிலான ஒன்றுகூடல்களை மீண்டும் ஆரம்பிப்பதில் கவனம் செலுத்தப்படும். அத்துடன் கட்டுப்பாடுகளுடன்கூடிய வரையறைகளுக்கு உட்பட்டு உள்ளக இடங்களை மீளத் திறப்பதற்கும் அனுமதி வழங்கப்படும்.

ஒன்றாரியோ மாகாண சுகாதார தலைமை அதிகாரியுடனான கலந்துரையாடலின் அடிப்படையில், ஒன்றாறியோ அரசு முதலாம் கட்ட மீள ஆரம்பிக்கும் திட்டத்தின்படி திருமணம், இறுதிச் சடங்குகள் போன்ற உள்ளரங்கத்தில் நடைபெறும் மத வழிபாடுகள், சடங்குகள் மற்றும் விழாக்களை கட்டடம் ஒன்றின் உள்ளடக்கத்திறனின் 15 வீதம் வரையான மக்களுடன் நடத்துவதற்கு அனுமதி அளிக்கவுள்ளது.

மீளத் திறப்பதற்கான திட்டத்தின்படி பின்வருவனவும் இவற்றில் அடங்கும்:

- வெளியரங்க சமுக மற்றும் பொது ஒன்றுகூடல்களில் 10 நபர்கள் வரை பங்குகொள்ளலாம்.

- திருமணம் மற்றும் இறுதிச் சடங்குகள் உள்ளிட்ட வெளியரங்க மத வழிபாடு, சடங்குகள் அல்லது விழாக்கள் போன்றவற்றில் இரண்டு மீட்டர் தனிநபர் இடைவெளியினை கடைப்பிடிக்கக்கூடிய அளவில் மக்கள் ஒன்றுகூடலாம்.

- திருமணம் மற்றும் இறுதிச் சடங்குகள் உள்ளிட்ட உள்ளரங்க மத வழிபாடு, சடங்குகள் அல்லது விழாக்கள் போன்றவற்றில் மண்டபத்தின் உள்ளடக்கத்திறனின் 15 வீதம் வரையிலான மக்கள் கலந்துகொள்ளலாம்.

- அத்தியாவசியமற்ற பொருள் விற்பனை நிலையங்கள் அவற்றின் உள்ளடக்கத்திறனின் 15 சதவீதம் வரையான மக்களுடன் திறப்பதற்கு அனுமதிக்கப்படும். விற்கப்படும் பொருட்களுக்கு எவ்வித தடையும் கிடையாது.

- அத்தியாவசிய மற்றும் குறிப்பிட்ட சில சில்லறை விற்பனை நிலையங்கள் அவற்றின் உள்ளடக்கத் திறனின் 25 சதவீதம் வரையான மக்களுடன் திறப்பதற்கு அனுமதிக்கப்படும். விற்கப்படும் பொருட்களுக்கு எவ்வித தடையும் கிடையாது.

- வெளியரங்க உணவகங்களில் ஒரு மேசைக்கு நால்வர் விகிதம் உணவருந்தலாம். அதிக உறுப்பினர்களை உள்ளடக்கிய குடும்பங்களுக்கு விதிவிலக்கு உள்ளது.

- வெளியரங்க உடற்பயிற்சி வகுப்புகள், வெளியரங்கிலான தனிப்பட்ட அல்லது குழு பயிற்சி அல்லது விளையாட்டுப் பயிற்சி போன்றவற்றை 10 வரையான நபர்களுடன் நடத்த அனுமதி உண்டு.

- சுகாதார தலைமைச் செயலகத்தினால் வழங்கப்பட்ட கோவிட்-19 பாதுகாப்பு வழிமுறைகளுக்கமைய சிறுவர்களுக்கான ஒருநாள் வெளித்தங்கல் முகாம்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

- வெளித்தங்கல் முகாம் மைதானங்கள் அவற்றுக்கான பிரதேசங்களில் இரவு வெளித்தங்கல் முகாம்கள், பூங்காக்கள் மற்றும் குறுகிய கால வாடகை தொடர்பானவைக்கும் அனுமதி வழங்கப்படுகிறது.

- இசைக் கச்சேரி அரங்குகள், நாடக அரங்குகள், திரையரங்குகள், முன்கூட்டியே பதிவுசெய்யப்பட்ட அல்லது திரையிடப்படும் கலை நிகழ்ச்சிகள், 10 இற்கு உட்பட்ட கலைஞர்களைக் கொண்ட ஒத்திகை அல்லது கலை நிகழ்ச்சிகளை கட்டுப்பாட்டு விதிமுறைகளைப் பின்பற்றி வெளியரங்குகளில் நடத்தலாம்.

- பார்வையாளர்கள் பங்குபெறாத குதிரைப் பந்தய மைதானங்கள், அதிவேக வாகன போட்டி மைதானங்கள் திறப்பதற்கு அனுமதி.

- மிருகக்காட்சிசாலைகள், வரலாற்று கட்டடங்கள், மையங்கள், இடங்கள், தாவரவியல் பூங்காக்கள் போன்ற வெளியரங்க பகுதிகளுக்கு கட்டுப்பாடுகளுடன் அனுமது வழங்கப்படுகின்றது.

- பொது சுகாதார அமைப்பின் தரவுகளின் அடிப்படையில் ஏதேனும் முக்கிய பாதிப்புகள் ஏற்படுகின்றனவா என்பதனை மதிப்பீடு செய்வதற்கான காலமாக இந்த முதலாம் கட்டத்தின் 21 நாட்களும் அமைந்திருக்கும்.

- 21 நாள் காலப்பகுதியின் முடிவில் ஒன்றாரியோ மாகாணத்திலுள்ள வயது வந்தவர்களில் 70 வீதமானவர்கள் முதலாவது தடுப்பூசியையும், 20 வீதமானவர்கள் இரண்டாவது தடுப்பூசியையும் பெற்றும், பொது சுகாதார தரவுகளில் முன்னேற்றமும் ஏற்பட்டிருப்பின், மாகாணம் இரண்டாம் கட்டத்தை நோக்கி நகரும்.

- ஒன்றாரியோ மாகாணம் இன்று 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12:01 மணிக்கு அடுத்த கட்டத்துக்கு நகரும் வரை மாகாணத்தில் தற்போதுள்ள கட்டுப்பாட்டு விதிமுறைகள் அனைத்தும் அப்படியே இருக்கும்.

- இக்காலகட்டத்தில் குறிப்பிட்ட துறைகள், நிறுவனங்கள் மற்றும் பிற அமைப்பு போன்றவை மீளத்திறக்கும் திட்டங்கள் தொடர்பான செயற்பாடுகளில் மாகாண அரசு தொடர்ந்தும் அவற்றுடன் இணைந்து செயலாற்றும் என்பதுடன் அவற்றையும் உறுதிப்படுத்தும்.

இவ்வாறு காணப்படும் ஒன்றாரியோ மாகாண அரசின் அறிவிப்பை உதயன் ஆசிரிய பீடத்திற்கு அனுப்பிவைத்தவர் விஜய் தணிகாசலம், மாநில சட்டமன்ற உறுப்பினர், ஸ்காபரோ - றூஜ் பார்க் ஆவார்.

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# வடக்கு கிழக்கு கல்வியில் பின்னடைவது ஏன்?

கவிஞர் தீபச்செல்வன்

கொரேனா பேரிடர் காலத்தில் முடப்பட்ட பாடசாலைகள் எப்போது திறக்கப்படும் என்ற எதிர்பார்ப்பில் இருக்கிறது ஈழக் கல்விச் சமூகம். அதிபர்கள், ஆசிரியர்கள் முதல் பெற்றோர்கள் வரை கொரோனாவால் பிள்ளைகளின் கல்வி பாழாகிறது என்ற கலக்கில் உள்ளனர். ஏற்கனவே வடக்கு கிழக்கு மாகாணங்கள் கல்வியில் பின்தங்கிய நிலையில் உள்ளன. இந்தக் கொரோனா காலம் இன்னமும் வடக்கு கிழக்கை பின்னுக்கு தள்ளப் போகின்றன என்பதுதான் அதிர்ச்சி தருகிறது.

போர்க்காலத்தில் இல்லாதளவுக்கு வடக்கு கிழக்கில் கல்வி பெரும் வீழ்ச்சியை சந்திருக்கிறது. போர்க்காலம் என்பது மாணவர்களை சுற்றியும் அவர்களின் கல்வியை குறித்தும் கடும் போரை நடத்தியவொரு காலம். உண்பதற்கு உணவில்லை. அரசின் கடுமையான பொருளாதாரத் தடையால் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தவித்தன. வெறும் வயிற்றுடன் இலைக் கஞ்சியை நம்பி மாணவர்கள் பள்ளிக்குச் சென்றனர்.

மின்சாரத்தை தெரியாத காலமும் அதுதான். சில நகரங்களில் புலிகளின் மின் உற்பத்தி நிறுவனங்கள் மின்சாரத்தை வழங்கியிருந்தன. கிராமங்களில் மிகச் சிறியளவிலான விளக்குகள்தான் பயன்பாட்டில் இருந்தன. இருட்டுக்குள் புத்தகங்களை விரித்து கண்ணை அகல விரித்து படித்து எழுதினர் மாணவர்கள். அதைப் போல வீடுகள் என்பதே தரப்பால்களாலும் ஓலைகளினாலும் ஆன கூடாரங்கள்தான். ஆனாலும் அங்கு மாணவர்கள் நன்றாகப் படித்தனர்.

எப்போதும் தமிழரின் வானத்தை விமானங்கள் உழுது கொண்டிருக்கும். பாடசாலைகள் எனப்பட்டவை, பதுங்குகுழிகளால் ஆகியிருந்தது. பாடசாலை மணியைப் போல அடிக்கடி விமானங்கள் வந்து வானத்தை கிழிக்கும். பிள்ளைகளை பதுங்குகுழிக்குள் பத்திரமாக இருக்கச் செய்துவிட்டு ஆசிரியர்கள் வெளியில் நிற்பர். நாள் முழுவதும் விமானங்கள் வந்து படிப்பை குழப்பிச் செல்லும். சிலவேளை பள்ளிகள் மீது குண்டுகளைப் போடும்.

நாகர் கோவில் பள்ளி மாணவர் படுகொலையை எந்த தமிழராலும் மறக்க இயலாது. பள்ளி சென்ற பிள்ளைகள் வழியில் கிளைமோரிலும் பலியாகினர். மன்னாரின் பள்ளிப் பேருந்து மீது 2006இல் நடந்த கிளைமோர் தாக்குதலில் மாணவர்கள் பலிகொள்ளப்பட்டனர். செஞ்சோலையில் 54 பள்ளி மாணவர்கள் பலிகொள்ளப்பட்டனர். மாணவர்களின் வெள்ளைச் சீருடைகள் குருதியால் நனைந்தது. பள்ளிக்கூடங்களும் வகுப்பறைகளும் சிதறின.

ஆனாலும் அன்றைக்கு கல்வி சித்தி விகிதம் என்பது உயர்வாகவே இருந்தது. போர் நடந்த காலத்தில் 72 வீதத்திற்கு குறையாத சித்தியை வடக்கு கிழக்கு மாகாணங்கள் வகித்தன. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுடன் திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் என தமிழர்கள் வாழும் மாவட்டங்களின் பெறுபேறுகள் கொழும்புக்கு சவால் விட்டன. அகில இலங்கை ரீதியாக மாணவர்கள் முன்னிலை இடத்தை பெறுவதை அப்போது ஒரு அதிசயமாகவே பார்த்தனர்.

கடும் போர், பொருளாதாரத் தடை, பள்ளிகளின் இடப்பெயர்வு என இனவழிப்பு யுத்தம் கூறுபோட்ட காலத்திலும் கல்வியில் உயர்ந்திருந்தோம். மாணவர்களின் சாதனை பெரிதாய் இருந்தது. இன்றைக்கு ஏன் வடக்கு கிழக்கு மாகாணங்கள் கல்வியில் பின்னடைவை சந்திக்கின்றன என்று கல்வியாளர்கள் ஆராய்ச்சிகளை செய்து கொண்டிருக்கிறார்கள். போர் முடிந்து கடந்த பத்தாண்டுகளாக இந்த நிலைதான் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

கடந்த முறை வெளியான சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறும் பெரும் வீழ்ச்சியை காட்டியிருந்தன. உயர்தரம் கற்கும் தகைமையை 67. 74 வீதமான மாணவர்கள் வடக்கு மாகாணத்தில் பெற்றிருந்தனர். கணிதம் மற்றும் தாய்மொழி உட்பட ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட படங்களில் **(3C)** அடிப்படையிலும் ஒன்பதாவது **(60.80%)** நிலையில்தான் வடக்கு மாகாணம் இருக்கிறது. ஆனால் சகல படங்களிலும் சித்தியடைய தவறியவர்கள் **(all F)** அடிப்படையில் இலங்கையில் 3 ஆவது நிலையில் **(2.63%)** உள்ளது வடக்கு.

வடக்கு மாகாணத்தில் உள்ள மாவட்டங்களான மன்னார் 74.67%யும், யாழ்ப்பாணம் 74.16%யும், வவுனியா 67.70%யும், முல்லைத்தீவு 63.07%யும், கிளிநொச்சி 60.51%யும் சித்தி விகிதங்களை அடைந்திருக்கின்றன. அத்துடன் அகில இலங்கை ரீதியாக முல்லைத்தீவு 24ஆவது மாவட்டமாகவும் கிளிநொச்சி 25ஆவது மாவட்டமாகவும் நிலையை பெற்றுள்ளன. கிளிநொச்சி மாவட்டம் தொடர்ந்து கல்வியில் பின்நிலையில் நிற்கிறது.

கிழக்கு மாகாணம் சாதாரண தரப் பரீட்சையில் எட்டாவது இடத்தை அடைந்திருக்கிறது. அத்துடன் கடந்த ஆண்டு நடந்த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி, கிழக்கு மாகாணம் நான்காவது இடத்தைப் பெற்று முன்நோக்கி நகர்ந்திருக்கிறது. தமது மாகாணம் கல்வியில் முன்னேற்றம் அடைந்து வருவதாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் கூறுகின்றார். வடக்குடன் ஒப்பிடுகின்ற போது கிழக்கு முன்னோக்கிச் சென்றாலும் அகில இலங்கை ரீதியான அதன் அடைவு இன்னமும் உயர வேண்டியுள்ளது.

விடுதலைப் புலிகளின் காலத்தில், மிகக் கடும்போர் நடந்த காலத்தில் இல்லாத வசதிகள் வாய்ப்புக்கள் எல்லாம் இப்போது பள்ளிக்கூடங்களுக்கு வந்துவிட்டன. போதிய கட்டிடங்கள், போதிய ஆசிரியர் வளம், ஆய்வுகூடங்கள், தொலைபேசி மற்றும் இணையக்கூடங்கள், சிமார்ட் வகுப்பறைகள் என மிகுந்த நவீனச் சூழலில் பள்ளிகள் இயங்குகின்றன. போக்குவரத்து வசதிகள், கல்விக்கான நவீன வாய்ப்புக்கள் யாவும் அதிகரித்துவிட்டன. ஆனாலும் ஏன் பின்னடைவை சந்திக்கிறோம்?

போர்காலத்தில் இருந்த உயர்வை ஏன் எட்டமுடியவில்லை? பள்ளிக்கூடங்கள் வெறுமனே கட்டடங்களால் ஆனதல்ல! அப்படி கட்டடங்களாலும் வசதிகளினாலும் ஆனது என்றால் இப்போது வீழ்ச்சியும் அப்போது உயர்ச்சியையும் பெற்றிருக்க முடியாது. அன்றைக்கு வடக்கு கிழக்கின் கல்வியை உயர்த்தியதில், தமிழீழ மாணவர் அமைப்பு, தமிழீழக் கல்விக் கழகத்தின் பங்களிப்பு பெரும் வகிபாகத்தை ஆற்றியது. புலிகளின் நிர்வாகத்திறன் கல்வியை உயர்த்துவதில் பெரும் பங்கை வகித்தது.

ஆசிரியர் வளமற்ற பள்ளிகளுக்கு புலிகளின் கல்விக் கழகம், ஆசிரியர்களை நியமித்து அவர்களுக்கு ஊதியம் வழங்கியது. ஆசிரியர்களுக்கு பயிற்சிகளும் தேவையான விரிவுரைகளும் நடாத்தப்பட்டன. கடுமையான கண்காணிப்பும் பொறுப்பான கடமையாற்றலும் அன்று இருந்தது. கல்விச் சமூகம் கொள்ள வேண்டிய விழிப்பையும் கொண்டிருந்த பொறுப்பையும் சொல்லிக் கொடுத்து மிகுந்த விழிப்புடன் இருந்தது கல்விச் சமூகம்.

இன்றைக்கு கல்வியை குழப்பும் சூழல்தான் மிகுந்திருக்கிறது. இராணுவச் சூழல், பள்ளிகளை இலக்கு வைத்து போதைப் பொருள் வியாபாரம், போரால் தாய் தந்தையை இழந்த குழந்தைகளின் கல்விப் பின்னடைவு, மற்றும் கல்வி இடைவிலகல், கவனத்தை குறைக்கும் கருவிகளின் ஆதிக்கம் என இன்றைக்கு கல்விக்கு உவப்பற்ற சூழல்தான் வடக்கு கிழக்கில் உருவாக்கப்பட்டிருக்கிறது.

தமிழர்கள் கல்வியால் ஈழத் தீவில் மாத்திரமின்றி உலகளவில் அறியப்பட்டவர்கள். ஈழத்தவர்கள் படித்த சமூகத்தினர் என்றே அறியப்பட்டனர். அவர்களின் கல்விமீது அரசாங்கம் அதிகாரபூர்வமாகவே தடைகளை பிரயோகித்து பின்தள்ள முயன்றது. அதிகாரபூர்வமற்ற ரீதியிலும் கல்விமீது போர் தொடுக்கப்பட்டது. இனப்பாகுபாடுகள் கல்வியில் இன்றளவில் தொடர்கின்றன. முக்கியமாக, இனப்படுகொலைக்கான நீதி, போரால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் கல்வியை உயர்த்த ஒரு மருந்தாக அவசியமானது.

# தமிழ்நாட்டின் ஒரு நாள் தேவையே 3 லட்சம். ஆனால் "யானைப்பசிக்கு சோளப்பொரி" போன்று 1 லட்சம் தடுப்பூசிகளே சென்னைக்கு அனுப்பப்பட்டன

தமிழ்நாட்டில் கொரோனா தொற்று இரண்டாம் அலை பரவல் அதிகரித்து பெருமளவில் உயிர்களை பலி வாங்கி விட்டது.

முதல் அலை பரவலின்போதே இந்தியாவில் தடுப்பூசி தயாரிக்கும் பணி தொடங்கி மக்களுக்குத் தடுப்பூசி போடும் பணி தொடங்கியது. இந்தியாவில் கோவீல்டு, கோவாக்சின் தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றன.

தடுப்பூசிகள் போடும் இயக்கத்துக்கு ஆரம்பத்தில் ஆர்வம் காட்டாத பொதுமக்கள் தற்போது நோய்ப்பரவல் அதிகரித்ததை அடுத்து ஆர்வமாகத் தடுப்பூசி போட்டுக்கொள்கின்றனர்.

மூடிக்கிடக்கும் மையங்கள்:

18 வயதுக்கு மேற்பட்டோருக்குத் தடுப்பூசி போடும் இயக்கமும் தொடங்கப்பட்டதால் தமிழ்நாட்டில் ஒரு நாளைக்கு 3 லட்சத்துக்கும் மேற்பட்டோர் தடுப்பூசி போட்டு வருகின்றனர்.

ஆனால், தடுப்பூசி தட்டுப்பாடு காரணமாகத் தடுப்பூசி போடுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தடுப்பூசி மையங்களும் மூடிக்கிடக்கின்றன.

தமிழகத்திற்கு இதுவரை வந்துள்ள தடுப்பூசிகள் 1 கோடியே 1 லட்சத்து 63 ஆயிரம். இதுவரை போடப்பட்டுள்ள தடுப்பூசிகள் அளவு 97 லட்சத்து 62 ஆயிரத்து 957. கையிலே இருப்பது வெறும் 1060. இது சென்னையில் மட்டும். 37 மாவட்டங்களில் 36 மாவட்டங்களில் தடுப்பூசிகள் இல்லை என்ற நிலை உள்ளது.

மத்திய அரசின் தொகுப்பிலிருந்து ஜூன் மாதம் வருவதாகச் சொல்லப்படுவது 37 லட்சம் தடுப்பூசிகள். 6.5 லட்சம் தடுப்பூசிகள் 9ஆம் தேதியிலிருந்து 11ஆம் தேதி வரை வரும். அப்படி வந்தால் மாவட்ட வாரியாக பிரித்து அனுப்புவோம் என சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்து இருந்தார்.

சென்னை வந்த தடுப்பூசிகள்

இந்நிலையில் ஐதராபாத்தில் இருந்து புளூ டார்ட் விமானம் மூலம் 556 கிலோ எடைகொண்ட 17 பார்சல்களில் 95 ஆயிரத்து 120 கோவாக்சின் கொரோனா தடுப்பூசி மருந்துகள் இன்று சென்னை விமான நிலையம் வந்தடைந்தன.

இதேபோன்று 14,420 தடுப்பூசிகள் புனேயில் இருந்து சென்னை விமான நிலையம் வந்தடைந்தன.

சுகாதாரத்துறை அதிகாரிகள் தடுப்பூசி மருந்துகளைப் பெற்றுக்கொண்டு சென்னை விமான நிலையத்தில் இருந்து குளிர்சாதன வாகனம் மூலம் சென்னை டி.எம்.எஸ். வளாகத்தில் உள்ள மாநிலத் தடுப்பூசி சேமிப்பு மையத்திற்குக் கொண்டு சென்றனர். அங்கிருந்து அவை மாவட்ட வாரியாக பிரித்து அனுப்பப்படும்.

எனவே, கடந்த நாலைந்து நாட்களாக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த தடுப்பூசி செலுத்தும் பணிகள் மீண்டும் தொடங்க வாய்ப்பு உள்ளது.

என்றாலும், "யானைப்பசிக்கு சோளப்பொரி" என்பது போல தினமும் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட டோஸ்கள் தேவைப்படும் நிலையில், வெறும் 1 லட்சம் டோஸ்களே வந்துள்ளதால் தினமும் குறைந்த எண்ணிக்கையிலான பேருக்கே தடுப்பூசி செலுத்தும் வாய்ப்பு உள்ளது குறிப்பிடத்தக்கது.



சென்னையில் 21 லட்சம் பேர்:

இதற்கிடையே, சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இதுவரை 21 லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழக அரசின் வழிகாட்டுதலின்படி முதற்கட்டமாக 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கும், பின்னர் 45 வயதிற்கு மேற்பட்ட இணைய நோயுள்ள நபர்களுக்கும், அதனைத் தொடர்ந்து 45 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் விலையில்லாமல் தடுப்பூசி செலுத்தப்பட்டது.

இத்துடன் மருத்துவ பணியாளர்கள், முன் களப்பணியாளர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் தேர்தல் பணியில் ஈடுபட்ட பணியாளர்கள் என முன்னுரிமை அளிக்கப்பட்டு அவர்களுக்கும் தடுப்பூசி செலுத்த சிறப்பு முகாம்கள் ஏற்படுத்தப்பட்டன. தொடர்ந்து 18 வயதிற்கு மேற்பட்ட நபர்களில் அத்தியாவசிய பணிகளில் ஈடுபடும் நபர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி வழங்கப்பட்டு வருகிறது.

மேற்குறிப்பிட்ட தடுப்பூசி முகாம்களின் வாயிலாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் இதுநாள்வரை 15 லட்சத்து 59 ஆயிரத்து 783 (15,59,783) நபர்களுக்கு முதல் தவணைத் தடுப்பூசியும், 5 லட்சத்து 86 ஆயிரத்து 897 (5,86,897) நபர்களுக்கு இரண்டாம் தவணைத் தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளன. பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் 09.06.2021 வரை 21 லட்சத்து 46 ஆயிரத்து 680 (21,46,680) தடுப்பூசிகள் பொதுமக்களுக்கு விலையில்லாமல் செலுத்தப்பட்டுள்ளன. இதில் 45 வயதிற்கு மேற்பட்டவர்களில் தடுப்பூசி செலுத்திய சதவீதம் 66.31 ஆகும். கோயம்பேடு வணிக வளாகத்தில் அமைக்கப்பட்ட சிறப்பு தடுப்பூசி முகாமில் இதுவரை வியாபாரிகளுக்கு 8239 கோவைட் தடுப்பூசிகளும், காசிமேடு மீன்பிடி துறைமுக வளாகத்தில் அமைக்கப்பட்ட தடுப்பூசி சிறப்பு முகாமில் வியாபாரிகளுக்கு 2143 தடுப்பூசிகளும், சிந்தாதிரிப்பேட்டையில் அமைக்கப்பட்ட சிறப்பு மருத்துவ முகாமில் 89 தடுப்பூசிகளும் செலுத்தப்பட்டுள்ளன. இந்த வணிக வளாகங்களில் கோவிட் தடுப்பூசி சிறப்பு முகாம்களின் மூலம் வியாபாரிகளுக்கு தொடர்ந்து தடுப்பூசி செலுத்தப்படும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

படிப்படியாக குறைகிறது

இந்நிலையில் தமிழ்நாட்டில் கொரோனா பரவல் படிப்படியாக குறைகிறது.

கடந்த 24 மணிநேரத்தில் ஒரேநாளில் 16,813 பேருக்கு கொரோனா உறுதியானது. பலியும் 400 என்பதில் இருந்து 358 ஆக குறைந்தது.

தலைநகர் சென்னையை பொறுத்த வரையில் கடந்த 24 மணிநேரத்தில் 1,223 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள மருத்துவமனைகளில் மொத்தமாக சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கையும் 3 லட்சம் என்பதில் இருந்து 1.88 லட்சமாக குறைந்து இருக்கிறது.

கோவை மாவட்டத்தில் கடந்த 24 மணிநேரத்தில் அதிகபட்சமாக 2,236 பேருக்கு கொரோனா உறுதியாகியுள்ளது. இன்னும் சில வாரங்களில் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை கணிசமாக குறையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. - *மணிராஜ், -திருநெல்வேலி.*

கனடிய செய்திகள்
Canadian News

# நூலாசிரியர்: சபா. அருள்சுப்பிரமணியத்தின் "பாடி ஆடு பாப்பா" நூல் வெளியீடு சிறப்பாக நடைபெற்றது





கடந்த 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மேற்படி நூல் வெளியீட்டு விழா இணையவழியில் சிறப்பாக நடைபெற்றாலும். திரு. திருமதி. சண்முகராசா அவர்களும், வாசுகி நகுலராசா அவர்களும் மங்கலவிளக்கை ஏற்றி நிகழ்வைத் தொடக்கிவைத்தனர். சரலயசங்கீதக் கல்லூரி ஆசிரியர் ஜெயகாந்தி திருஞானசம்பபந்தன் அவர்களின் தமிழ்மொழி வாழ்த்து, கனடாப்பண் என்பவற்றைத் தொடர்ந்து அகவணக்கமும் தலைவர் அறிமுகமும் இடம்பெற்றன.

தலைமை வகித்த சின்னத்தம்பி சண்முகராசா அவர்கள் நூலாசிரியர் திரு. அருள்சுப்பிரமணியத்தால் முதலில் அறிமுகம் செய்துவைக்கப்பட்டார்.

தலைவர் தமது உரையில் நூல் அமெரிக்க பல்கலைக் கழகத்தின் சிறந்தநூலுக்கான விருதையும், இந்திய "கவிதை உறவு" மனிதநேய இலக்கிய இதழின் சிறுவர் இலக்கியத்திற்கான பரிசையும் பெற்ற நூலை வெளியிட்டு வைப்பதில் மகிழ்வுகொள்வதாகக் குறிப்பிட்டார்.

வாழ்த்துரைகளை பண்டிதர் திரு. ச. வே. பஞ்சாட்சரம், ஓய்வுநிலைக் கல்வி அதிகாரி வி. சிற்றம்பலம, கனடா "உதயன்" பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் மற்றும் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த தாமோ. பிரமேந்திரன், தமிழ்ச்சங்க அதிபர் சு. இராசரத்தினம் அவர்களும், சென்னை மணிமேகலை பிரசுர அதிபர் ரவி. தமிழ்வாணன் அவர்களும், பிரான்சைச்சேர்ந்த இலங்கை வேந்தன் அவர்களும் வழங்கினர்.

தமிழ்ப் பூங்கா மாணவர்கள் சிறுவர் பாடல் நூலில் உள்ள பாடல்களைப் பாடி அவை சிறுவருக்கு எவ்வாறு அமைந்துள்ளன என்பதை நிறுவினர்.

ஆய்வுரைகளை பேராசிரியர் ஆ. ரா. சிவகுமாரன் சிங்கப்பூரிலிருந்தும், கனடாவிலிருந்து வாசுகி நகுலராசா அவர்களும், இந்தியாவிலிருந்து வெற்றிச்செழியன் அவர்களும், கனடாவிலிருந்து எழிலரசு சுப்பிரமணியன், கௌசல்யா சுப்பிரமணியன் அவர்களும், இலங்கையிலிருந்து தனுசாந்தினி பாலசுந்தரம் அவர்களும் வழங்கினர்.













நூலறி முகமும் நூல் வெளியீடும் பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்களால் வழங்கப் பட்டன.

நூலின் முதற் பிரதியை சின்னத்தம்பி சண்முகராசா அவர்கள் பெற்றுக்கொள்ள, சிறப்புப் பிரதியை வாசுகி நகுலராசா அவர்கள் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து சிறப்புப் பிரதிகளை அசோக், அருண், பாபுஜி, தர்சிஎன்போர் பெற்றுக் கொண்டனர்.

இலக்கணவினாவிடை நூலை அகணிசுரேஸ் அறிமுகம் செய்துவைக்க அதன் ஆய்வுரையை பேராசிரியர் செல்வம் சிறிதாஸ் வழங்கிச் சிறப்பித்தார்.

இறுதியில் நூலாசிரியர் சபா. அருள்சுப்பிரமணியம் ஏற்புரையையும் நன்றி உரையையும் வழங்கினார். இத்துடன் நிகழ்வுகள் இனிதேன்நிறைவேறின.

நிகழ்ச்சிபற்றி அறியத்தருபவர்: எழிலரசு சுப்பிரமணியன்.



30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

ஸ்காபுறோ

# சங்கர் அன் கோ

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

*SUMMER SPECIAL* கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...



உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.

இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.





காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

# SHANKAR & CO

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8

Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)



# கனேடிய பூர்வகுடிகள் பாடசாலை எச்சங்கள்: போப் "மன்னிப்பு கேட்க வேண்டும்"

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)

மன்னிப்பு எனும் மாபெரும் தத்துவத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டது கிறிஸ்தவம். கர்த்தராகிய இயேசுபிரான் தனது வாழ்நாளில் இந்த மாண்புக்கு முக்கியத்துவம் அளித்துள்ளார். புனித வேதாகமம் மன்னிப்பு கோருவது மற்றும் மன்னிப்பது குறித்து பல இடங்களில் மிகவும் விரிவாகவும் ஆழமாகவும் பேசுகிறது. புதைகுழி என்றாலே குலை நடுங்கும்.

மன்னார், செம்மணி, இன்னும் எவ்வளவோ அறிந்ததும், அறியாததும். புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படும் போதும் பதில்களை விட கேள்விகளே அதிகம் எழும். ஆன்றோர் முதல் சான்றோர் வரை, அரசன் முதல் ஆண்டி வரை கருத்து தெரிவிப்பது, கண்டனம் வெளியிடுவது, கண்ணீர் வடிப்பது ஆகியவை வழக்கமாக நடைபெறும் விஷயங்கள்.

ஆனால் அதற்குப் பிறகு என்ன? நடந்தது நடந்துவிட்டது, மறப்போம் மன்னிப்போம் போன்ற பழைய பல்லவிகள்.

இப்போது கனடாவில் கத்தோலிக்க திருச்சபையால் நடத்தப்பட்ட பாடசாலை ஒன்றின் புதைகுழியிலிருந்து 215 சிறார்களின் உடல் எச்சங்கள் அண்மையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது "மிகவும் வேதனையான" விஷயமாகும் என்று போப் பிரான்சிஸ் விசனம் வெளியிட்டுள்ளார்.

எனினும் கனடாவை மிகவும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய அந்த கண்டெடுப்பு குறித்து அவர் "வேதனை" வெளியிட்டிருந்தாலும் வருத்தமோ அல்லது அதற்காக மன்னிப்போ கோரவில்லை.

கத்தோலிக்க திருச்சபையால் நடத்தப்பட்ட அந்த உறைவிட பாடசாலையில் நடைபெற்று மூடி மறைக்கப்பட்ட ஊழல் - கனடாவை கடும் அதிர்ச்சியில் உறைய வைத்துள்ள நிலையில் இது குறித்து போப் மன்னிப்பு கோர வேண்டும் என்று கோரிக்கை எழுந்தது.

"215 பாடசாலை மாணவர்களின் உடல் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று கனடாவிலிருந்து வரும் செய்திகளை நான் மிகவும் மன வேதனையுடன் கவனித்தேன்" என்று கடந்த ஞாயிறன்று புனித பீட்டர்ஸ் தேவாலயத்தில் நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தில் போப் பிரான்சிஸ் கூறினார்.

"மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அளிக்கும் இந்தச் செய்தியால் பெரும் மனவுளைச்சலுக்கு ஆளாகியிருக்கும் கனேடிய மக்களுக்கு ஆறுதல் கூறி துணை நிற்கும் கனேடிய ஆயர்கள் மற்றும் கனடாவில் இருக்கும் முழு கத்தோலிக்க தேவாலயங்களுடன் நானும் பங்குபெறுகிறேன்" என்று கடந்த ஞாயிறன்று தனது வாராந்திர ஆராதனையின் போது போப் தெரிவித்தார்.



கடந்த காலங்களில் நடைபெற்ற வலி மிகுந்த சம்பவங்களும் அதனால் ஏற்பட்ட வேதனைகளும் இந்தக் கண்டுபிடிப்பின் மூலம் அதிகரித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது என்றார் போப் பிரான்சிஸ்.

இணக்கப்பாடும் ஆற்றுப்படுத்தலும்

கனடாவின் அரசியல் மற்றும் மதத் தலைவர்கள் "வேதனையான இந்தச் சம்பவம் குறித்து கவனம் செலுத்தி" நாட்டில் "இணக்கப்பாடு மற்றும் ஆற்றுப்படுத்தல் வழிமுறைகளைத் தொடங்க வேண்டும் எனக் கோரியுள்ளார் போப்.

இந்தப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து "ஆழ்ந்த துக்கத்திலிருக்கும் பூர்வகுடி மக்களின் குடும்பங்களுக்கும் கனடாவிலிருந்து சமூகங்களுக்குமாக" தான் பிரார்த்தனை செய்வதாகத் தெரிவித்துள்ளார் போப் பிரான்சிஸ்.

கடந்த மாதம் இந்தச் சிறார்களின் எச்சங்கள் காம்லூப்ஸ் இந்திய உறைவிடப் பள்ளியில் கண்டுபிடிக்கப்பட்டது கனேடிய சமூகங்களில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்திலுள்ள காம்லூப்ஸ் இந்திய உறைவிடப் பள்ளியில் இடம்பெற்ற மரணங்களுக்கு கத்தோலிக்க திருச்சபை பொறுப்பேற்க வேண்டுமென்று பிரதமர் ஜஸ்டின் டிரூடோ கோரியுள்ளார்.

கனேடிய அரசு இந்தச் சம்பவம் தொடர்பில் "காத்திரமான நடவடிக்கை" எடுக்கும் என்று தெரிவித்த பிரதமர், கனடாவிலுள்ள கத்தோலிக்க சமூகம் தமது தேவாலயம் இந்த வி'யத்தில் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது எனும் செய்தியை தெட்டத் தெளிவாக கூற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

"கத்தோலிக்க திருச்சபையை நீதிமன்றத்திற்கு இழுக்கும் நடவடிக்கையை நாம் தொடங்குவதற்கு முன்னர், இதில் தாங்களும் பங்குபெற வேண்டிய கடப்பாடு உள்ளது என்பதை மதத் தலைவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று மிகவும் நம்பிக்கையுடன் இருக்கிறேன்".




"மன்னிப்பு கோர வேண்டும்"

காம்லூப்ஸ் பள்ளி எச்சங்கள் குறித்து கருத்து வெளியிட்ட ஜஸ்டின் ட்ரூடோ, "நீதி, ஆற்றுப்படுத்தல் மற்றும் இணக்கப்பாடு குறித்து பேசுவதற்கு முன்னர் எமக்கு உண்மை தெரிய வேண்டும்" என்று கூறியிருந்தார்.

அதுமட்டுமின்றி, கனேடிய உறைவிட பள்ளி கட்டமைப்பு மற்றும் நடைமுறைகளில் கத்தோலிக்க திருச்சபைக்கு இருந்த பங்கு குறித்து போப் பிரான்சிஸ் அதிகாரபூர்வமான மன்னிப்பைக் கோர வேண்டும் என்று கனேடிய அரசு கோரியுள்ளது.



நடைபெற்ற சம்பவம் குறித்து கனடாவும் வத்திகானும் முழுமையான விசாரணைகளை நடத்தி முடிக்க வேண்டும் என்று ஐ நாவின் மனித உரிமை வல்லுநர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

வான்கூவர் பேராயர் ஜே. மைக்கேல் மில்லர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் திருச்சபை சார்பில் தான் மன்னிப்பு கோருவதாகத் தெரிவித்திருந்தார். ஆனால் கனேடிய அரசின் சில அமைச்சர்கள் உட்பட ஏராளமானோர் இதற்கு கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான போப் பிரான்சிஸே வருத்தம் தெரிவித்து மன்னிப்பு கோர வேண்டும் என்று குரல் கொடுத்து வருகின்றனர்.

நாகரிகப்படுத்தல் எனும் நடவடிக்கை கடந்த 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கனடாவிலிருக்கும் பூர்வகுடி மக்களை மைய நீரோட்ட சமூகத்தில் உள்வாங்கும் நோக்கோடு 139 உறைவிடப் பள்ளிகள் நிறுவப்பட்டன. அப்படி ஏற்படுத்தப்பட்ட பள்ளிகளில் காம்லூப்ஸ் இந்திய உறைவிடப் பள்ளியே மிகவும் பெரியது. அங்கு ஒரே சமயத்தில் 500 பேர் வரை கல்வி பயின்றனர்.

அந்தப் பாடசாலை கனேடிய அரசின் சார்பில் கத்தோலிக்க திருச்சபையால் 1890 முதல் 1969 வரை நடத்தப்பட்டது. பிறகு அதை நேரடியாக பொறுப்பேற்ற கனேடிய அரசு, பத்தாண்டுகளுக்குப் பிறகு அதை மூடிவிட்டது.

மேற்கத்திய விழுமியங்களை உள்வாங்கும் நோக்கில் பூர்வகுடி மாணவர்களை "நாகரிகப்படுத்துவதே" இந்த உறைவிட பள்ளிகளின் நோக்கமாக இருந்தது. இது மறைமுகமாக பூர்வகுடி மக்களின் கலாச்சாரத்தை அழிப்பதற்கான ஒரு நடவடிக்கை மற்றும் கலாச்சார இனப்படுகொலை என்று சட்ட வல்லுநர்களும் மனித உரிமை செயல்பாட்டாளர்களும் கூறுகின்றனர்.

அந்தப் பாடசாலையில் ஒரு முறை அங்குள்ள மாணவர்களுக்கு சீரான உணவளிக்க கூடுதல் நிதியுதவி தேவை என்று மன்றாடியதும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை அங்கு 50 சிறார்களே மரணமடைந்தனர் என்று அதிகாரபூர்வாக ஆவணப்படுத்தப்பட்டு கூறப்பட்ட நிலையில், தற்போது அதியுயர் தொழில்நுட்பத்தின் மூலம் 200க்கும் அதிகமானவர்கள் - காம்லூப்ஸ் பள்ளி வளாகத்தில் புதைக்கப்பட்டது தெரிய வந்துள்ளது.

திட்டமிட்ட அழிப்பு

அதேவேளை அங்கிருந்து தப்பிப் பிழைத்தவர்கள் தாங்கள் அங்கிருந்த போது பாதிரியார்கள் மற்றும் கன்னியாஸ்திரீகளால் துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்கப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தமது தலைமுடி வெட்டப்பட்டதுடன் தங்களது பாரம்பரிய பூர்வகுடி மொழியில் பேசுவது மற்றும் தமது கலாச்சாரப்படி நடனமாடுவது ஆகியவை தடை செய்யப்பட்டன என்றும் குடும்பத்துடனான அனைத்து உறவுகளையும் முறித்துக் கொள்ள வலிந்து வற்புறுத்தப்பட்டனர் என்று கூறியுள்ளனர்.

கனேடிய சமூகத்தில் இணைக்கப்படும் செயல் என்ற நடவடிக்கையின் கீழ் 150,000 குழந்தைகள் அந்த கட்டமைப்பை ஏற்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டனர். ஏராளமானோர் தமது குடும்பங்களிலிருந்து பிரிக்கப்பட்டு, பூர்வகுடி பெயர்கள் நீக்கப்பட்டு புதிதாக ஐரோப்பியப் பெயர்கள் சூட்டப்பட்டனர். அவர்கள் வலிந்து கிறிஸ்தவர்களாக மாற்றப்பட்டனர்.

கத்தோலிக்க திருச்சபையின் உத்தரவுகளுக்கு கீழ்ப்படியாதவர்கள் அடித்து துன்புறுத்தப்பட்டு, ஏச்சுப் பேச்சுகளுக்கு ஆளாயினர். அதன் காரணமாக அப்படியான பாடசாலைகளில் இருந்த 6000 மாணவ மாணவியர் உயிரிழந்தனர்.

கத்தோகிக்க திருச்சபையின் பள்ளிகளுக்கு வலிந்து கொண்டு செல்லப்பட்ட பூர்வகுடி மாணவர்கள் உடல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகினர், ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல் போயினர் என்று இது குறித்த விசாரணை ஆணையம் தமது அறிக்கையில் கூறியுள்ளது.



மன்னிப்பே மருந்து

ஆனால் உறைவிட பள்ளிகளில் நடைபெற்ற விஷயங்களுக்கு போப் தனிப்பட்ட முறையில் மன்னிப்பு கோர முடியாது என்று கனேடிய கத்தோலிக்க ஆயர்களின் கூட்டமைப்பு கூறுகிறது.

"அந்த மன்னிப்பு இன்றுவரை வெளியாகவில்லை என்பது வெட்கக் கேடானது என்று நான் கருதுகிறேன்" என்று பூர்வகுடி மக்கள் சேவைக்கான அமைச்சர் மார்க் மில்லர் தெரிவித்துள்ளார். பூர்வகுடி மக்களின் நல்வாழ்வுக்கான மற்றொரு அமைச்சரான கேரலைன் பென்னட் அம்மையார் "போப்பின் மன்னிப்பு கோரல் காயங்களை ஆற்றுப்படுத்த உதவும்" என்கிறார். "போப் மன்னிப்பு கோருவதை நாங்கள் கேட்க வேண்டும்" என்று வலியுறுத்துகிறார் கேரலைன் பென்னட் அம்மையார்.

கத்தோலிக்க திருச்சபையில் பல புரட்சிகரமான மாறுதல்களை கொண்டுவந்தவர் போப் பிரான்சிஸ். அவர்கள் "மக்களின் திருத்தந்தை" என்று அன்புடன் அழைக்கப்படுகிறார்.

மன்னிப்பு கோருவது மற்றும் மன்னிப்பது குறித்து பல விரிவான விளக்கங்களை அவர் அளித்துள்ளார்.

ஆனால் கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான போப் கனடாவின் பூர்வகுடி மக்களுக்கு இழைக்கப்பட்ட அநியாயங்களுக்கு மன்னிப்பு கோருவாரா என்பது தான் கேள்வி?

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



# தமிழ்நாட்டின் அரச இயந்திரம் இதே வினைத்திறனோடு இயங்கினால் திமுக ஆட்சி அடுத்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக நீடிக்கும்!

**கனடா நக்கீரன்**

ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள் என்பார்கள். அதாவது ஆசை, மோகம் போன்ற உலகியல் குணங்கள் நிலைப்பதில்லை. தொடக்கத்தில் தோன்றக் கூடிய இவை நாட்கள் போகப் போகக் குறைந்துவிடும் என்பதே இதன் பொருளாகும்.

தமிழ்நாட்டில் மு.க. ஸ்டாலின் தலைமை வகிக்கும் திமுக ஆட்சிக்கு வந்து முப்பது நாட்கள் கழிந்துவிட்டன. கடந்த மே 07 இல் 34 அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை பதவிக்கு வந்தது.

தமிழ் நாட்டின் 23 ஆவது முதலமைச்சராக ஸ்டாலின் பதவி உறுதிமொழி எடுத்துக் கொண்டார். அப்போது தனது பாட்டன், தந்தை பெயர்களைச் சொல்லத் தவறவில்லை. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆகிய நான் எனத் தொடங்கி தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில் உண்மையாகவும் உளச்சான்றின்படியும் என் கடமைகளை நிறைவேற்றுவேன் என்றும் உறிதுமொழி எடுத்துக் கொண்டார்.

ஸ்டாலின் தமிழ்நாட்டின் முதலமைச்சர் பதவிக்கு வர அவர் நீணட் காலம் காத்திருக்க வேண்டியிருந்தது. இப்போது அவருக்கு அகவை 78. இரண்டு பிள்ளைகள் நான்கு பேரப்பிள்ளைகள் அவருக்கு உண்டு. மார்ச் 01, 1953 இல் பிறந்த இவருக்கு சோவியத் ஒன்றிய பொதுவுடமைக் கட்சியின் பொதுச்செயலாளர் மறைந்த ஸ்டாலின் நினைவாக ஸ்டாலின் எனப் பெயர் சூட்டப்பட்டது. சோவியத் ஒன்றியத்தின் தலைவர் மறைந்த நாள் மார்ச் 05, 1953 ஆகும்.

தேர்தல் பரப்புரைக் காலத்தில் ஸ்டாலின் வாரிசு அரசியல் செய்கிறார். அவருக்குத் தந்தைக்குப் பின்னர் தனயன் என்ற தகுதியை விட வேறு தகுதியில்லை, இந்தத் தேர்தலில் மட்டுமல்ல இந்த நூற்றாண்டில் அவர் முதலமைச்சராக வரமுடியாது என அவருக்கு எதிராக அதிமுக பரப்புரை செய்தது. குறிப்பாக முன்னாள் முதலமைச்சர் ஓ.பி. பழனிச்சாமி தேர்தல் மேடைகளில் முழங்கினார்.

அப்போது "நான் உழைப்பால் உயர்ந்தவன் பழனிச்சாமி போல் சசிகலா காலில் ஊர்ந்து போய் முதலமைச்சர் பதவியைப் பெறப்போவன்" அல்லன் என ஸ்டாலின் பதிலடி கொடுத்தார்.

ஸ்டாலின் தமிழகத்தின் துணை முதலமைச்சராகவும் உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் ( 29 மே 2009 - மே 15, 2011 வரை பொறுப்பு வகித்துள்ளார். 1996 முதல் 2002 வரை சென்னை மாநகராட்சியின் 37 ஆவது மேயராகவும், 2009 முதல் 2011 வரை தமிழகத்தின் முதல் துணை முதல்வராகவும் பொறுப்பில் இருந்திருக்கிறார். ஓகஸ்ட் 28, 2018 முதல் திமுக இன் தலைவராக இருந்து வருகிறார்.

எனவே ஸ்டாலின் அவர்கள் அவர் கூறியது போலவே உழைப்பால் உயர்ந்தவர். கலைஞர் கருணாநிதியின் மகன் என்ற ஒரே காரணத்தாக அவர் முதலமைச்ராக வந்துவிட வில்லை.

இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அகால மரணம் அடைந்த போது விமான ஓட்டியாக இருந்த அவரது மகன் இராஜீவ் காந்தி நாட்டின் பிரதமராக தெரிவு செய்யப்பட்டார். அதற்குப் பெயர்தான் வாரிசு அரசியல் ஆகும்.

ஓரு ஆட்சியின் பலத்தை அல்லது பலவீனத்தை 30 நாட்களில் எடை போட முடியாது. குறைந்தது 100 நாட்கள் ஆவது போக வேண்டும். இப்போது நடப்பது தேனிலவுக் காலம்.

இந்த 30 நாட்களில் (மே 07 - யூன் 06) ஸ்டாலின் அவர்கள் தனக்கென்று ஒரு முத்திரையைப் பதித்துள்ளார். தாய் (தந்தை) எட்டடி பாய்ந்தால் குட்டி 16 அடி பாயும் என்பதை எண்பித்துக் காட்டியுள்ளார்.

தமிழ்நாட்டு அரசியலில் கறைபடியாத அரசியல்வாதிகளை - கலைஞர் கருணாநிதி உட்பட - காண முடியாது. ஐந்து முறை முதலமைச்சராக இருந்த செல்வி ஜெயலலிதா வருவாய்க்கு மேல் சொத்துச் சேர்த்தார் என்ற ஊழல் குற்றச் சாட்டில் கர்நாடக சிறப்பு நீதிமன்றம் 4 ஆண்டு சிறையும்100 கோடி தண்டப் பணமும் விதித்தது. அவரது அன்றைய சொத்து மதிப்பு ரூபா 66.65 கோடி என மதிக்கப்பட்டது. நல்லகாலமாக அவர் தீர்ப்பு வருமுன்னர் 06 டிசெம்பர் 2016 இல் காலமாகிவிட்டார். அவருக்கு உடந்தையாக இருந்த குற்றச் சாட்டில் சசிகலா நடராசன் அவர்களுக்கு 4 ஆண்டுகாலச் சிறையும் ரூபா 10 கோடி தண்டப்பணமும் விதிக்கப்பட்டது.

தேர்தல் காலத்தில் திமுக வின் தலைவர் மற்றும் முதலமைச்சர் வேட்பாளர் என்ற முறையில் ஸ்டாலின் ஏராளமான வாக்குறுதிகளை வீசியிருந்தார். ஆனால் அவரால் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியுமா என்ற அச்சம் திமுக தொண்டர்கள் உட்படப் பலருக்கு இருந்தது. வழக்கம் போல அவை தேர்தல் கால வாக்குறுதிகள் என நினைத்தார்கள்.

ஆனால் ஸ்டாலின் இந்த 30 நாட்களில் கொடுத்த வாக்குறுதிகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருகிறார்.

ஸ்டாலின் பதவியேற்ற காலத்தில் தமிழ்நாட்டில் கொரோனா தொற்று உச்சத்தில் இருந்தது. அது புதிய அரசுக்குப் பெரிய சவாலாகவும் இருந்தது. மற்றது நிதி நெருக்கடி. முன்னைய அதிமுக அரசு தமிழ்நாட்டை பல இலட்சம் கோடி கடனில் மூழ்கடித்துவிட்டுச் சென்றிருந்தது.

தமிழகத்தின் கடன் அளவு மார்ச் 2021 நிலவரப்படி 4,85,502.54 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டிருப்பதாக தமிழ் நாட்டின் நிதி அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தனது வரவு - செலவுத் திட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அதே போல அடுத்த மார்ச் 2022 ஆம் ஆண்டில் தமிழகத்தின் கடன் 5,70,189.29 கோடி ரூபாயாக அதிகரிக்கலாம் எனவும் அவ்வுரையில் குறிப்பிட்டு இருந்தார்.

முதலமைச்சர் ஸ்டாலின் 30 நாட்களில் காலம் காலமாக இருந்து வந்த தமிழ்நாட்டு அரசியல் கலாசாரத்தை மாற்றி வருகிறார்.

(தொடர்ச்சி 18ம் பக்கம்)



# கூத்தின் நாயகன் பேராசிரியர் மௌனகுரு அவர்களைப் போற்றுவோம்

- க. வாகீசர் (கனடா)




**தா**ன் சிறுவனாக படித்த பாடசாலை பின் நாளில் பல்கலைக் கழகமாகி, அப் பல்கலைக் கழகத்திலே பேராசிரியராக, துறைத் தலைவராக, பீடாதிபதியாக வருகின்ற பாய்க்கியம் எளிதில் எவருக்கும் கிடைக்காது. நான் அறிந்த வரையில் ஒருவர் தான் அந்த பாக்கியசாலி. அவர்தான் மௌஸ் என்று மாணவர்களால் செல்லமாக அழைக்கப்படுகின்ற பேராசிரியர் மௌனகுரு அவர்கள்.

கிழக்கு பல்கலை கழகம் பற்றி சொல்லும்போது பேராசிரியர் மௌனகுரு என்கின்ற பெரும் ஆளுமையை தவிர்க்க முடியாது. ஏற்கனவே அவரை எனக்கு யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் தெரியும். எனினும் அறிமுகம் இல்லை. நான் கிழக்கு பல்கலைக் கழகத்துக்கு சென்ற நேரம் அவர்தான் கலைப் பீட பீடாதிபதி. வழுக்கை அற்ற வெண்ணிற முடி நிறைந்த தலை. முற்றாக சவரம் செய்யப்பட்ட, அழகிய கண்ணாடி அணிந்த, புன் சிரிப்புடன் கூடிய, ஒரு முதிர்ந்த கல்வியாளருக்கே உரிய முகத்தோற்றம். முதன் முதலில் கிழக்கு பல்கலைக் கழகத்தில் ஆசிரியர்கள் கூடுகின்ற பொது அறையில் (STCR) அவரை காண்கிறேன். ஒவ்வொரு பத்திரிகைகளையும் புரட்டி படித்துக் கொண்டு இருக்கின்றார். இடையில் கையில் உள்ள பத்திரிகையை வைத்து விட்டு ஏதோ யோசிக்கிறார். அந்த இடையில் என்னை நானே அவருக்கு அறிமுகம் செய்கின்றேன். “இரண்டு மூன்று புதியவர்கள் விஞ்ஞான பீடத்திற்கு தெரிவாகி இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். நல்வரவு, வாழ்த்துக்கள்” என்று இனிய தமிழில் சொன்னார். மகிழ்ச்சி அடைந்தேன்.

பாடசாலை போன்று காட்சி அளித்த கிழக்குப் பல்கலைக் கழகத்தை ஒரு வளம் மிக்க அழகான பல்கலைக் கழகமாக மாற்றியமைத்ததில் பேராசிரியர் மௌனகுருவின் பங்களிப்பு மிக அதிகம். குறிப்பாக இரு தடவைகள் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதியாக இருந்து, அப் பீடத்தை உயர் தரத்திற்கு உயர்த்தியதில் அவரின் பங்களிப்பு பதிவு செய்யப் படவேண்டியது ஒன்று.

மட்டக்களப்பில் உள்ள கூத்துக் கலைகள் சடங்குகள் பற்றி இன்று கிழக்கு பலகலை கழகத்தை சேர்ந்த பலரும் ஆர்வத்துடன் ஆய்வுகள் செய்கின்றனர். இதற்கு கிழக்கு பல்கலைக் கழகத்தில் கால்கோள் இட்டவர் பேராசிரியர் மௌனகுரு தான் என்பதில் மாற்றுக் கருத்து இருக்காது என்றே நம்புகிறேன். உலக நாடக விழா கிழக்கு பல்கலைக் கழகத்தில் நடாத்துவதற்கு பேராசிரியரின் பங்களிப்பும் அதிகம் இருந்தது. அண்ணாவி மார்களையும், இதர கலைஞர்களையும் உலக நாடக தினத்துக்கு அழைத்து அவர்களை வெளி உலகம் அறியும் படி செய்ததில் முதன்மை பெறுபவர் பேராசிரியர் அவர்களே.



பால சுகுமார், ஜெய்சங்கர் என்ற இரண்டு பெரும் ஆளுமைகள் உருவாகவும், கிழக்கு பல்கலைக் கழகத்துக்கு அவ் ஆளுமைகளின் பங்களிப்பு கிடைப்பதற்கும் பேராசிரியர் மௌனகுரு அவர்களே காரணம் என நான் நினைப்பதுண்டு. இம் மூன்று திறமைசாலிகளினால்தான் கிழக்கு பல்கலைக் கழகத்தில் நாடகமும் அரங்கியலும் என்கிற துறையை நாடி அதிகளவு மாணவர்கள் வந்தமைக்கு காரணம் என்பது எனது தனிப் பட்ட அவதானிப்பு. இம் மூவரும் ஒருவருக்கு ஒருவர் ஒத்தாசையாக இருந்த காலத்தில் உருவான புதியதொரு வீடு, இராவணேசன், வேடனை உச்சிய வெள்ளைப் புறாக்கள், செம்பவளக் காளி, கொங்கைத் தீ, நவீன பஸ்மாசுரன், பிள்ளை அழுத கண்ணீர் போன்ற நாடகங்கள் விஞ்ஞான பீடத்தை சேர்ந்த என்போன்றவர்களையும் கலைத்துறையை நோக்கி இழுத்தது மட்டுமல்ல, பல கலைத்துறை மாணவர்கள் மட்டக்களப்பு கலை கலாச்சாரம் பற்றி ஆய்வுகளை மேற்கொள்ளவும் காரணமாக இருந்தது என்றால் அது மிகை இல்லை.

பேராசிரியரினால் கிழக்கு பல்கலைக் கழகத்தில் உருவான இன்னிய அணி, இன்று இந்தியா, கனடா, நோர்வே, சுவிஸ் போன்ற நாடுகளிலும் நடத்தப் படுகின்றமை கிழக்கு பல்கலைக் கழகத்திற்கும் பெருமை சேர்ப்பதாக உள்ளது. இசையும், நடனமும் மட்டுமே கற்பிக்கப் பட்டு வந்த சுவாமி விபுலானந்தர் இசை நடனக் கல்லூரியை கிழக்கு பல்கலைக் கழகத்துடன் இணைத்து இசை, நடனம், நாடகம், ஓவியம் போன்ற பல அழகியல் பாடங்களை பயிற்றுவிக்கும் சுவாமி விபுலானந்தர் அழகியல் கற்கைகள் நிறுவனமாக மாற்றியதிலும் பேராசிரியரின் பங்கு அளப்பரியது. அதன் தலைவராகவும் இருந்து அதன் தரத்தையும் உயர்த்திய பெருமகன் மௌனகுரு சேர் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

இராவணன் போன்றே எட்டுத்திக்கிலும் புகழ்கொண்ட எங்கள் பேராசானுக்கு இன்று பிறந்த நாள். இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து தமிழன் கலை வளர மேலும் பல தொண்டுகள் செய்ய இறைவன் அருள வேண்டும்.

அண்டங்கள் கண்டங்கள் ஆகாசமெங்கணும்
மிண்டு புகழ் கொண்டு வாழ்வோன்
குலையா உளத்தினன் சலியா மனத்தினன்
நிலையான பேர் கொண்டவன்
அறிவுத் திறத்தினால் அன்பு மனத்தினால்
அன்பர் புடை சூழ்ந்தவன்
ஆண்டவன் அருளுடன் ஆசிகள் பல பெற்று
வாழ்கவே பல்லாண்டு

*அன்புடன், க. வாகீசர்*




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# பாரிய மரணங்களுக்கு மத்தியில், கோவிட் நோய் தடுப்புஸீசி உலகளவில் பில்லியனர்களை உருவாக்கியுள்ளது

**Bill Van Auken**

*கோவிட்-19 தடுப்பூசிகளின் உற்பத்தியிலிருந்து பெறப்பட்ட இலாபங்கள், 19.3 பில்லியன் டாலர் நிகர செல்வவளத்துடன் ஒன்பது புதிய பில்லியனர்களை உருவாக்கி உள்ளன. அதேபோல 32 பில்லியன் டாலர் தடுப்பூசி உற்பத்தி பெருநிறுவனங்களுடன் சம்பந்தப்பட்ட ஏற்கனவே பில்லியனர்களாக உள்ள எட்டு பேரின் நிதிய முதலீடுகளையும் கொழிக்கச் செய்துள்ளன.*



மே 25, 2021, ஸ்ரீநகரில் உள்ள ஒரு தகன மேடை ஒன்றில், கோவிட்-19 ஆல் இறந்த ஒருவர் எரியும் நெருப்புக்கு அடுத்ததாக குடும்ப உறுப்பினர்கள் பிரார்த்தனை செய்கிறார்கள். [Foto: AP Photo/Dar Yasin]

உலகளாவிய பாரிய இறப்பு மற்றும் பொருளாதார வறுமைக்கு மத்தியில் வெறுப்பூட்டும் அளவுக்குத் தனியார் செல்வங்களின் திரட்சியை அம்பலப்படுத்தும் இந்த அதிர்ச்சியூட்டும் புள்ளிவிவரங்கள், ஜி20 உலகளாவிய சுகாதார உச்சி மாநாட்டுக்கு முன்னதாக, நிவாரண உதவி அமைப்புகளின் ஒரு கூட்டமைப்பு தயாரித்த ஓர் அறிக்கையில் வெளியிடப்பட்டன.

மொடேர்னா மற்றும் ஃபைசர் நிறுவன தலைமை நிர்வாக அதிகாரிகள் மற்றும் முதலீட்டாளர்களாக மாறிய பில்லியனர்களிடம் புதிதாக குவிந்த செல்வத்தைக் கொண்டு "குறைந்த வருமான நாடுகள்" என்று அழைக்கப்படும் நாடுகளின் மொத்தம் 780 மில்லியன் மக்களுக்கு 1.3 முறை தடுப்பூசி போடலாமென அந்த அறிக்கை மதிப்பிடுகிறது.

முன்பிருந்த பில்லியனர்களால் கடந்தாண்டு குவித்துக் கொள்ளப்பட்ட 32 பில்லியன் டாலர்களைக் கொண்டு இந்தியாவிலுள்ள மொத்தம் 1.4 பில்லியன் மக்களுக்கும் முழுமையாக தடுப்பூசி போட நிதியளிக்க முடியும். அந்நாடு கோவிட்-19 பேரழிவின் புதிய குவிமையமாக ஆகியுள்ளது, அங்கே நோய்தொற்றுக்கள் கடந்த இரண்டு மாதங்களில் இரட்டிப்பாகி உள்ளன. பதிவு செய்யப்பட்ட தினசரி இறப்புக்கள் 4,000 ஆக உயர்ந்துள்ளதுடன், மருத்துவ சிகிச்சை அமைப்புமுறை பெரும் அழுத்தத்தில் உள்ளது, சுடுகாடுகளும் மின்மயானங்களும் சடலங்களால் நிரம்பி வழிகின்றன.

மொடேர்னாவின் தலைமை நிர்வாக அதிகாரி ஸ்டெபேன் பன்செல் ($4.3 பில்லியன்) BioNTech நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் இணை நிறுவனர் உகுர் சாஹின் ($4 பில்லியன்) நோயெதிர்ப்புசக்தி வல்லுனரும் மொடேர்னாவின் ஸ்தாபக முதலீட்டாளருமான டிமோதி ஸ்பிரிங்கர் ($2.2 பில்லியன்) மொடேர்னாவின் தலைவர் நௌபர் அஃபியன் ($1.9 பில்லியன்) ஆகியோர் தடுப்பூசி நிறுவன புதிய பில்லியனர்களில் உள்ளடங்குவர்.

தேசிய சுகாதார நிறுவனங்களுக்கும் (NHS) பல்கலைக்கழக ஆய்வக ஆராய்ச்சிகளுக்கும் அரசு வழங்கிய நிதியுதவி, அத்துடன் தடுப்பூசிகளின் கண்டுபிடிப்பு மற்றும் உற்பத்திக்காக பொது நிதியிலிருந்து வழங்கப்பட்ட சுமார் 10.5 பில்லியன் டாலர் ஆகியவை தான் இந்த தனிநபர்கள் குவித்துக் கொண்ட இந்த அளப்பரிய செல்வத்திற்கான அடித்தளமாகும்.

சமூகரீதியாக உருவாக்கப்பட்ட விஞ்ஞான சாதனைகளை தனியார் கைப்பற்றியமை, Moderna, Pfizer-BioNTech நிறுவனங்களையும் இதர நிறுவனங்களையும், தடுப்பூசிகளின் விலையை உற்பத்தி செலவுகளை விட குறைந்தபட்சம் 20 சதவீதம் அதிகமாக உயர்த்தவும், கடுமையாக தடுப்பூசி தேவைப்படும் நாடுகள் மலிவான மருந்துகளை உற்பத்தி செய்வதில் இருந்து அவற்றை தடுக்கவும் அனுமதித்துள்ளது.

அதற்கும் மேலாக, மிகப்பெரும் மருந்து - உயிரிதொழில்நுட்ப நிறுவன பில்லியனர்களின் சொத்துக்கள், பெருமளவில் அரசு பணம் பாய்ச்சப்படுவதிலிருந்து உயர்ந்து வரும் பங்குச் சந்தையால் வீங்கிப் புடைத்துப் போயுள்ளன. சான்றாக, மொடேர்னா நிறுவன பங்கு விலைகள் கடந்தாண்டில் நான்கு மடங்கு அதிகரித்துள்ளது.

மொடேர்னா மற்றும் ஃபைசர் நிறுவன தலைமை நிர்வாக அதிகாரிகளும் முதலீட்டாளர்களும் மிகவும் நேரடியாக பயனடைந்தவர்களில் உள்ளடங்கி இருக்கலாம் என்றாலும், "தொற்றுநோயிலிருந்து இலாபமடைந்தவர்கள்" அவர்கள் மட்டுமே இல்லை. கடந்த மாதம் ஃபோர்ப்ஸ் இதழின் ஆண்டறிக்கை விவரித்தவாறு, உலக பில்லியனர்களின் ஒட்டுமொத்த செல்வவளம் கடந்தாண்டு 8 ட்ரில்லியன் டாலரில் இருந்து 13.1 ட்ரில்லியன் டாலராக 60 சதவீதத்திற்கும் அதிகமாக அதிகரித்தது. உலக வங்கியின் தகவல்படி, இந்த தொற்றுநோயும் அதன் சமூக - பொருளாதார விளைவுகளும் கடந்தாண்டு உலகளவில் குறைந்தபட்சம் 255 மில்லியன் முழுநேர வேலைகளை துடைத்தெறிந்த நிலையில் மற்றும் இது தொடரும் என்கின்ற நிலையில், பில்லியனர்களின் செல்வவள அதிகரிப்பு 2021 இல் இன்னும் 150 மில்லியன் மக்களைத் தீவிர வறுமைக்குள் தள்ளும்.

தடுப்பூசி உற்பத்தி ஆளும் தன்னலக் குழுவின் ஒரு சிறிய அடுக்கிற்குப் பெரும் செல்வத்தை கொடுத்துள்ள அதேவேளையில், உலக மக்களில் பெரும்பாலானவர்களுக்கு தடுப்பூசிகள் கிடைக்கவில்லை. அவற்றின் வினியோகம் தேசியவாதத்தாலும், இலாபத்திற்காகவும் மற்றும் இந்த தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்கான எந்தவொரு ஒருங்கிணைந்த சர்வதேச நடவடிக்கையையும் பிரதான ஏகாதிபத்திய சக்திகள் அப்பட்டமான நாசப்படுத்துவதனாலும் முடக்கப்பட்டுள்ளது.

கோவிட்-19 தடுப்பூசிகள் மீதான காப்புரிமைகளை நீக்குவது உற்பத்தி ஏகபோகங்களைத் திறன்பட முறிக்கும் என்பதால், உலக வர்த்தக அமைப்பின் அதற்கான அழைப்புகளைப் பெருநிறுவனங்களும் நிதி மூலதனமும் மூர்க்கமாக எதிர்த்துள்ளன. தொழில்நுட்பத்தைக் கைமாற்றுவதற்கும் ஏனைய நாடுகளில் உற்பத்தி கொள்ளளவை அதிகரிப்பதற்கும் பல மாதங்களாகும் என்பதால் காப்புரிமை நீக்கம் நடைமுறைக்கு பயன்படாதென நிறுவனங்களும் அவற்றின் தரகர்களும் வலியுறுத்தி உள்ளனர். இந்த வாதத்தை அவர்கள் பல மாதங்களாக முன் வைத்து வருகிறார்கள், அதேவேளையில் இந்நாடுகளின் மக்களோ அவர்களது உயிர்களைக் காப்பாற்றும் தடுப்பூசிகள் தடுக்கப்பட்டிருப்பதால் இறந்து கொண்டிருக்கிறார்கள்.

உலக சுகாதார அமைப்பின் 74 வது உலக சுகாதாரப் பேரவை திங்களன்று தொடங்கிய போது, உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் டெட்ரோஸ் அதனோம் கெப்ரேயசஸ் குறிப்பிடுகையில், இந்தாண்டில் இதுவரையில் கொரோனா வைரஸ் நோயாளிகளின் எண்ணிக்கை 2020 ஆம் ஆண்டின் மொத்த நோயாளிகள் எண்ணிக்கையை விஞ்சிவிட்டது, அதாவது, தற்போதைய நிலவரப்படி பார்த்தால், கோவிட்-19 இறப்புக்களின் எண்ணிக்கை அடுத்த மூன்று வாரங்களுக்குள் 2020 இன் மொத்த இறப்பு எண்ணிக்கையையே விஞ்சிவிடும் என்றார்.

உலக சுகாதார நிறுவனம் கடந்த வாரம் வெளியிட்ட ஓர் அறிக்கையில், உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களில் பிரதிபலிப்பதை விட மூன்று மடங்கு அதிகமானவர்கள் இந்த தொற்றுநோயால் இறந்திருக்கலாம் என்று மதிப்பிட்டது. இது, உண்மையான உலகளாவிய இறப்பு எண்ணிக்கையை 10 மில்லியனுக்கும் அதிகமாக கொண்டு செல்லும்.

உலகளாவிய தடுப்பூசி விநியோகத்தில் உள்ள பரந்த சமத்துவமின்மையைச் சுட்டிக்காட்டிய கெப்ரேயசஸ், "தற்போதைய இந்த தடுப்பூசி நெருக்கடி இந்த தொற்றுநோயை நீடிக்கச் செய்து கொண்டிருக்கும் ஒரு கண்டிக்கத்தக்க சமத்துவமின்மையாகும்," என்று அறிவித்தார். உலகின் 75 சதவீத தடுப்பூசிகள் வெறும் 10 நாடுகளில் மட்டுமே செலுத்தப்பட்டுள்ளன என்றவர் குறிப்பிட்டார்.

"இதை சொல்ல எந்த இராஜாங்க வழியும் இல்லை. உலகின் பெரும்பாலான தடுப்பூசிகளை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நாடுகளின் ஒரு சிறிய குழு, உலகின் மற்ற பகுதிகளின் தலைவிதியைக் கட்டுப்படுத்துகிறது," என்றார், அதேநேரத்தில் சமமான தடுப்பூசி விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட உலகளாவிய நிறுவனமான COVAX க்கு "பெரிதும் போதுமானளவுக்கு" தடுப்பூசி மருந்துகள் "அனுப்பப்படவில்லை" என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

2021 இன் இறுதிக்குள் இரண்டு பில்லியன் டோஸ் மருந்து வினியோகிப்பதே COVAX இன் அறிவிக்கப்பட்ட இலக்காக இருந்தது. ஆனால் இம்மாத தொடக்கம் வரையில், 125 நாட்டு மொத்த மக்கள்தொகையில் 1 சதவீதத்தினருக்கு ஒருமுறை தடுப்பூசி போடும் அளவை விட குறைவாக, அந்நாடுகளுக்கு வெறும் 70 மில்லியன் அளவை மட்டுமே அதனால் வினியோகிக்க முடிந்திருந்தது.

உலக மக்கள்தொகையில் 17 சதவீதத்தைக் கொண்ட ஆபிரிக்கா, உலகெங்கிலுமான தடுப்பூசிகளில் வெறும் 1.5 சதவீதத்தை மட்டுமே கணக்கில் கொண்டுள்ளது. சோமாலியாவின் 15 மில்லியன் மக்களுக்கு வெறும் 300,000 டோஸ் மருந்தையும், நைஜரின் 23 மில்லியன் மக்கள்தொகைக்கு 355,000 டோஸ் மருந்தையும், லிபியாவின் 6.8 மில்லியன் மக்களுக்கு 175,000 டோஸ் மருந்தையும் மட்டுமே COVAX ஆல் வினியோகிக்க முடிந்துள்ளது. மத்திய கிழக்கில் 39 மில்லியன் ஈராக்கியர்களில் வெறும் 336,000 பேருக்கு மட்டுமே தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது, 43 மில்லியன் அல்ஜீரியர்களில் 364,800 பேர்களுக்கும், ஆக்கிரமிப்பு பிராதியங்களின் 4.7 மில்லியன் பாலஸ்தீனியர்களில் 164,000 பேர்களுக்கும் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. வறிய இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் இதுபோன்ற புள்ளிவிபரங்களே மேலோங்கி உள்ளன, சான்றாக, பொலிவியா அதன் 12 மில்லியன் மக்களுக்காக வெறும் 421,000 டோஸ் மருந்துகளை மட்டுமே பெற்றுள்ளது ஆசியாவில், அங்கே பிலிப்பைன்ஸ் அதன் 108 மில்லியன் மக்களுக்கு வெறும் 2.6 மில்லியன் டோஸ் மருந்துகளை மட்டுமே பெற்றுள்ளது.

ஆரம்பத்தில் இருந்தே COVAX இக்குத் தடுப்பூசிகள் வழங்கப்படவில்லை, வாஷிங்டன் முன்னணியில் இருக்க பிரதான ஏகாதிபத்திய சக்திகள் அந்த சர்வதேச அமைப்பைத் தவிர்த்து விட்டு ஃபைசர், மொடர்னா மற்றும் ஏனைய நிறுவனங்களிடம் இருந்து தடுப்பூசிகளில் பெரும்பங்கைத் தாங்களே கொள்முதல் செய்து கொள்வதற்காக ஒப்பந்தங்கள் செய்து கொண்டதால், சமமாக விநியோகிப்பதற்கான அந்த அமைப்பின் நோக்கம் நசுக்கப்பட்டது.

இந்திய அரசாங்கத்தின் சொந்த கொள்கைகளால் எரியூட்டப்பட்டு இந்த தொற்றுநோய் கட்டுப்பாடின்றி அதிகரித்ததற்கு, உலகின் மிகப்பெரிய தடுப்பூசி உற்பத்தியாளரான இந்தியாவின் செரம் அமைப்பின் (SII) அனைத்து ஏற்றுமதிகளையும் நிறுத்துமாறு இந்திய அரசாங்கம் உத்தரவிட்டதன் மூலம், இந்த தடுப்பூசி தேசியவாதத்தின் படுமோசமான விளைவுகள் இன்னும் கூடுதலாக தீவிரமாகி உள்ளன. இதன் விளைவாக, முதல் கட்ட தடுப்பூசி போட்டுக் கொண்ட உலகின் மிக வறிய நாடுகளின் பத்து மில்லியன் கணக்கான மருத்துவப் பணியாளர்களுக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசி கிடைக்காமல் போகும்.

அமெரிக்காவும் ஐரோப்பிய ஏகாதிபத்திய சக்திகளும் பெருங்கடலில் ஒரு துளி என்றளவுக்கு மிகக் குறைவான தடுப்பூசிகளுக்கு வாக்குறுதிகளை அளித்து இந்த நெருக்கடிக்கு விடையிறுத்துள்ளன. பைடென் நிர்வாகம் 80 மில்லியன் டோஸ் மருந்துகளுக்கு உறுதியளித்துள்ளது, ஐரோப்பிய ஒன்றியம் 100 மில்லியன் டோஸ் மருந்துகளுக்கு உறுதியளித்துள்ளது.

உலகளவில் நோய்தொற்றுகள் மற்றும் இறப்புக்கள் அன்றாடம் புதிய உச்சத்தை எட்டி வருகையில், இந்த விடையிறுப்பு ஈவிரக்கமற்றவையாக மட்டும் தெரியவில்லை, மாறாக பகுத்தறிவற்ற சொல்லப்போனால் பைத்தியக்காரத்தனமானவும் தெரிகிறது. உலகளாவிய இந்த கொரோனா வைரஸ் தொற்றுக்கு தேசிய அடிப்படையில் முடிவில்லை. உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் கெப்ரேயசஸ் திங்களன்று எச்சரித்தது போல, "எந்த நாடும், அதன் தடுப்பூசி விகிதம் எதுவாக இருந்தாலும், அது தப்பித்துவிடலாமென நினைக்க முடியாது." இந்தியா, பிரேசில் மற்றும் ஏனைய நாடுகளிலும் இந்த வைரஸ் கட்டுப்பாடின்றி பரவி வருகின்ற நிலையில், தடுப்பூசியையே எதிர்க்கும் புதிய வைரஸ் வகைகள் உருவாகும் அச்சுறுத்தலும் இருக்கிறது.

உலகளவில் அதிஅவசியமாக தேவைப்படும் தடுப்பூசி நடவடிக்கைக்கு முதலாளித்துவ அரசாங்கங்கள் மற்றும் ஆளும் வர்க்கங்களின் குற்றமான அலட்சியம், இந்த தொற்றுநோய்க்கு அவற்றின் ஒட்டுமொத்த கொலைகார விடையிறுப்புடன் ஒத்திசைந்துள்ளது. அவை, ஆரம்பத்தில் இருந்தே, மனித உயிரைப் பாதுகாப்பதை, வங்கிகள் மற்றும் பெருநிறுவனங்களின் இலாப நலன்களுக்கும் மற்றும் தனது கரங்களில் அளவில்லா செல்வத்தை குவித்துக் கொண்டுள்ள ஓர் ஆளும் தன்னலக்குழுவிற்கும் கீழ்ப்படியச் செய்துள்ளன.

உயிர் உட்பட உழைக்கும் மக்களின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாப்பதற்கு முன்நிபந்தனைகளாக, முதலாளித்துவ தேசிய - அரசு முறையை ஒழித்து, நிதிய தன்னலக்குழு திரட்டிய செல்வத்தைப் பறிமுதல் செய்து, உற்பத்தி சாதனங்கள் மீதான தனியுடைமையை முடிவுக்குக் கொண்டு வரவேண்டிய அவசியத்தை இந்த தொற்றுநோய் அப்பட்டமாக எடுத்துக்காட்டி உள்ளது.

கோவிட்-19 தொற்றுநோய்க்கு முதலாளித்துவ விடையிறுப்பால் தோற்றுவிக்கப்பட்டுள்ள இந்த சமூகப் பேரழிவினால் எரியூட்டப்பட்டு, உலகெங்கிலுமான தொழிலாளர்கள் போராட்டங்களில் நுழைந்து வருகின்றனர். இந்தப் போராட்டங்கள், தன்னலக்குழுக்களது இலாபங்கள் மற்றும் செல்வவளத்தை விட மனித தேவைகளை முன்நிறுத்தும் ஒரு சமூகத்திற்கான ஒரு பொதுவான போராட்டத்தில் தேசிய எல்லைகளைக் கடந்து தொழிலாளர்களை ஐக்கியப்படுத்தும் மற்றும் முதலாளித்துவத்தின் போர் முனைவுக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தின் சர்வதேச ஐக்கியத்தை முன்னெடுக்கும், ஒரு சோசலிச மற்றும் சர்வதேசிய வேலைத்திட்டத்தைக் கொண்டு ஆயுதபாணியாக்கப்பட வேண்டும்.

**நன்றி: உலக சோசலிச இணையத்தளம்**

# தமிழ்நாட்டின் அரச இயந்திரம் இதே வினைத்திறனோடு இயங்கினால் திமுக ஆட்சி அடுத்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக நீடிக்கும்!

*(15ம் பக்கம் தொடர்ச்சி)*

எதிர்க்கட்சியை எதிரிக் கட்சியாக நடத்தாமல் எதிர்க்கட்சித் தலைவர்களுக்குரிய மரியாதையைக் கொடுத்து வருகிறார். முன்னைய ஆட்சியில் அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஸ்டாலினுக்கு அரச நிகழ்ச்சிகளில் 7 ஆவது வரிசை ஒதுக்கப்பட்டிருந்தது. இப்போது அதிமுக தலைவர்களுக்கு முன்வரிசை ஒதுக்கப்படுகிறது.

முக்கிய விடயங்களில் தொழில்சார் நிபுணர்களை மட்டுமல்ல எதிர்க்கட்சித் தலைவர்களையும் அழைத்து ஆலோசனை செய்கிறார். எடுத்துக்காட்டு கொரோனா தொடர்பான ஆலோசனைக் கூட்டத்துக்கு முன்னாள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சி விஜயபாஸ்கர் அழைக்கப்பட்டிருந்தார்.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்" என்ற திருக்குறளுக்கு ஒப்ப தகுதியானவர்களையும் திறமைசாலிகளையும் ஸ்டாலின் அமர்த்தியுள்ளார். நல்வாழ்வுத்துறை என்றால் அந்த அமைச்சின் அமைச்சர் மருத்துவராக இருக்க வேண்டும் என்ற மரபை மாற்றி முன்னாள் சென்னை மேயராக இருந்த மா. சுப்பிரமணியம் (சைதாப்பேட்டை) அவர்களுக்கு அந்தப் பதவி வழங்கப்பட்டுள்ளது. அதே போல் பழனிவேல் தியாகராசன் (மதுரை மத்தி) அவர்களுக்கு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சு கொடுக்கப்பட்டுள்ளது. இவர் தேசிய தொழில்நுட்பக் கழகம், திருச்சி (பி.டெக்) ப:.பலோ பல்கலைக்கழகம், நியூயோர்க்(முனைவர்) எம்.ஐ.டி முகாமைத்துவப் பள்ளி(முதுகலை) பட்டம் பெற்றவர்.

முதலமைச்சர் ஸ்டாலின் தனக்கென 4 முக்கிய தனிச் செயலாளர்களை அமர்த்தியுள்ளார். இவர்கள் முன்னைய ஆட்சியாளர்களால் ஒதுக்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழக அரசின் தலைமை செயலாளராக வெ. இறையன்பு நியமிக்கப்பட்டுள்ளார். இவர் திறமையான அதிகாரியாக மட்டுமின்றி, பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் அறியப்பட்டவர். முன்னாள் முதல்வர் கருணாநிதியின் தனிச் செயலராக பணிபுரிந்த இறையன்பு, தற்போது ஸ்டாலின் தலைமையிலான அரசின் பிரதான செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முதலமைச்சர் ஸ்டாலின் முன்னைய பொன்னாடை மற்றும் பூங்கொத்துக் கொடுக்கும் கலாசாரத்தை ஒழித்துவிட்டார். அவற்றுக்குப்பதில் புத்தகங்கள் கொடுக்குமாறு அறிவுறுத்தியுள்ளார். இதனால் எழுத்தாளர்கள், நூல்பதிப்பாளர்கள் நன்மை பெறுவர்.

தமிழ்நாடு முதலமைச்சர்கள் வெளி மாவட்டங்களுக்கு அரச முறையாகப் போனாலும் நூற்றுக் கணக்கில் வரவேற்புத் தட்டிகள், மின்விளக்குகள், சாலை நெடுகக் கொடிகள், தார தப்பட்டைகள் எனக் கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் கட்சித் தொண்டர்கள் அசத்துவார்கள். ஸ்டாலின் "நான் அரசமுறைச் சுற்றுப் பயணத்தில் வருகிறேன். கட்சித் தொண்டர்களைப் பார்க்க மாட்டேன், மாலை மரியாதை வேண்டாம்" என அறிவித்துவிட்டார்.

ஸ்டாலின் அவர்களது பதவியேற்பு நிகழ்ச்சியை ஆளுநர் மாளிகையில் ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் முன்னிலையில் மிக எளிய முறையில் வைத்துக் கொண்டார். கொரோனா ஒரு காரணம் என்றாலும் ஸ்டாலின் பொதுவாக ஆடம்பரத்தை விரும்பாதவர்.

ஸ்டாலின் பதவியேற்குமுன் தமிழ்நாட்டின் மூத்த அரசியல் தலைவர்களான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சங்கரையா, த கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் நல்லகண்ணு, எம்ஜிஆர் கழகத் தலைவர் ஆர்.எம். வீரப்பன் போன்றோரை அவர்கள் இல்லத்துக்கு நேரில் சென்று பொன்னாடை போர்த்தி வாழ்த்துக்களைப் பெற்றுக் கொண்டார். தன்னைப் பெற்ற அன்னை தயாளு அம்மாளிடம் வாழ்த்துப் பெற்றார். ஏன் தான் குடியிருக்கும் முன் வீட்டுக்காரரிடம் சென்று வாழ்த்துக்களைப் பெற்றுக் கொண்டார்.

முன்னாள் அமைச்சர் ஜெயலலிதாவின் படத்தை அலுவலகங்களில் இருந்து அகற்றப்படக் கூடாது என உத்தரவு பிறப்பித்துளார். அது மட்டுமல்ல அம்மா உணவகம் தொடர்ந்து நடக்க வேண்டும் எனப் பணித்துள்ளார்.

எல்லாவற்றுக்கும் மேலாக எந்தப் பந்தாவும் இல்லாமல், கால நேரம் இல்லாது கொரோணா நோயாளிகள் இருக்கும் மருத்துவமனைகளுக்கு நேரில் சென்று அங்குள்ள நிறைகுறைகளை அறிந்து கொள்கிறார்.

மே 07, 2021 அன்று தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றது முதல் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் தமிழ் நாட்டின் மீதும் தமிழ் மக்கள் மீதும் உண்மையான பற்றோடு திறம்பட வினையாற்றி வருகிறார். தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருகிறார்.

பதவியேற்ற முதல் நாளே ஐந்து கோப்புக்களில் கையெழுத்திட்டார். கொரோனா நிவாரண நிதியாக ரூபாய் 4, 000 வழங்கப்படும் என்று அறிவித்தார். இதன் மூலம் 2.07 கோடி குடும்ப அட்டைத்தாரர்களுக்கு ரூபாய் 4,153.39 கோடி செலவில் நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது.

ஆவின் பால் விலை லிட்டருக்கு 3 ரூபாயாக குறைக்கப்பட்டது.

அனைத்து மகளிரும் கட்டணமில்லாமல் அரசு பேருந்தில் பயணம் செய்யலாம் என்ற கோப்பில் கையெழுத்திட்டார். இந்தச் சலுகை இப்போது திருநங்கையர்களுக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

தேர்தல் காலத்தில் மக்கள் கொடுத்த மனுக்கள் மீது 100 நாட்களுக்குள் தீர்வு காண "உங்கள் தொகுதியில் ஸ்டாலின்' திட்டத்தை செயல்படுத்த புதிய துறையை உருவாக்குவதற்கு வகை செய்யும் கோப்பில் முதலமைச்சர் கையெழுத்திட்டார்.

தனியார் மருத்துவமனையில் மருத்துவம் பெறும் கொரோனா தொற்றாளர்களின் மருத்துவக் கட்டணத்தை அரசு செலுத்தும் என ஐந்தாவதாக கோப்பில் கையெழுத் திட்டார்.

ஸ்டாலின் அனைத்து சட்டமன்றக் கட்சித் தலைவர்களுடன் ஆலோசனை மேற்கொள்கிறார். கொரோனா நிவாரண நிதிக்கு "உலகத் தமிழர்களே, உயிர்காக்க நிதி வழங்குவீர்!" என்று காணொலி மூலம் வேண்டுகோள் விடுத்தார். திமுக கொரோனா நிவாரண நிதிக்கு ரூபா1 கோடி வழங்கும் என அறவித்து அதற்கான காசோலை நிதியமைச்சரிடம் வழங்கப்பட்டது.

முதலமைச்சரின் கொரோனா நிவாரண நிதிக்கு இதுவரை (யூன் 07) ரூபா 280.20 கோடியை எட்டியுள்ளது. இதில் மருந்து, மருத்துவ உபகரணங்கள் மற்றும் உயிர்வளிக் கலங்கள் வாங்க ரூபா 141.40 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது.

மறைந்த கரிசல் எழுத்தாளர் கி.ராஜநாரயணன் (கி.ரா.) அவர்கள் படித்த இடைசெவல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை அரசு சார்பில் பழமை மாறாமல் புதுப்பிக்கவும் அவரது நினைவைப் போற்றும் வகையில் புகைப்படங்கள், படைப்புகள் வைத்திடவும், அவருக்கு கோவில்பட்டியில் அரசு சார்பில் சிலை அமைக்கவும் உத்தரவிட்டதுடன், அவரது மறைவையொட்டி அவரது உடல் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்ய உத்தரவிட்டார்.

திருப்பூர் மாவட்டம், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கொரோனாதொற்றால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு வழங்கப்படும் ஊட்டச்சத்துமிக்க உணவுகளின் தரத்தை ஆய்வு செய்தார். கோவை மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் கோவை, திருப்பூர், நீலகிரி, ஈரோடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக்கூட்டத்தில் பங்கேற்று ஆலோசனை வழங்கினார். மேலும் ஈரோடு, பெருந்துறை, திருப்பூர், கோவை மாவட்டங்களில் கொரோனா நோய் பரவல் தடுப்பு ஆய்வுப் பணிகளை மேற்கொண்டார்.

இந்தியாவிலேயே முதல் முறையாக பி.பி.இ. கிட் கவச உடை அணிந்து கொரோனாவால் பாதிக்கப்பட்ட வர்களை நேரில் சந்தித்து நலம் விசாரித்த ஒரே முதலமைச்சரும் மு.க.ஸ்டாலின் அவர்கள் தான்.

கொரோனா தொற்றுக் காரணமாக இறக்க நேரிட்டால் அவர்களது வாரிசுகளுக்கு ரூபாய் 5 லட்சம் இழப்பீட்டுத் தொகை இதுவரை வழங்கப்பட்டு வந்தது. அதனை 10 இலட்சமாக உயர்த்தியும், கொரோனா நிவாரணத் தொகையினை 3,000 ரூபாயிலிருந்து 5 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கிடவும் உத்தரவிட்டார். திருநங்கைகளுக்கு ரூபா 2,000 கொரோனா நிவாரண நிதி வழங்க முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவிட்டார். இதன்மூலம், 11,449 திருநங்கைகள் பயனடைவார்கள். கொரோனாவால் பெற்றோரை இழந்த குழந்தைகளின் பெயரில் ரூபா 5 இலட்சம் வைப்பீடு வைக்கப்படும்.

கொரோனா தொற்றால் உயிரிழந்த 43 மருத்துவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூபா 25 இலட்சம் வழங்கப்படும். இரண்டாம் ஆம் அலை பெருந்தொற்றுக் காலத்தில் பணியாற்றி வரும் மருத்துவர்களுக்கு ஏப்ரில், மே, யூன் ஆகிய 3 மாத காலத்திற்கு ரூபா 30 ஆயிரம், செவிலியர்களுக்கு ரூபா 20 ஆயிரம், இதர பணியாளர்களுக்கு ரூபா15 ஆயிரம் ஊக்கத்தொகை வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

கொறொனா காலத்தில் கடமைமயில் இருந்த காவலர்களுக்கு ஊக்கத் தொகையாக 5 ஆயிரம் ரூபா வழங்க முதல்வர் உத்தரவிட்டார்.

அதேபோல், கொரானா ஊரடங்குக் கட்டுப்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் துன்பங்களைக் குறைக்கும் வகையில், அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.844.51 கோடி செலவில் 14 அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள திருக்கோயில்களில் நிலையான மாதச் சம்பளமின்றி பணியாற்றி வரும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், பூசாரிகள் மற்றும் இதர பணியாளர்களுக்கு கொரோனா கால நிவாரண உதவித் தொகையாக ரூபா 4 ஆயிரம், 10 கிலோ அரிசி மற்றும் 15 வகை மளிகைப் பொருட்கள் வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த 3 பத்திரிகையாளர்களின் குடும்பத்தினருக்கு தலா 10 இலட்சம் ரூபாயும், 2 மருத்துவர்கள், ஒரு காவல் ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர் மற்றும் ஒரு நீதிபதி ஆகியோரின் குடும்பத்தினருக்கு தலா 25 இலட்சம் ரூபாய் என மொத்தம் ஒரு கோடியே 55 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை நிவாரண உதவித் தொகையாக முதலமைச்சர் வழங்கினார்.

சென்னையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு நூலகம் அமைக்கப்பட்டு பல்வேறு தரப்பினர் பயன்பெற்று வருகின்றனர். அதே போன்று தமிழகத்தில் மற்றப்பகுதியினரும் பயன்பெற வேண்டும் என்ற எண்ணத்தில் 2 இலட்சம் சதுர அடிப் பரப்பளவில் நவீன வசதிகளுடன்கூடிய வகையில், மதுரையில் 70 கோடி ரூபாய் செலவில் கலைஞர் நினைவு நூலகம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

இயல், இசை, நாடகத்தில் சிறந்து விளங்கும் கலைஞர்களுக்கு கலைமாமணி விருது வழங்கு வதைப் போன்று தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவித்து சிறப்பிக்கும் வகையில் இலக்கிய மாமணி என்ற விருது உருவாக்கப்பட்டு, தமிழின் இலக்கியத்திற்கு வலு சேர்க்கும் மூன்று பேருக்கு ஆண்டுதோறும் இந்த விருது வழங்கப்படும் மற்றும் ஐந்து இலட்சம் ரூபாய் ரொக்கப்பரிசும் வழங்கப்படும் என்று அறிவித்ததுடன், தமிழ் நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர்கள் ஞானபீடம், சாகித்ய அகாடமி போன்ற தேசிய விருதுகள், மாநில இலக்கிய விருதுகள், புகழ் பெற்ற உலகளாவிய அமைப்புகளின் விருதுகள் பெற்றவர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்கள் வசிக்கும் மாவட்டத்தில் அல்லது விரும்பும் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு மூலமாக வீடு வழங்கப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார்.

கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்த முதலமைச்சர் ஸ்டாலாலின் எடுத்த பல்வேறு நடவடிக்கை காரணமாக நாளொன்றுக்கு 35,000 தொற்றாளர்கள் என்ற நிலைமாறி கடந்த 20 நாட்களில் தமிழகத்தில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 17,000க்கு கீழ் குறைந்துள்ளது. அதாவது,16,813 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், தமிழகத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 23,08,838ஆக அதிகரித்துள்ளது. அதே நேரம் இதுவரையில் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 20 லட்சத்து 91 ஆயிரத்து 646 ஆக அதிகரித்துள்ளது. கொரோனா காரணமாக இதுவரை 28,528 பேர் பலியாகியுள்ளனர்.

நில ஆக்கிரமிப்பாளர்களிடம் சிக்கியிருந்த, சென்னை வடபழநி ஆண்டவர் கோவிலுக்குச் சொந்தமான 300 கோடி ரூபாய் மதிப்பிலான நிலத்தை, அரசு இந்த வாரம் அதிரடியாக மீட்டுள்ளது. இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, ஆணையாளர் குமரகுருபரன் ஆகியோர் 10 ஆண்டுகளாக முடங்கியிருந்த கோவில் சொத்தை மீட்டுப் பத்திரப்படுத்தி உள்ளனர். அறநிலையத்துறை ஆணையத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கோயில்களின் சொத்துக்கள் இணையதளங்களில் வெளியிடப்பட்டுள்ளன.

எல்லாம் சரி. தேர்தல் காலத்தில் அதிமுக அரசு கருவூலத்தைக் காலி செய்துவிட்டது, இலட்சம் கோடி கடனை மக்கள் தலைகளில் சுமத்திவிட்டது என்று பரப்புரை செய்யப்பட்டது. இப்போது திமுக அரசின் நிவாரணத் திட்டங்கள் கடன் சுமையை மேலும் பல மடங்கு அதிகரிக்கப் போகிறது. அப்படியென்றால் நிதி நெருக்கடியை திமுக அரசு எப்படிச் சமாளிக்கப் போகிறது?

போதாக் குறைக்கு நிறைவேற்றப்பட வேண்டிய தேர்தல் வாக்குறுதிகள் இன்னும் ஏராளம் இருக்கின்றன. எடுத்துக் காட்டாக எரிபொருள் (பெட்ரல்) விலையை ரூபா 5 மற்றும் டீசலை 4 ரூபா ஆகவும் குறைப்போம் என்ற வாக்குறுதி இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை.

ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளான அதிமுக அமைச்சர்களை விசாரிக்க தனி நீதிமன்றம் அமைக்கப்படும், நீட் தேர்வை இல்லாது செய்ய முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே சட்டம் இயற்றப்படும், தமிழ்நாடு ஆறுகள் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்படும், முதல் கட்டமாக 500 இடங்களில் கலைஞர் உணவகம் அமைக்கப்படும் என்பது போன்ற வாக்குறுதிகள் திமுக தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ளன. சமையல் வாயு சிலிண்டர் ஒன்றுக்கு ரூ.100 மானியம் தரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நடுவண் அரசு என்றால் பணத்தை அச்சடித்துப் புழக்கத்தில் விடலாம். அல்லது மத்திய வங்கியிடம் கடன் வாங்கலாம். ஆனால் ஒரு மாநில அரசால் அப்படிச் செய்ய முடியாது.

இருந்தும் உயிரா? பணமா? என்று வரும்போது தமிழக அரசின் முதலமைச்சர் ஸ்டாலின் உயிருக்கு முக்கியத்துவம் அளிப்பது சரியே!

தமிழ்நாட்டின் அரச இயந்திரம் இதே வினைத்திறனோடு இயங்கினால் திமுக ஆட்சி அடுத்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக நீடிக்கும்!


Home Renovations
Coverall Group Inc.
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
Contact: Siva
416-706-8160


PRECONSTRUCTION HOUSES & TOWNHOUSES!
RE/MAX
Four Sixteen Whitby Condos
Old Colony Estates
Falconcrest Homes
Hillsborough
Andrin Homes
Anchor Woods
Regal Crest Homes
Anchor Woods By Andrin Homes
Andrin Homes
Hometown Sharon Village
Blue Sky
Fieldgate Homes
Universal City Condos 4
Chestnut Hill Developments
U.C. Homes
Tribute Communities
Cornell Rouge Homes
Forest Hill Homes Ltd.
On the Mark Towns
Angus Glen South Village Homes
Victory Green Homes
Nao Towns
Bala Logendralingam
REALTOR®
EXECUTIVE Award
100% Award
RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage
Office: 416-287-2222
647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9


*(சென்ற வார தொடர்ச்சி...)*

# கல்கியின் பொன்னியின் செல்வன்

*(அத்தியாயம் 15)*

## வந்தியத்தேவனின் தஞ்சைப் பயணம்

அப்போது அங்கு நின்றது தயிர் கூடையுடன் ஓடிய பெண்! அவள் 'ஏன் தாமதம் செய்கிறாய் அங்கே இளைய ராணியம்மாள் காத்துக் கொண்டு இருக்கிறார்' என்றாள். யார் இந்த இளைய ராணி நிச்சயமாக பழுவூர் இளைய ராணியாகத்தான் இருக்கும். அவளிற்கு மந்திரம் தெரியும் போல! என்று எண்ணியபடி தயிர் காரப் பெண்ணைத் தொடர்ந்து சென்றான். நிலா வெளிச்சத்தில் அந்தப் பெண் வந்தியத்தேவனை உற்றுப பார்த்துவிட்டு, 'என்ன அன்று வரும் போது கிழவானாக இருந்தாய் இன்று எப்படி இளைஞனாக மாறிவிட்டாய்' என்று கேட்க, வந்தியத்தேவனிற்கு புரிந்து கொண்டது, இவள் என்னை யார் என்று தெரியாது அழைத்துப் போகிறாள் போல என்று எண்ணியபடி அவளைத் தொடர்ந்தான். இறுதியில் அங்குள்ள லதா மண்டபத்தை அடைந்தனர். வந்தியத்தேவன், தீபச் சுடர், வாசனை கமழும் மணம், இதற்கிடையே அழகிய மஞ்சத்தில் ஒய்யாரமாக ஒரு பெண் வீற்றிருப்பதைக் கண்டான். இவள் பழுவூர் ராணிதான். அங்கு பல்லக்கில் பார்த்த அந்த மோகன முகம் என்று போதை கொண்டு நின்றான். பழுவூர் ராணி நந்தினி வந்தியத்தேவனைக் கண்டு வியப்புடன் வாய் அடைத்து நின்றாள். அப்பொழுது வந்தியத்தேவன் 'அம்மணி உங்கள் தாதிப் பெண்ணிற்கு திடீர் என்று சந்தேகம் வந்தது நான் மந்திரவாதியா இல்லையா? என்று நீங்கள் யாரோ மந்திரவாதியை எதிர் பார்த்து காத்திருக்க அவள் என்னை அழைத்து வந்தாள்' என்றான். நந்தினியும் சிரித்தபடி 'ஏன் என்னை இந்த நேரத்தில் பார்க்க வந்தாய்' என்று கேட்டாள். சின்னப்பழுவேட்டரையர் ஆட்களிடம் இருந்து தப்பிச் செல்ல முயன்ற போது தாதிப்பெண் உங்கள் மாளிகைக்கு அழைத்து வந்தாள் 'சரி எதற்காக என்னைப் பார்க்க விரும்பினாய் அதைச் சொல் ஏதோ ஆழ்வார்க்கடியான் என்று சொன்னாயே' என்றாள். வந்தியத்தேவன் 'நீங்கள் அவரின் தங்கையாம் தாங்கள் கண்ணனை மணந்து கொள்ளும் கலியாணக் காட்சியை பார்க்க வீர வைஷ்ணவ பக்தகோடிகள் காத்துக் கொண்டிருக்கிறார்களாம்' அப்பொழுது நந்தினி பெரு மூச்சுடன் வந்தியததேவனிடம் 'நீ அவரைப் பார்த்தால் இதைச் சொல்லிவிடு என்னை அடியோடு மறந்து விடச் சொல். ஆண்டாளைப் போல் பரம பக்தையாகக் கொஞ்சமும் தகுதியற்றவள் நான் என்று சொல்லு' என்றாள். அதற்கு வந்தியத்தேவன், 'அத்தகைய கஸ்டம் உங்களிற்கு தேவையில்லை தங்களை கிருஷ்ண பகவான் பார்த்து விட வேண்டியதுதான். ருக்மணியையும், சத்திபாமாவையும், ராதையையும் உடனே கைவிட்டு அவர்களின் சிம்மாசனத்தில் தங்களை ஏற்றி உட்கார வைத்துவிட வேண்டும் அல்லவா?' என்றான். அதற்கு நந்தினி, 'எனக்கு முகஸ்துதி தேவையில்லை சரி உம் பெயர் என்ன? நீ யார்?' என்று வினவினாள். அதற்கு வந்தியத்தேவன், 'என் சொந்தப் பெயர் வந்தியத்தேவன் பட்டப் பெயர் வல்லவரையன் பழைய புகழ் பெற்ற ராஜா குலத்தில் வந்தவன். இப்பொழுது எனக்கு ராஜ்ஜியம் இல்லை. எனக்கு சக்கரவர்த்தி சுந்தர சோழரைப் பார்க்க ஆவல். அதுதான் இங்கு வந்தேன். நீங்கள் கொடுத்த பனை இலச்சனை போட்ட மோதிரம் எனக்குத் துணை செய்தது. அதுவும் சின்னப்பழுவேட்டரையரிடம் அதைக் கடம்பூரில் அவர் அண்ணன் பெரியபழுவேட்டரையர் கொடுத்ததாகப் பொய் சொல்லி சுந்தர சோழரிடம் சென்றேன். அவரைத் தரிசித்தேன் இப்பொழுது எனக்கு அவசர காரியம் வெளியில் உண்டு அதனால் இங்கிருந்து தப்பிச் செல்ல நீங்கள் எனக்கு உதவி புரியுங்கள்' என்றான். அதற்கு நந்தினி வந்தியத்தேவனுடைய வீரத்தையும் துணிவையும் எண்ணிக்கொண்டு, 'ஐயா நான் ஒன்று சொல்லுகிறேன் அதை ஒப்புக் கொள்வீரா?' எனக் கேட்க, 'சொல்லுங்கள் அம்மணி' என்றான் வந்தியத்தேவன். 'நீரும் நானும் ஒரு ஒரு உடன் படிக்கை செய்து கொள்ளலாம். நீர் எனக்கு உதவி செய்ய வேண்டியது நான் உமக்கு உதவி செய்ய வேண்டியது' என்று சொன்னாள். வந்தியத்தேவன் 'அம்மணி சோழ மகாராஜ்ஜியத்தில் சர்வ சக்தி வாய்ந்த தனாதிகாரியின் ராணி நினைத்ததை நினைத்தபடி சாதிக்க கூடிய சக்தி வாய்ந்தவர். நானோ ஒரு வித செல்வாக்கும் இல்லாதவன் தங்களிற்கு நான் எந்த விதத்தில் உதவ முடியும்?' என்றான். அதற்கு நந்தினி 'எனக்கு அந்தரங்கமான பணி ஆள் தேவையாக இருக்கிறது. இந்த அரண்மனையில் உமக்கு வேலை வாங்கித் தருகிறேன் ஒப்புக் கொள்வீரா? மன்னிக்க வேண்டும் அம்மணி இந்த சேவையை நான் இன்று முதல் மாதரசிக்கு செய்வதாக ஏற்கனவே ஒப்புக் கொண்டுள்ளேன்' என்றான். உடனே நந்தினி 'அது யாரு என்னுடன் போட்டி போடுகிறவர். அந்த இளைய பிராட்டி குந்தவை தேவி தானே' என்றவுடன் வந்தியத்தேவன் தன் கையில் உள்ள ஓலையை நீட்டி 'படித்துப் பாருங்கள் இதை பலர் திருடிப் படித்து விட்டனர். நீங்கள் படிப்பதில் என்ன தப்பு' என்று கூறிக் கொடுத்தான். நந்தினி அதை படித்தவுடன் கனல் கக்கும் கண்களால் வந்தியத்தேவனைப் பார்த்து, 'நீர் இங்கிருந்து உயிருடன் செல்ல வேண்டும் என்றால் ஓர் நிபந்தனை உண்டு அதாவது குந்தவை கொடுக்கும் பதில் ஓலையை என்னிடம் கொண்டுவர வேண்டும்' என்றாள். 'இது என்ன மிக அபாயமான நிபந்தனை இதற்கு பரிசுமுண்டோ' என்றான். நந்தினி 'ஆம் ஆம் சோழ சாம்ராஜ்ஜியத்தின் சகல சக்தி வாய்ந்தவராய் விளங்கும் பெரிய பழுவேட்டரையர் எந்தப் பரிசிற்காக காத்திருக்கிறாரோ அது உமக்கு கிடைக்கும்' என்று கூறி மோகனாஸ்திரத்தைத் தூவினாள். அந்தக் கணம் வந்தியத்தேவனின் உடம்பு சிலிர்த்தது. அவ்வேளை நந்தினியின் தோட்டத்தில் ஆந்தைக் குரல் கேட்டது. மேலும் பெரியபழுவேட்டரையர் தஞ்சைக் கோட்டைக்குள் வரும் ஆரவாரமும் கேட்டது உடனே நந்தினி வந்தியத்துவனைப் பார்த்து, 'நீர் அந்த இருட்டில் மறைந்து கொள்ளும் மந்திரவாதி வருகிறான் அவனுக்கு இரண்டு வார்த்தை சொல்லி விட்டு வருகிறேன்' என்றாள். அப்பொழுது --- பகவதி சக்தி சண்டிகேசுவரி என்ற மந்திரங்களோடு மந்திரவாதி ரவிதாசன் வந்தான். 'அடி பாதகி பழைய சம்பவங்களை நீ மறந்துவிட்டாய் உனக்கு ஞாபகம் செய்யவே இங்கு வந்தேன்' என்றான். 'ராணி கேள் மூன்று வருடங்களிற்கு முன்னால் ஒரு நாள் நடு நிசியில் வைகை நதிக் கரையில் உள்ள மயானத்தில் ஒரு சிதை எரிந்து கொண்டிருந்தது. அது ஆதித்தகரிகாலன் தலையை வெட்டி எடுத்துச் சென்ற பின் எரிக்கப்பட்ட வீரபாண்டியனின் உடலாகும். அதை எந்த சாஸ்திர முறையுமின்றி நெருப்பில் எரித்தனர். பின்னர் அந்த சிகையுடன் ஓர் உயிலைப் போட்டு தீ மூட்டினார்கள். உன் கையையும், காலையும் கட்டியபடி வாயைத் துணியினால் அடைத்து உன்னை அந்த சிதையில் போட தூக்கி வந்தார்கள். அப்போது நீ ஏதோ சொல்ல தவித்தாய். உன்னை யாரும் நம்பவில்லை. நான் நம்பினேன். அப்போது உன் வாயில் இருந்த துணியை எடுத்தார்கள். நீயும் அந்த மனிதர்கள் போல் பழிவாங்கும் விரதம் பூணப் போவதாக சொன்னாய். அதற்கு அதிக காரணம் உண்டு என்று சத்தியம் செய்தாய். உன்னுடைய அழகையும், மதியையும் சபதத்திற்கே பயன்படுத்தப் போவதாகச் சொன்னாய். இது ஞாபகம் இருக்கிறதா? இதனால் நான் தான் உன்னைத் தீயில் போடாது காப்பாற்றினேன். பின்னர் நீ காட்டு வழியாகச் செல்லும் போது அந்த அகண்ட காவேரி காட்டு வழியில் சில வீரர்கள் உன்னைப் பிடித்தார்கள். அவர்களுடைய தலைவன் பெரிய பழுவேட்டரையர் உன்னைக் கண்டு மயங்கி, உன் மோக வலையில் விழுந்தார். அவரை நீ மணந்தாய். நாம் ஏமாந்தோம் இருந்தும் நான் உன்னைக் கத்தியால் குத்திக் கொல்லப் போகிறேன்' என்றேன். மீண்டும் உயிர் பிச்சை கேட்டாய். என் சபதத்தை நிறைவேற்றவே இங்கு வந்தேன் என்றாய்.




இப்பொழுது பழுவூர் அரண்மனையில் சுகபோகத்தில் அழுந்தி உன் சபதத்தை மறந்து விட்டாய். உடனே நந்தினி 'சீச் சீ இந்த மஞ்சமும், மெத்தையும், ஆடை ஆபரணங்களும் அற்ப சுகபோகமே! நான் என் சபதத்திற்காகவே உயிர் வாழ்கிறேன்' என்றாள். 'சரி அந்த வாயில் வழி போகிறவன் ஏன் உன்னிடத்தில் வந்தான்' என்று விசாரணை செய்தான் ரவிதாசன். 'அவனை நீ என்று என் தோழி வாசுகி அழைத்து வந்தாள். இதனால் தான் இந்த விபரீதம். ஒரு முக்கியமான லாபம் கருதி அவளிடம் சல்லாபம் செய்தேன்' என்றாள். 'இவன் காஞ்சியில் இருந்து பழையாற்றைக்கு ஓலை கொண்டு போகிறான். இந்த சோழ பெண் புலி இவள் தான் இப்போது ராஜ்ஜியம் ஆள்பவள். பலமிழந்து படுக்கையில் கிடக்கும் கிழவரும் அல்ல, இலங்கையிலுள்ள இளவரசன் அருள்மொழிவர்மனும் அல்ல, தனாதிகாரி என் தலைவனும் அல்ல. இந்த பழையாற்றைப் பெண் புலிக்குட்டி தான் இந்த இராஜ்ஜியம் ஆள்பவள். அதனால் இந்த வாலிபனை நான் உபயோகித்துக் கொள்ளப் போகிறேன்' என்றான். 'அந்த வாலிபனை உன்னிடமே ஒப்படைக்கிறேன். நீயே அவனை சுரங்கவழியில் கோட்டைக்கு வெளியில் அழைத்துப் போய் கண்ணைக் கட்டி அழைத்துச் சென்று அங்கே காத்திரு. குந்தவை கொடுக்கும் மறு ஓலையுடன் மீண்டும் அவனை அழைத்து வா. அவன் தப்பிக்கப் பார்த்தால் அல்லது உன்னை எமாற்றினால் அவனைக் கொன்று விடு' என்றான். அதற்கு மந்திரவாதி ரவிதாசன் 'வேண்டாம் சின்ன பழுவேட்டரையர் ஆட்கள் அவனைத் தேடுகிறார்கள் அவனுடன் சென்றால் எனக்கும் ஆபத்து. நான் பொன் வாங்கவே இங்கு வந்தேன். மேலும் எடுத்த காரியத்தை முடிப்பதற்கு இலங்கைப் பொன் இருந்தால் நல்லது' என்றான்.

*(தொடரும்...)*

---

Jenita.Jaffna@gmail.com **தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை, மாதினி நிமலன்**

---



# மலேசிய கல்வி சான்றிதழ் (எஸ்.பி.எம். ) தேர்வும் தமிழ்க் கல்வி சரிவும்



நக்கீரன்

கோலாலம்பூர், ஜூன் 10:



பள்ளிக் கல்விக்கு விடை கொடுத்து, உயர்க்கல்விக்காக கல்லூரியையோ பல்கலைக்கழகத்தையோ நாடும் அதேவேளையில் மாணவர்கள் விடலைப் பருவத்தைக் கடந்து இளைஞர் என்னும் தகுதியை எட்டுவதும் நடைபெறும்.

மலேசியக் கல்விச் சான்றிதழ் (எஸ்.பி.எம்.) தேர்வில் அமர்ந்து அதற்கான முடிவை கையில் பெறுவதுடன் பள்ளி வாழ்க்கை நிறைவு பெறும்.

ஏழு வயதில் ஆரம்ப பாடசாலையில் சேர்ந்து, அங்கே ஆறு ஆண்டுகள் பயின்றபின் இடைநிலைப் பள்ளியில் ஐந்து ஆண்டுகள் கற்றபின் எழுதும் இந்த எஸ்பிஎம் தேர்வு 2020-ஆம் ஆண்டிற்கான முடிவை மலேசியத் தேர்வு வாரியம் ஜூன் 10-ஆம் நாள் வெளியிட்டது.

கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டின் தேர்ச்சி விகிதம் பொதுவாக முன்னேற்றம் என்று சொல்லப்பட்டாலும், இந்திய மாணவர்களைப் பொறுத்தவரை குறிப்பாக தமிழ் மாணவர்கள் எஸ்பிஎம் தேர்வில் தமிழ் மற்றும் தமிழ் இலக்கியப் பாடங்களை எடுப்பதும் தேர்ச்சி பெறுவதும் அண்மை ஆண்டுகளாக சரிந்து வருகின்ற நிலையில், இது குறித்து பேராக் மாநிலத்தில் தமிழ்ப் பயிர் வளர்க்கும் ஈப்போ முத்தமிழ் பாவலர் மன்றத்தின் தலைவரும் உலகத் தமிழ் கவிஞர்ப் பேரவையின் தலைவருமான காவல்துறை முன்னாள் அதிகாரியுமான முனைவர் அருள். ஆறுமுகம் மிகவும் வருத்தம் தெரிவித்திருந்தார். இதன் தொடர்பில், அவர் ஒரு காணொளியையும் பகிர்ந்திருந்தார்.




ஐயா அருள். ஆறுமுகனாரைப் போன்றே, இன்னும் ஏராளமான தமிழ்ப் பற்றாளர்களும் பொது அமைப்பினரும் மலேசிய இடைநிலைப் பள்ளிகளில் தமிழ், தமிழிலக்கியப் பாடங்களை தேர்வுப் பாடமாக எடுப்பதும் பலவித சவால்களை எதிர்கொண்டு அப்பாடங்களைப் படிக்கும் மாணவர்களிடையே தேர்ச்சி விகிதமும் குறைந்து வருவதைப் பற்றி மிகவும் வருத்தமும் வேதனையும் தெரிவித்து வருகின்றனர்.

இது குறித்து, பேராக் மாநிலம் தஞ்சோங் மாலிம் என்னும் பழம்பட்டினத்தில் அமைந்துள்ள "உப்சி" கல்வியியல் பல்கலைக்கழக தமிழ்ப் பிரிவின் தலைவரும் விரிவுரையாளருமான பேராசிரியர் முனைவர் அ.மனோண்மணி தேவி, தன் கருத்தை சமூக நோக்குடன் கீழ்க்கண்டவாறு பதிவு செய்தார்.

மலேசியத் திருநாட்டில் தமிழும் தமிழிலக்கியமும் அரசு இடைநிலைப் பள்ளிகளில் கற்பிக்கப்பட்டாலும் தொடக்கநிலையில் தமிழ்க்கல்வி கற்ற மாணவர்கள் பலரும் இடைநிலைப்பள்ளிக்குச் சென்றதும் தமிழ்மொழிப் பாடத்தையும் தமிழிலக்கியப் பாடத்தையும் அரசு தேர்வுகளில் ஒரு பாடமாக எடுத்துப் பயில்வதை அதிகம் விரும்புவதில்லை. விரும்புவோருக்கோ வாய்ப்பு வழங்கப்படுவதில்லை. இதற்குப் பல காரணங்கள் உள.

பல இடைநிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர்கள் இல்லை. தமிழாசிரியர் பணியில் இருக்கும் பள்ளிகளில், பெற்றோரே தங்கள் பிள்ளைகள் தமிழ்மொழிப் பாடத்தை அரசு தேர்வுகளில் எடுப்பதைத் தடுக்கும் நிலையும் உண்டு என்பது கசக்கும் உண்மை. சில பள்ளிகளில் தமிழாசிரியர்கள் வாரம் ஒருமுறை வேறு பள்ளிகளிலிருந்து வந்து கற்பிக்கும் நிலையும் உண்டு. இப்படிப் பற்பல சிக்கல்கள் இருக்கும் நிலையில், தமிழின் மீது தீராப் பற்றுக்கொண்ட பெற்றோர்கள் மட்டுமே தங்கள் பிள்ளைகள் அரசு தேர்வில் தமிழும் தமிழிலக்கியமும் எடுப்பதை ஊக்குவித்து வருகின்றனர்.



இதனால், நாளுக்கு நாள் அரசு தேர்வில் தமிழ்மொழியைத் தெரிவு செய்து படிக்கும் மாணவர் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகின்றது. இந்நிலைக்குத் தீர்வு ஒன்று உண்டென்றால், தமிழ்மொழியையும் தமிழிலக்கியத்தையும் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்க வேண்டும். அத்தோடு, எல்லா இடைநிலை, மேல்நிலைப் பள்ளிகளிலும் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர், முழுநேர ஆசிரியராகப் பணியில் அமர்த்தப்படவேண்டும். இவ்வாறு செய்வதன்வழி, தமிழும் தமிழிலக்கியமும் பாடவேளையில் கற்பிக்கப்படும் நிலை ஏற்படும். இச்செயல்பாடு, பல சிக்கல்களுக்குத் தீர்வாக அமையும் என்பதோடு மாணவர்கள் எண்ணிக்கையை உயர்த்தவும் அதன்வழி தேர்ச்சி விகித உயர்வுக்கும் அது வழிவகுக்கும் என்றார் பேராசிரியர் மனோன்மணி.



இதற்கு காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

**நக்கீரன் - Nakkeeran: 013-244 36 24**

# 2020 எஸ்பிஎம் தேர்வு எழுதிய அனைவருக்கும் எம்ஏபி கட்சி வாழ்த்து



கோலாலம்பூர், ஜூன் 10:

மலேசிய கல்வி சான்றிதழ் (எஸ்பிஎம்) 2020 தேர்வு எழுதிய அனைவருக்கும் மலேசிய முன்னேற்றக் கட்சி - எம்ஏபி சார்பில் வாழ்த்து தெரிவிப்பதாக அதன் தேசியப் பொருளாளர் மணிமாறன் தெரிவித்துள்ளார்.

மலேசிய வரலாற்றில் எஸ்பிஎம் தேர்வு முடிவை முதன் முதலாக இணையம் வழி மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய நிலைமையை கொரோனா நச்சில் ஏற்படுத்திவிட்டது. இதே நச்சில் பரவல் காரணமாக கடந்த ஆண்டு இரண்டு முறை ஒத்துவைக்கப்பட்டு இவ்வாண்டு தொடக்கத்தில் நடத்தப் பட்ட இந்தத் தேர்வு முடிவு இன்று வெளியிடப்பட்டது. மலேசிய மாணவர்-களின் கல்விப் பயணத்தில் எஸ்பிஎம் தேர்வு ஒரு முக்கியமான கட்டமாகும்.

2020 எஸ்பிஎம் தேர்வில் எல்லாப் பாடங்களிலும் "ஏ" பெற்ற 9411 மாணவர்கள் உட்பட வெற்றி பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் மீண்டும் ஒரு முறை வாழ்த்து தெரிவிக்கும் அதேவேளை, இந்திய சமுதாயத்தைச் சேர்ந்த தகுதியான மாணவர்கள் அனைவருக்கும் இந்த ஆண்டு மெட்ரிகுலே'ன் கல்வி வாய்ப்பை வழங்கி சம்பந்தப்பட்டவர்களின் கல்விப் பயணத்திற்கு துணை நிற்கும்படி தேசியக் கூட்டணி அரசை எம்ஏபி கட்சி சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

மெட்ரிகுலேஷன் கல்வியைத் தவிர, மலேசிய உயர்க்கல்வி சான்றிதழ் என்னும் எஸ்டிபிஎம் கல்வி மூலமாகவும் மாணவர்கள் தங்களின் படிப்பைத் தொடரக் கூடும். இவ்வாறெல்லாம் கல்வியைத் தொடர முடியாத அளவிற்கு குறைவான மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மனம் சோர்ந்துவிடாமல், தொழில் கல்வியில் சேர்ந்து தங்களை வளப்படுத்திக் கொள்ளலாம்.

நாடு தற்பொழுது 4-ஆவது தொழில் புரட்சியில் அக்கறைக் கொண்டிருப்பதால், தொழில் கல்வி பெறும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு சந்தையில் முன்னுரிமை கிடைக்கக்கூடும். இன்று ஜூன் 10-இல் வெளியான 2020 எஸ்பிஎம் தேர்வு முடிவில் நாடு முழுவதிலும் 4416 மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் தேர்ச்சி பெறவில்லை.

இவர்களில் மீண்டும் தேர்வில் அமர விரும்பாத மாணவர்கள், தத்தம் இலக்கு அல்லது ஆர்வத்தின் அடிப்படையில் தாங்கள் விரும்பும் ஏதாவது தொழில் சம்பந்தமான திறன் கல்வியைப் பெற முனைப்பு காட்டலாம். இதன் தொடர்பில் வழிகாட்ட எம்எபி கட்சியும் தயாராக இருக்கிறது என்று எம்ஏபி சிலாங்கூர் மாநிலப் பொறுப்பாளர்களில் ஒருவருமான மணிமாறன் இதன் தொடர்பில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**நக்கீரன் - Nakkeeran: 013-244 36 24**

- மொன்றியல் விண்ணமைந்தன் எழுதுகின்றார்



# சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

#49

## அன்னை இல்லத்தில் ஓர் நாள்

*தொடர்ச்சி...*

"என்ன புறப்பட போறீங்களா! சும்மா உட்காருங்கய்யா... இங்க நான் வச்சதுதான் சட்டம். காபி குடியுங்க... நா குடிக்க போறேன்.. நீங்களும் குடிக்கணும்".

மதிய உணவிற்குப் பின் அவர் கொஞ்சம் ஓய்வெடுக்கட்டும் அவரை தொந்தரவு செய்யக் கூடாது என்ற எண்ணத்தாலேயே நாங்கள் புறப்பட ஆயத்தமானோம். ஆனால் அவர் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை!

மனதிற்கு யாரையாவது பிடித்து போய்விட்டால் இலேசில் விடமாட்டார். அதே போல் நீண்ட காலம் பழகி அவர்களுடன் ஏதும் மனஸ்தாபம், சந்தேகம் - கருத்து முரண்பாடு வந்தாலும் அந்த உறவில் விரிசல் வருவதும் அவரைப் பொறுத்தளவில் தவிர்க்க முடியாதது! இப்படியான குணம் கலைஞர்களிடத்து பொதுவானது. எங்களைப் போன்ற சாதாரண மனிதர்களிடமும் உண்டு. உணர்ச்சிவசப்படும் மனிதர்களிடம் இக்குணங்களை சாதாரணமாகப் பார்க்கலாம். குடும்பம், அரசியல், சமூகம், கலையுலகம் என்று உரையாடல் பல திசைகளுக்கும் போவதும் வருவதுமாகவிருந்தது.



ஓரிடத்தில் தலைவர் காமராஜரை பற்றி பேச்சு எழுந்தபோது "கலாரசனை அற்றவர். பிடித்து இழுத்து இதை பாருங்கய்யா என்று வற்புறுத்தினால் தான் பார்ப்பார். அவசியம் கருதி கட்டாயப்படுத்த வேண்டும்.

"மக்கள் திலகம்" பற்றி பேசும்போது "அண்ணன்" என்று மரியாதையுடன் கூறினார். அரசு நிர்வாகங்களில் ஊழல் பற்றி உரையாடும் போது "அண்ணன்" ஆட்சி பற்றி குறிப்பிட்டார்.

"என்னைச் சுற்றி இருந்தவர்கள் எல்லாம் நல்லா இருக்காங்க. என் பெயரைச் சொல்லி சொல்லி ஆளாயிட்டாங்க!

"நான் சிவாஜியின் ஆள்" என்று சொல்லியே நல்லா சம்பாதிச்சிட்டாங்க. இப்ப யாருமே என்னோட இல்லை..", என்று தனது அரசியல் ஈடுபாட்டின் வீழ்ச்சி பற்றிக் குறிப்பிட்டார்.

எத்தனையோ மகாபெரியவர்களுடனும், அரசியல் ஜாம்பவான்களிடமும், தலைவர்களிடத்தும், சரிசமமாக இருந்து உரையாடிய நமது கலை சக்கரவர்த்தி எங்களையும் சமமாக மதித்து அன்பு பாராட்டி உட்காருங்கய்யா என்று உரையாடிய அந்தப் பின்மாலைப் பொழுது எங்களுக்குப் பொன்மாலைப் பொழுதாயிற்று!

"ஊரிலே (கனடாவில்) என்னய்யா பண்றீங்க. குடும்பம் எல்லாம் நல்லாயிருக்கா..! தொழில், குடும்பம் இரண்டும் முக்கியம்", ஒரு குடும்பத் தலைவனாகவிருந்து அவர் காட்டிய அக்கறை என்னை மிகவும் கவர்ந்தது. இலங்கை வானொலியில் சில நிகழ்ச்சிகள் பற்றி நண்பர் ஹமீது அவர்களுடன் விவாதித்தார்! விவாதம் சூடாகவேயிருந்தது.

மனுஷர் மிகவும் உன்னிப்பாக எல்லா நிகழ்ச்சியும் செவிமடுக்கிறார். அனைத்துப் பத்திரிக்கைகளையும் ஆழமாக படிக்கிறார். இப்போதெல்லாம் போதிய நேரம் அவருக்கு கிட்டுகிறது. பல வருடங்களுக்கு முன்பு இலங்கை வந்திருந்தபோது கதிர்காமம் சென்றதையும், அங்கு முருகனுக்கு பூஜை செய்பவரின் அசிங்கமான காரியங்களையும் விமர்சனம் செய்து வேதனைப்பட்டார்.

இப்போதும் கூட பிரபு, ராம்குமார் பிள்ளைகளுக்கு கதிர்காம முருகனுக்கு நேர்த்திக்கடன் இருப்பதாகவும், அங்கு நிலவும் பதட்டமான சூழலினால் தான் இப்போது வர முடியாது. ஆனால் பிள்ளைகளை அனுப்பி வைத்தால் நீர் (ஹமீதை பார்த்து) அவங்களை நல்லபடி கதிர்காமம் அழைத்துப்போய் ஆகவேண்டியவைகளை கவனிப்பாராய்யா..! என்று ஹமீதைப் பார்த்தார். "அம்மாவையும் பிள்ளைகளையும் அனுப்பி வையுங்க. எந்தவித பிரச்சனையுமில்லாமல் நான் பார்த்துக்கொள்கிறேன்". என்று அந்த ஏகலைவன் குருதட்சனை வழங்குவது போல் பணிவுடன் பதிலுரைத்தார்.

நடிகர் திலகம் அவர்கள் தனது சகோதரியை அறிமுகம் செய்து வைத்தார். அப்போது ஐம்பதுகளில் திருச்சியில் அவரது சகோதரி பத்மாவதி அம்மையாருக்கு சிவாஜி அவர்கள் செய்து வைத்த திருமணம் பற்றிக் குறிப்பிட்டேன். "அவதான்ய்யா இவ"!, ஹமீது இடையில் குறுக்கிட்டு, "உங்க வீட்டு ஒவ்வொரு விடயத்தையும் ஆழமாக கவனிக்கிற ரசிகர்", என்று பெருமைப்பட கூறினார். "நல்லாயிருங்க", என்று மனம் மகிழ்ந்து வாழ்த்தினார்!.

இப்போது முக்கியமான இடத்திற்கு உரையாடல் திசை திரும்பியது! "உங்க ஆள்தான்யா வீரன். தமிழன் தலை நிமிர்ந்து வாழ கூடிய அளவிற்கு பல சாதனைகள் புரிந்து கிட்டிருக்கிறார். அவன்தான்யா தலைவன்", என்று தலைவர் பிரபாகரன் அவர்களைப் பற்றி மிக உயர்வாகப் பேசினார்.

ஒன்று மட்டும் உண்மை. சிவாஜி அவர்கள் விடுதலைப் புலிகளைப் பற்றியோ, தலைவரைப் பற்றியோ என்னிடம் பேச வேண்டிய அவசியமில்லை. மாற்றுக்கருத்து இருந்தால் கூட நான் அவரிடம் விவாதம் செய்ய போவதும் இல்லை. ஆனால் அவருடைய ஆழ்மனதில் ஈழத் தமிழர்களின் வீரமும், விடுதலை வேட்கையும் மிக உயர்ந்த நிலையில் இருந்ததை நான் புரிந்து



கொண்டேன். சில சமயங்களில் சில உணர்வுகளை சிலருடன் தான் பகிர்ந்து கொள்ள முடியும். சில இடங்களில் மௌனமாக தான் இருக்க வேண்டும். அவருடைய சூழல் அப்படி! அது புரியாதவர்கள் சிவாஜி அவர்களைப் பற்றி என்னென்னவோ பிதற்றுவார்கள். விளம்பரத்திற்காகப் போலியான வார்த்தைகள் கூற வேண்டிய தேவை அவருக்கில்லை.

சிவாஜி குடும்பம் தஞ்சாவூர்த் தோட்டத்தில் எம்மவர்களுக்குச் செய்த பல உதவிகளை நான் குறிப்பிடவில்லை. நல்ல செயல்களை கூட நாடறியாமல் புதைக்க வேண்டிய தேவையிருக்கு. நமது பிள்ளைகள் சிலர் சில நாடுகளில் இன்றும் கூட உயிருடன் வாழ சிவாஜி அவர்களும், அவரது துணைவியாரும் மிகவும் உதவியாகவிருந்திருக்கிறார்கள்! "நீங்கள் எல்லாம்



கோழைகள் ஐயா! உயிருக்காக வெளிநாட்டில் வாழ்கிறீர்கள். உண்மையான சுதந்திர வீரர்கள் அங்கு தான் (ஈழத்தில்) தான் வாழ்கிறார்கள்!". "எத்தனை பேரை அவர்கள் சுட்டு விடமுடியும். வெள்ளைக்காரன் சுட்டு விடுவான் என்று நினைத்து இருந்தால் எங்களுக்கு இன்று சுதந்திரம் கிடைத்திருக்குமா... என்ன!"

"எல்லோரும் திரண்டெழுந்து ஒற்றுமையாக எதிர்த்து நின்றால், அவனால் ஒன்றும் செய்ய முடியாது!". உலகமும் பார்த்துக் கொண்டிருக்காது. சுதந்திரம் வேண்டுமென்றால் சொந்த நாட்டிலேயே இருந்து போராட வேண்டும். வெளிநாட்டுக்குப் போய் தஞ்சம் புகக்கூடாது. இது என்னுடைய கருத்து சொல்லிப்புட்டேன். அம்புட்டுதான்"!.

வெள்ளையனை எதிர்த்துப் போராடிய மறவர் பரம்பரையில் வந்தவரால் இப்படித் தானே கூறமுடியும். அவருடைய கருத்தை என்னால் மறுத்து பேச முடியவில்லை.

ஒருசமயம் தொன்னூறுகளின் பிற்பகுதியில் (இத்தாலி) ரோம் நகருக்கும், வத்திகான் பெரிய தேவாலயத்திற்கு சென்று வந்தேன். அச்சமயம் கலைப் பொருட்கள் விற்பனையாகும் ஒரு வீதியில் பளிங்கு கற்களால் ஆன யூலியஸ் சீசர் சிலை ஒன்றை வாங்கி வந்தேன்.

ஜூலியஸ் சீசராகவும் வேடமேற்று ஓரங்க நாடகமொன்றில் நமது சிவாஜி ஐயா நடித்ததை நினைவில் கொண்டு அவருக்கே அச்சிலையை பரிசளித்துப் பெருமை கொண்டேன்.

மறக்க முடியாத நினைவுகளுடன் அந்த கலை மாமேதையின் இல்லத்திலிருந்து எனது விடுதிக்கு திரும்பினேன்.

வாசகர்களே! சுமார் 12 மாதங்களாக எழுதி வரும் இக் கட்டுரைத் தொகுப்பு நிறைவு அடையும் காலம் நெருங்குகிறது. இன்னும் சில வாரங்கள் பொறுமை காத்திருங்கள்.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 950



## ஆரையம்பதி கந்தசுவாமி கோயில்
## மட்டக்களப்பு

"அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா என்றோதுவோர் முன்"

கோதாரிநோய் எனப்பட்ட பேதிநோய், காத்தானைப் பாதிக்காததையடுத்து, எல்லாம் அவன் வணங்கும் விக்கிரகத்தின் அருளே என்றெண்ணி, விக்கிரகத்திற்குப் பொங்கல், பூசைகள் செய்வோமென நேர்த்திக் கடன் செய்தனர். இதன்பின்னர் இரண்டொரு நாட்களில் பேதிநோய் இல்லாது போய்விட்டது. இவ்வாறான பல சம்பவங்களை புராணவரலாறுகள் ஆதிகாலத்தில் நடந்ததாக எடுத்துரைத்துள்ளன. "நம்பினார் கெடுவதில்லை நான்குமறை தீர்ப்பு" என்பதற்கிணங்க முருகனின் அருள்பெற்ற பலரின் வரலாறு, இவ்வாறான சம்பவங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். கந்தசுவாமி என்னும் பெயரே முருகனின் சர்வ சக்தி தத்துவத்தைக் குறிக்கின்றது.

"சேயவன் வடிவம் ஆறும் திரட்டி நீ ஒன்றாய்ச் செய்தாய்
ஆயதனாலே கந்தனாம் நாமம் பெற்றான்"

என கந்தப்புராணம் குறிப்பிட்டுள்ளது. கந்து என்பது பற்றுக்கோடாகும். ஆன்மாக்களுக்கு பற்றுக்கோடாக விளங்குபவன் முருகன். தேவர்களின் துயர்தீர்த்து அருளியவனும் முருகனே. தன்னைத் தஞ்சமென்று வந்த ஆரைப்பற்று மக்களின் துயரைத் துடைத்து அருள் செய்தமைக்காக மக்கள் ஆரையம்பதி கந்தசுவாமியைப் போற்றியமை பொருத்தமானதே. நம்பிக்கைதான் கடவுள் என்பதை இம்மக்கள் ஆதாரமாகக்கொண்டு கந்தனிடம் தம்மை ஒப்படைத்து கோதாரி நோயிலிருந்து விடுபட்டனர்.

கோதாரிநோய் நீங்கிய அடுத்த வெள்ளிக்கிழமையே சனங்கள் ஒன்றுகூடி, விக்கிரகம் இருந்த இடத்தில் பொங்கல், பூசைகளை ஆரம்பித்து தவறாது செய்துவந்தனர். சில வருடங்களின் பின்னர் காத்தான் இறந்துவிட்டான். அதன்பின்னர் ஊரவர்கள் ஒன்றுசேர்ந்து குடிசை இருந்த இடத்தை கருவறையாகக் கொண்டு, கல்லினால் ஒரு சிறுகோயில் அமைத்து வழிபாடியற்றி வந்தார்கள். அதுவே தற்போதுள்ள கந்தசுவாமி கோயிலென அழைக்கப்படுகின்றது.

காத்தானால் கண்டெடுக்கப்பட்ட கல்விக்கிரகம், ஒரு பிள்ளையார் சொரூபமென்றும், ஆதியில் இக்கோயில் பிள்ளையார் கோயிலாகவே இருந்துள்ளது எனவும் கூறுவர். பின்னர் காலகதியில் இக்கோயில் கந்தசுவாமி கோயில் என வழங்கப்பட்டது. பிந்திய ஏட்டுக்குறிப்பின்படி, காத்தான் என்பவன் கண்டெடுத்தது பிள்ளையார் விக்கிரகம் என்பதும், பிள்ளையாருக்குக் கோயில்கட்டி கந்தசுவாமியென வணங்கினான் என்பதும் வேறொரு மரபுவழிக்கதையாகக் காணப்படுகின்றது. காத்தான் என்னும் வேடனாற் கண்டெடுக்கப்பட்ட பிள்ளையார் கல்விக்கிரகம் கோயிலிலே காணப்படுகின்றது. இவ்வாறாக பிள்ளையார் கோயிலாக இருந்து முருகன்கோயிலாக மாற்றம்பெற்ற பல கோயில்கள், மட்டக்களப்பில் பல இடங்களிலே காணப்படுகின்றன. முருக வணக்கம் மக்களிடையே பிரபல்யம் பெற்றதன் விளைவாகவே இவ்வாறான மாற்றங்கள் நிகழ்ந்தன எனக் கொள்ள முடியும்.

காத்தான் என்பவர் இறந்த பின்னர், ஆரைப்பறைச் சேர்ந்த தனவந்தராகிய நாகப்பர் என்பவர், இக்கோயிலைப் பெருப்பித்துக் கட்டினார். இவர் இறந்தபின்னர் திருவிளங்கு குடியினரைச் சேர்ந்த சிலர் ஒன்று சேர்ந்து, தாங்களும் பணம்போட்டு மக்களிடமும் நிதிசேகரித்து இக்கோயிலின் வெளிமண்டபம், மதில் ஆகியவற்றை கட்டி முடித்தார்கள். இதன்பின்னர் வெளிமண்டபத்திலே கொடித்தம்பமும் நாட்டப்பட்டது. இவ்வாறு மாறிமாறி பலரது பராமரிப்பில் இருந்த ஆரப்பற்றை கந்தசுவாமி ஆலயம், சிறிது காலத்தின்பின்னர் ஊர்மக்களின் அதிகாரத்திற்குள் வந்தது. இதனைத் தொடர்ந்து தம்பலகாமத்திலிருந்து, ஒரு பூசகரை இவ்வாலய பூசகராக நியமித்தனர். இக்கோயில் கட்டப்பெற்றபின்னர் பலதடவைகள் கும்பாபிஷேகப் பெருவிழா இடம்பெற்றுள்ளது.

ஆரையம்பதி கந்தசுவாமி கோயிலுக்கும், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயிலுக்கும் குளக்கோட்டு மன்னன் காலத்திற்கு முன்பிருந்தே நெருங்கிய தொடர்பு இருந்துவருகின்றது. இத்தொடர்பினை எடுத்தக்காட்டும் நிகழ்வுகள், இரு கோயில்களின் மகோற்சவகாலங்களில் இடம்பெறுவதைக் காணலாம். இக்கோயிலின் மகோற்சவம், புரட்டாதி பூரணையில் நடைபெறும் தீர்த்த உற்சவத்தோடு நிறைவுபெறும். மாதந்தோறும் வருகின்ற கார்த்திகை நட்சத்திரத்தில் சிறப்பான பூசைகள் இடம்பெறும். திருவெம்பாவைபூசை பத்துநாட்களும் சிறப்பாக நடைபெற்று, பத்தாவதுநாள் தீர்த்தத்தோடு நிறைவுபெறும். இவ்வாலயத்திலே கந்தசஷ்டிப்பெருவிழா மிகச்சிறப்பாக விரதமாகவும், விழாவாகவும் மக்களால் கடைப்பிடிக்கப்படுகின்றது.

காத்தான் என்பவரை மையமாகக் கொண்டு ஆரையம்பதி கோயிலின் ஆரம்பம்பற்றி வழக்கிலே பல கதைகள் காணப்படுகின்றன. ஈழத்திலுள்ள வரலாற்றுப் புகழ்மிக்க பல கோயில்களின் நிலை இவ்வாறுதான் காணப்படுகின்றது. எத்தனையோ தடயங்கள் வரலாற்றைக் தெளிவுபடுத்துவதற்கு ஆதாரமாக இருந்தாலும், அதனை செயற்படுத்தமுடியாத சூழ்நிலை இலங்கையிலே காணப்படுகின்றது. இக்காரணத்தினால் ஈழத்திலுள்ள தமிழர்களின் நிலப்பரப்பும், தமிழர்கள் ஆண்ட செய்திகளும், வரலாறுகளும் மண்ணோடு மண்ணாகப் புதைந்து காணப்படுகின்றன. அவற்றின் வெளிப்பாடாக கர்ணபரம்பரைக்கதைகளே தொடர்கின்றன. இவ்வாறான ஒரு நிலைதான் பழம்பெருமைகள் பல கொண்ட ஆரையம்பதி கந்தசுவாமி கோயிலோடும் இரண்டறக் கலந்து காணப்படுகின்றது.

"வேண்டிய வரங்கொடுப்பான் மெய்கண்ட தெய்வம்
இத்தெய்வமல்லால் புவியில் வேறில்லை"

என்ற குமரகுருபரசுவாமிகள் திருவாக்கிற்கமைய, கண்கண்ட தெய்வமாகப் போற்றப்படும் முருகன், வேண்டியவர்க்கு வேண்டியாங்கு அருளி, கலியுக வள்ளலாக ஆரையம்பதி கந்தசுவாமி கோயிலிலே எழுந்தருளியுள்ளான்.

*தொடரும்...*


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS C R PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

### நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

### நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

## தங்கநகை அடகுமாடம்

## KANAGAAMBIKAI

PAWN BROKERS





25 வருடங்கள்

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய ஒரே கூரையின் கீழ்


# கனகாம்பிகை

## பவுண் வங்கி

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2

416 269 7198



7 ஜீவன் முக்தி (பகுதி ) 116

# வாழ்க்கையின் லட்சியம்

*(சென்ற வார தொடர்ச்சி...)*

இன்னும் கொஞ்சக் காலத்திற்குள் 10.000 ஜீவன் முக்தர்கள் உருவானால் மட்டுமே பூமியை காப்பாற்றுவது பற்றி யோசிக்கலாம். ஜீவன் முக்தியை அடைவதற்காக முயற்சி செய்பவர்கள் ஒரு 1. 00. 000 பேர், அதாவது ஜீவன் முக்தியை வாழ ஆரம்பித்தவர்கள் இருந்தால் கூட போதும். பூமியைக் காப்பாற்றிவிடலாம்.

போர்க்கால அடிப்படையில் உங்களின் பேரக் குழந்தைகள், உங்களின் செல்ல வாரிசுகள், இந்த பூமியில் அவர்கள் நிம்மதியான வாழ்வை வாழ்வதற்கான இடத்தை காப்பாற்றி வைப்பது, நம் ஒவ்வொருவரின் தலைமேல் இருக்கும் பொறுப்பு.

உங்களின் செல்ல பேரக் குழந்தைகளாக செவ்வாய் கிரகத்திலிருந்து யாரோ வந்து பிறப்பார்கள் என்று நினைக்காதீர்கள். இன்னும் 40. 50 வருடங்கள் கழித்து உங்களின் உடலை விட்ட பிறகு, புது உடல் எடுத்து உங்களின் பேரக் குழந்தைகளாக பிறக்கப் போவது நீங்கள்தான். தாத்தா நட்டு வைத்த மாமரத்திலிருந்து பேரன் வந்து மாம்பழத்தைச் சாப்பிடுவார் என்பது பொய். தாத்தா என்ற உடலிலிருந்து மாமரத்தை நட்டு வைத்து, பேரன் என்ற உடலில் வந்துதான் மாம்பழத்தைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

மீண்டும் நாம் இந்தப் பூமிக்கு வரும்போது, பூமி பூமியாக இருப்பதற்கான எல்லா நடவடிக்கைகளையும் இப்பொழுதே செய்துவிட்டால் தப்பித்தோம்.
இல்லையென்றால் தொலைந்தோம். Either global peace or global sucide is the future.

தயவு செய்து உங்களை மிரட்டுகிறேன் என்று நினைத்து விடாதீர்கள்.

கல்யாண வீட்டுப் பந்தலில் அனுகுண்டு இருக்கிறது என்ற செய்தியை தெரிந்த ஒருவர் தன்னையும், மற்றவர்களையும் காப்பாற்றிக் கொள்ளும் இன்னொரு நல்லெண்ணமுடையவரிடம் பகிர்ந்து கொள்ளும் செய்திதான் இது.
நீங்கள் ஜீவன் முக்தராவது உங்கள் வாழ்வின் இலட்சியம்.
நீங்கள் ஜீவன் முக்தராவது எங்கள் வாழ்வின் இலட்சியம்.
நீங்கள் ஜீவன்முக்தராவது இந்த பிரபஞ்சத்தை இயக்கும். பிரபஞ்ச சக்தியின் லட்சியம்.
எப்படி யோசித்துப் பார்த்தாலும் இதைத் தாண்டி எளிமையான சத்தியமான, நேரடியான தீர்வு இந்தப் பிரபஞ்சத்தில் வேறு எதுவும் இருப்பதாக தெரியவில்லை.

மனம் கடந்த நிலையில், துரியநிலையில், ஜீவன் முக்த நிலையில், துரிய நிலையில் வாழும் பத்தாயிரம் கடவுள்களைப் பிரபஞ்ச சக்தி யாசகமாய் கேட்கின்றது.

நீங்கள் அதில் ஒருவராவது, கரும்பு தின்னக் கூலி அல்ல, கரும்பை சாப்பிட்டதற்காக கரும்புத் தொழிற்சாலைக்கே முதலாளியான கதை போன்றது.

லட்சியத்தை நோக்கி மொத்த வாழ்வையும் திருப்புங்கள். திரும்பியபின் நீங்கள் யாரோடு வேண்டுமானாலும் பாட்னராக இருக்கலாம். ஆனால் வாழ்வின் இலட்சியம் நோக்கித் திரும்பிய வினாடியிலிருந்து கடவுள் உங்களின் பாட்னர்.
வீறுகொண்டு எழுங்கள். மார்தட்டி நிமிர்ந்து நிற்போம்.
ஜீவன் முக்தியை வாழ்வதற்கு, நாம் பூமியை காப்பாற்றுவதற்கு.....

நான்கு நிலைகளில் வாழ்க்கையும், விழிப்புணர்வும்
நாம் வாழுகின்ற வாழ்க்கை இந்த நான்கு நிலையில் எதுவாக இருக்கின்றது என்று பார்ப்போம். இந்த பூமியில் வாழும் 99 சதவீத மக்கள் இரண்டாவது நிலையான 'சுவப்ன' நிலையில்தான் இருக்கிறார்கள். ஏதாவது பெரிய சாதனை புரிபவர்கள் மட்டும். அதாவது 1. சதவீதம். மனிதர்கள் முதல் நிலையான 'ஜாக்ரத்' நிலையில் அதிக றேரம் வாழ்பவர்கள்.

எல்லா மனிதர்களும், மூன்றாவது நிலையான 'சுசுப்தி' நிலையில் அதாவது தூக்க நிலையில் தங்களது வாழ்வில் மூன்றில் ஒரு பகுதியை செலவு செய்கிறார்கள். (24 மணி நேரத்தில், 8 மணி நேரத்தில், 8 மணி நேரம் தூங்குகிறோமில்லையா! அதாவது 75 வருட வாழ்நாளில், 25 வருடத்தையாவது தூங்கியே கழிக்கின்றோம்.)
நாலாவது நிலையான 'துரிய' நிலையில் மனிதர்கள் வாழ்வதே இல்லை.

அப்படி ஒரே ஒருமுறை அந்த துரியத்தை தொட்டவர்கள் அதற்குப் பிறகு மனிதர்களாவே வாழ்வதில்லை. கடவுளாகி விடுகிறார்கள்.

விதியை வெல்லும் வீரியததை அடைவது, அடைந்தே தீருவது எனும் முடிவை எடுத்து வாழ்வை தொடங்கினால் இந்த நிமிஷத்தில் முழு விழிப்படைந்துவிடும் விதியை வெல்லும் வீரியம் சாத்தியமாகும்.
நான்காவது நிலையான துரியத்தில் வாழ்வதற்கு ஆளே இல்லை.
ஜாக்ரத் என்றால் என்ன? சுவப்னம் என்றால் என்ன?
சுசுப்தி என்றால் என்ன? துரியம் என்றால் என்ன?
இப்போது ஆழ்ந்து பார்ப்போம்.

நீங்கள் மனதால் இந்த இரண்டு விதமான நிலையில் இருக்கிறீர்கள். தினசரி வாழ்க்கையிலேயே இந்த இரண்டு நிலைகளையும் அனுபவிப்பீர்கள். மனிதனின் 2 நிலைகள்.
நிலை 1. எண்ணங்கள் உள்ள நிலை.
விழித்துக்கொண்டிருக்கின்ற போது எல்லாருக்குமே எண்ணம் இருக்கிறது. உடல் இயங்கினாலும், இயங்காவிட்டாலும் கூட எண்ணங்கள் இருந்து கொண்டே இருக்கும் நிலை. இது எண்ணங்கள் உள்ள நிலை.
நிலை 2: எண்ணங்களற்ற நிலை
ஆழந்த தூக்கத்தில் எண்ணங்கள் இருப்பதில்லை. இது எண்ணங்களற்ற நிலை.
உணர்வின் இரண்டு நிலைகள்
நிலை 1. 'நான்' என்கின்ற விழிப்புணர்வு இருக்கின்ற நிலை. நிலை 2, 'நான்' என்கின்ற விழிப்புணர்வற்ற நிலை. ஆக மொத்தம் இரண்டு விதமான மனநிலைகளிலும், இரண்டு வி-தமான உணர்வு நிலைகளிலும் இருப்பீர்கள்.

நான் என்ற விழிப்புணர்வு நிலை:
இந்தப் புத்தக்கை படித்துக் கொண்டிருக்கும் எல்லாருக்குமே, 'நான்' என்ற விழிப்பு நிச்சயமாக இருக்கும். படிக்காமல் இருந்தாலும் 'நான்' என்கின்ற உணர்வு எல்லாருக்குமே இருக்கின்றது. இருப்பதனால்தான் உங்களால் உடலை அசைக்க முடிகிறது. அது இருப்பதால்தான் புத்தகத்தை எடுக்க முடிகிறது. பக்கங்களைப் புரட்ட முடிகிறது.
இது 'நான்' என்கின்ற விழிப்புணர்வு இருக்கின்ற நிலை. இது முதலாவது உணர்வு நிலை.
'நான்' என்ற விழிப்புணர்வற்ற நிலை.
இரவு ஆழ்ந்த தூக்கத்தில் 'நான்' என்கின்ற விழிப்புணர்வு இருக்கிறதா? இல்லை. தூ-க்கத்தில் 'நான்' என்பது உணர்வாக இருக்காது.
அதுதான் விழிப்புணர்வு இல்லாத நிலை.
இது இரண்டாவது உணர்வுநிலை.
இரண்டு உணர்வு நிலையும் இரண்டு மன நிலையும் ஒன்றோடொன்று சந்திக்கும்போது, இந்த நான்கு நிலைகளை உருவாக்குகிறது.

விழிப்புணர்வின் நான்கு நிலைகள் பற்றிய வரைபடத்தைப் பாருங்கள். இதை ஆழமாகப் புரந்து கொண்டோமானால், மனம் எப்படி வேலை செய்கிறது? என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். அதன்பின் உணர்வை எப்படி இன்னும் முழுமையாக உபயோகப்படுத்திக்கொள்வது என்பதையும் அறியமுடியும்.
ஜாக்ரத்-நினைவு நிலை: 'நான்' என்கின்ற விழிப்புணர்வும், இருந்து எண்ண ஓட்டமும் இருக்குமானல் அதை நனவு நிலை' என்று சொல்வோம். இதை சமஸ்க்ருதத்தில் 'ஜாக்ரத்' என்று சொல்வார்கள்.

*(தொடரும்...)*

### *பரமஹம்ஸ நித்தியானந்தர் சுவாமிகள் வழங்கிய அமுத மொழிகள்*

அன்று பெங்களூரில் தியான சத்சங்கம். நாங்கள் சென்ற வாகனம் கோளாறாகிவிட்டதால் ஆஸ்ரமத்திற்கு திரும்பி வர, பக்தர் ஒருவர் தன்னுடைய காண்டஸா காரில் வரும்படி கேட்டுக் கொண்டார்.

எனவே கண்டஸாகாரில் ஏறி உட்கார்ந்தபடி அங்கிருந்த பக்தர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டிருந்தோம். காரின் பக்கவாட்டில் இருந்து கையை எடுப்பதற்குள் காரின் கதவு சாத்தப்பட்டது. கதவிடுக்கில் சிக்கிய கட்டைவிரல் 'சதக்' என நசுங்க, வலியும், எரிச்சலும் அந்த இடத்தில் அதிகரித்துக் கோண்டே போனது. கொஞ்ச நேரத்திலேயே அந்த எரிச்சலும், வலியும் மறைந்து போனது. அடுத்தடுத்த வேலைகளைப் பாரக்க ஆரம்பித்து விட்டோம். என்று ஆஸ்ரம பிரம்மச்சாரிகளிடம் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னோம். வலியை கூட பரவசமாக்கும் சக்தி விழிப்புணர்விற்கு உண்டு. தொடர்புகளுக்கு: 416-439-2080



# இவ்வார ராசிபலன்

**11-06-2021 வெள்ளி தொடக்கம் 17-06-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** பொறுப்புக்களும், சிறப்புக்களும் சேரக்கூடிய சீரான வாரம். தனவரவு பெருகும். புதிய முதல்களைத் தவிர்க்கவும். நிர்வாகத்திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நல்லோர் நட்பு கிட்டும். திறமைகள் வெளிப்படும். பெரியோர்களின் ஆசி கிடைக்கும். காதலில் பிரிவு ஏற்படும். பாராட்டுக்கள் தேடிவரும். கல்விக் கடன் ஏற்படும். கடமையில் தடங்கல் ஏற்படும். விவாத முயற்சி வெற்றி தரும். மாலை நேரப் பிரார்த்தனை மன அமைதி தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: வீரவிநாயகர், அதிர்ஷ்ட எண்: 8,2,5,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,D




**ரிஷபம்:** வெளியூர் பயணத்தால் வெகுமதி கிடைக்கக்கூடிய வாரம். சோதனைகள் நீங்கும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பங்குச் சந்தை மாற்றம் தரும். வாழ்வு நிலை உயரும். மனைவி சலசலப்பு ஏற்படும். பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவால் பணவிரயம் ஏற்படும். கல்வியில் கவனம் குறையும். லாபம் திருப்தி தரும். வசதிகள் கூடும். உடல் ஆரோக்கியம் குறையும். மனவேதனை குறையும். வலம்புரி வழிபாடு வளம் சேர்க்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பாதளபைரவர், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**மிதுனம்:** தடங்கல் இல்லாத தனவரவுகளை சந்திக்கக்கூடிய நல்ல வாரம். காரியம் வெற்றி தரும். நட்பு பெருகும். பணப் பற்றாக்குறை நீங்கும். மாற்று இனத்தவர் வாழ்பு கிட்டும். மதிப்பு உயரும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. சுறுசுறுப்பு அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். கௌரவமான நாள். நந்தி வழிபாடு நன்மை தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**கடகம்:** ஆன்மீக எண்ணங்கள் அதிகரிக்கக் கூடிய அற்புதமான வாரம். மதி நுட்பம் தேவை. டிரான்ஸ்போர்ட் தொழில் சிறந்த லாபம் தரும். சந்தோஷம் அதிகமாகும். பிள்ளைகளால் பெருமை சேரும். பயணத்தால் பலன் உண்டு. குடும்ப கௌரவம் உயரும். அற்புதமான நாளாக அமையும். நன்மைகள் நாடிவரும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். வராத கடன் வந்து சேரும். புஷ்ப வழிபாடு புண்ணியம் சேர்க்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: முருகப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 5,1,5,0
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**சிம்மம்:** நலமும் வளமும் நாடி வரக்கூடிய நன்மையான வாரம். யோகமான நாள். உணவுத் தொழில் உயர்வு தரும். புதிய எண்ணங்கள் அதிகமாகும். பங்குச் சந்தை தொழில் லாபம் தரும். மன அமைதி நிலவும். மனதில் அளவில்லா சந்தோஷம் உண்டாகும். மனைவி அன்பு அதிகரிக்கும். மாணவர்கள் படிப்பில் கவனமுடன் செயல்பட வேண்டும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். சீரான வாழ்வமையும். சிந்தனைகள் மேலோங்கும். அம்பிகை வழிபாடு ஆரோக்கியம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: வடிவுடை அம்மன், அதிர்ட எண்: 5,1,5,0
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**கன்னி:** அனுகூலமும், ஆதாயமும் கிடைக்கக் கூடிய அற்புதமான வாரம். தேக ஆரோக்கியம் கூடும். உடல் நிலையில் கவனம் தேவை. பிள்ளைகளிடத்தில் அன்புடன் நடந்து கொள்வீர்கள். புதுத் தொழிலை ஆரம்பிக்க முன்வருவீர்கள். சமூக செயல-ில் ஈடுபடுவீர். மற்றவர்களிடத்தில் அன்பாக நடந்து கொள்வீர். இறை விழிப்புணர்வு கூடும். தேவையில்லாத பயங்கள் நீங்கும். மனதைரியம் கூடும். உற்சாகம் கூடும். தனலட்சுமி வழிபாடு பணவரவு தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: குபேர லட்சுமி, அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V




**துலாம்:** மர்மநோயும் தர்மவினையும் விலகக்கூடிய நல்ல வாரம். விநாயகர் வழிபாடு வெற்றி தரும். கவனமுடன் செயல்பட வேண்டும். காலம் தாழ்த்துவது நல்லதல்ல. புதிய முயற்சியினை உடனே செயல்படுத்தவும். திடீர் செலவுகள் ஏற்படும். தன-வரவுகள் தடைப்படும். பிள்ளைகளால் பெருமை சேரும். பழைய பகை மாறும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். மங்கல செய்தியால் மனம் மகிழும். குதூகலம் தாண்டவமாகும். நவகிரஹ வழிபாடு நன்மை தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மூர்ஷிக வாகனன், அதிர்ஷ்ட எண்: 7,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,F




**விருச்சிகம்:** பாக்கியமான சூழ்நிலைகள் படியேறி வரக்கூடிய நல்ல வாரம். திருடு போன பொருள் மீண்டும் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. பெண்களுக்கு ஆனந்தம் குடிகொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். தொல்லை தருகிறவர்கள் விலகி செல்வர். வயிற்று உபாதை வந்துசேரும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். எதிர்பார்த்த தொகை தாமதமா-கும். குலதெய்வ வழிபாடு நன்மை தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஆதித்ய பகவான், அதிர்ஷ்ட எண்: 5,1,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M





**தனுசு:** நேர்மையான உள்ளங்களுக்கு மேன்மையான வாய்ப்புக்கள் கிடைக்கக்கூடிய வாரம். காரிய வெற்றி கிட்டும் நாளாக அமையும். பதவி வாய்ப்பு வரும். வாதகம் விலகும். வருமானம் கை கூடிவரும். நண்பர்களால் நன்மை உண்டு. பெற்றோர் உதவிகள் கிடைக்கும். பிறர்க்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும். உறவினரால் முன்னேற்றம் உண்டு. கட்டிடத் தொழில் லாபம் தரும். பொன்னான நேரங்களாக அமையும். எள்தானம் ஏற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: கருமாரி அம்மன், அதிர்ஷ்ட எண்: 5,3,1,9
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,M



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**மகரம்:** அஷ்ட ஐஸ்வர்யங்கள் சேரக்கூடிய அற்புதமான வாரம். ஆக்கப் பூர்வமான நாள். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். சமுதாய விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. மங்கல செய்தி வரும். முயற்சி பலன் தரும். வாகனச் செலவுகள் ஏற்படும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். பொருளா-தாரம் உயரும். பணவரவு உயரும். பைரவ வழிபாட்டால் பாவம் தீரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: எமதர்மராஜா, அதிர்ஷ்ட எண்: 9,4,8,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,R




**கும்பம்:** ஆதாயமோ அனுகூலமோ சேதாரமில்லாமல் கிடைக்கக்கூடிய ஆதாரமான வாரம். அமைதியான நாள். வளமான வாழ்வு அமையும். திருமண வாய்ப்புகள் கைகூடி வரும். காதல் எண்ணம் ஏற்படும். மங்களச் செய்தி வரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பொன், பொருள் சேரும். பங்குத் தொழில் கவனம் தேவை. பழையக் கடன் தீரும். குதூ கலம் சேரும். வருமான வாய்ப்பு கூடி வரும். கல்வி ஆர்வம் கூடும். முருக வழிபாடு முன்னேற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பிரம்மதேவர், அதிர்ஷ்ட எண்: 1,7,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**மீனம்:** பற்றாக்குறைகள் நீங்கி எட்டாக்கனி கிடைக்கக் கூடிய ஏற்றமான வாரம். பொறாமைகள் விலகும்நாள். பிரார்த்தனைகள் அதிகரிக்கும். வியாபாரம் சிறக்கும். நிதிப் பற்றாக்குறை நீங்கும். தாய் நலனில் கவனம் தேவை. வழக்குகள் சாதகமாகும். வாகன செலவு ஏற்படும். உலோகத் தொழில் லாபம் தரும். கடன் பிரச்சனைத் தீரும். ஆடம்பர எண்ணம் உருவாகும். அன்னதானம் ஆரோக்கியம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சரஸ்வதிதேவியார், அதிர்ஷ்ட எண்: 6,1,7,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K

---------------------------------------

**Flex Institute நிறுவனத்துடன் சேர்ந்து உங்கள் கனடா செல்லும் கனவினை நனவாக்குங்கள்!**

நீங்கள் கனடாவுக்குச் செல்வதைப் பற்றிய கவலையா? உங்கள் கனவை நாம் நனவாக்குகின்றோம். இலங்கையின் முன்னணி கனேடிய விசா ஆலோசனை நிறுவனங்களில் ஒன்றான நற்பெயரை Flex Institute நிறுவனம் கொண்டுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் கனடா செல்லும் விண்ணப்பதாரிகளுக்கு எமது சிறந்த சேவையினை வழங்கி அதன் மூலம் அவர்களின் விசா விண்ணப்பங்களின் வெற்றியை உறுதிப்படுத்துகிறோம். நாம் முக்கியமாக எமது கனடிய விண்ணப்ப நிலையத்தின் மூலம் **Student Visa, a Student- Dependent, Open Work Permit, Visitor Visa, Visa Refusals, Family Visit Visa, Business Visit, and Super Visa Facilities**. வழங்குகிறோம். இதற்கென்றே எமது அனுபவமிக்க தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்கள் உங்களுக்கான உதவிகளை செய்வதற்கு காத்திருக்கிறார்கள். எந்த விதமான தங்குதடையோ, தாமதமோ இன்றி உங்களுக்கான விசாவினை கூடிய விரைவில் பெற்றுத் தருவதில் உத்தரவாதமளிக்கின்றோம். இதற்கென்றே அமைந்ததுதான் எமது On The Spot Consultation சேவை. எமது வாடிக்கயாளர்களில் பலர் மாணவர் முதல் பிற பிரிவுகள் வரை அவர்களது விசா விண்ணப்பங்களை வெற்றிகரமாகப் பெற்றுள்ளனர். **University of Canada, West Algoma University, Fanshawege College, Centennial College, Seneca College, Georgian College, Cambrian College, ST. Laurence College, University of Saskatchewan, Lakehead University.** போன்ற கனடாவிலுள்ள முன்னணி பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் கல்வி கற்பதற்காக விசாவினைப் பெற்றுக் கொள்வதற்கான ஆலோசனைகளை நேருக்கு நேராக வழங்குவதுடன் விசாவினை பெற்றுத்தர உதவுவதுடன் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் கல்வி மற்றும் நிதி பின்னணி குறித்து கவனமாக அவதானித்து அவர்களின் விருப்பத்திற்கேற்ப கல்லூரிகளையும், பல்கலைக் கழகங்களையும் தேர்வு செய்ய நாம் உதவத் தயாராக உள்ளோம். எமது Flex Institute வாடிக்கையாளர், மாணவர்களின் மறுக்கப்பட்ட விசாக்களை பெற்றுத் தந்து அதன் மூலம் பலரது நன்மதிப்பையும் பெற்றுள்ளோம்.

ஆலோசனைகளை தவிர IELTS பயிற்சி நிலையம் ஒன்றினை அமைத்து ஆங்கில மொழியில் பரீட்சை **IELTS, Duolingo English Test, TOFEL and PTE (Academic)** பயிற்சி மற்றும் உதவிகளை செய்து தருகிறோம். ஒரு அனுபவமிக்க விசா நிறுவனமாக எம்மை நாம் உத்தரவாதம் அளிப்பதுடன் உங்கள் விசாவிற்கும் உத்தரவாதம் அளித்து உங்கள் கனடிய கனவு நனவாகும். என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

- இலவச ஆலோசனை
- புலமைப்பரிசில்கள்
- 1000க்கும் மேற்பட்ட கல்வித்திட்டங்கள்

Student Visa, Student Dependent, Business Visa, Family Visit Visa, Super Visa requirements சம்பந்தமான ஆலோசனைகள் வழங்கப்படும்.



Are You Looking For
**Canada**

- Student Visa
- Visit Visa
- Rejected visa
- Business visa
- Super Visa
- Tourist Visa

**Call us on: 0777 761 346**

flex Institute
Step Towards a Bright Future

6A, Parakumba Place, Colombo 06.
**Hotline: 0777 761346**
E-mail: flexinstitute04@gmail.com
**www.flexinstitute.lk** YouTube

**10 வருட கால நம்பிக்கையான சேவை**

# ekuruvi Steps 2021

*Everyone is a hero of their health*

## 10,000 STEPS PER DAY FOR 100 DAYS

**JOIN FREE !** JUN 1ST - SEP 6TH

FOR INFO 416-272-8543



கடந்த வருடம் Ekuruvi Steps போன்று இந்த வருடமும் ஜூன் 1 ம் திகதியிலிருந்து ஆரம்பிக்கவுள்ளோம்

10,000 Steps Per Day to 1 Million steps over 100 Days வரும் ஜூன் 01 ஆம் திகதியிலிருந்து செப்டம்பர் 06 வரை நூறு நாட்கள், நாள் ஒன்றுக்கு 10,000 காலடிகள் என்று இலக்கு கண்காணிக்கப்பட்டு ஊக்கமளிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து உங்கள் உடல் உள அரோக்கியதை மேம்பெடுத்துவது மட்டுமல்லாது சமூகத்தையும் புத்துணர்ச்சியுடன் உங்களுடன் கொண்டுசெல்ல இணைந்து நடக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் .

BMI யைக் குறைத்து உடல் எடையைப் பேணுவது, நீரிழிவு, இருதய நோய் என்பவற்றை வராது தடுப்பது, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பது என்று பல பயன்களைக் கொண்ட இந்த நடைப்பயிற்சியைத் தொடர்ந்து 100 நாட்கள் என்று இலக்கு நிர்ணயித்து நிறைவேற்றுவதன் மூலம், நாளடைவில் அதுவே பழக்கமாகி உடல் ஆரோக்கியம் மேம்பட உதவும்.

இந்நிகழ்வில் இணைந்து கொள்ளும் ஒவ்வொருவரும் எங்கள் Whatsapp "Ekuruvi Steps 2021" இன் குழுமத்தில் இணைத்து ஒவ்வொரு நாளும் நீங்கள் நடக்கும் கால் நடைகளின் எண்ணிக்கையை ( 8,000 இலிருந்து 10,000 வரை ) பதிவிடவேண்டும் . அது எங்களால் தொடர்ச்சியாக 100 நாட்க்கள் கண்காணிக்கப்படும்.

இந்நிகழ்வின் ஒரு பகுதியாக, தாயகத்தில் வட, கிழக்கு மற்றும் மலையகம் எங்கும் கோவிட 19 காலத்தில் பொருளாதார கடும் நெருக்கடியை எதிர்வுகொள்ளும் ஆதரவற்ற மக்களுக்கு உதவுமுகமாக திரு ஆறுதிருமுருகன் ஐயாவின் வழிநடத்தலில் " சிவபூமி அறக்கட்டளை" யை ஒரு குறியீட்டு அமைப்பாக நாம் இந்த வருடம் ekuruvi Steps 2021 நேரடியாக உங்கள் பங்களிப்பை செய்யுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

உங்கள் உதவிகளுக்கு

SIVAPOOMI TRUST, KONDAVIL, JAFFNA | COMMERCIAL BANK JAFFNA | ACC . NO : 1060016510 | SWIFT CORD - CCEYLKLX

கனடாவிலிருந்து WWW.REMITBEE.COM இனுடாக அனுப்புவர்களுக்கு உதவியாக REMITBEE நிறுவனமும் உங்களது ஒவ்வொரு பரிமாற்றத்துக்கு $5 கனேடியன் டொலர்களை, சிவபூமி அறக்கட்டளைக்கு அனுப்பவுள்ளார்கள் . இத்துடன் வேறு கூடுதல் கட்டணம் எதுவும் அறவிடமாட்டார்கள் . PROMO CODE "EKURUVI2021"

அன்புடன்
நவஜீவன் அனந்தராஜ்

PLEASE SUPPORT THE BIG IMPACT OF SMALL DONATIONS


SIVAPOOMI TRUST | KONDAVIL , JAFFNA

COMMERCAL BANK JAFFNA | ACC. NO: 1060016510

+ 94 77 625 8511









# உதயன்

25 வெள்ளி விழா 2021 UTHAYAN




உதயம் 1314 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 11, 2021

## கனடா ஒன்றாரியோ மாகாணத்தில் 9 ஆம் வகுப்பு புதிய கணித பாடத்திட்டம் அறிமுகமாகின்றது



அனைத்து மாணவர்களும் கல்வியில் சிறந்து விளங்குவதற்கும் வெற்றி பெறவதற்கும் தேவையான திறமையையும் நம்பிக்கையையும் வளர்த்துக்கொள்வதை உறுதிப்படுத்துவதற்கு வேண்டிய புதிய 9ஆம் வகுப்புக்கான கணித பாடத்தினை கல்வி அமைச்சர் ஸ்டீபன் செச்சே வெளியிட்டு வைப்பதாக அறிவித்தார். வருகின்ற செப்டெம்பரில் வரவிருக்கும் மேற்படி புதிய பாடத்திட்டமானது, குறிப்பாக பின்வருவனவற்றில் மாணவர்களின் வாழ்க்கைக்கு உகந்த கற்றல் வாய்ப்புகளை வழங்கும் நோக்கத்தினைக் கொண்டிருப்பதுடன், வேலைவாய்ப்புகளில் அவர்களின் வெற்றிக்கும் உறுதுணையாக அமையும். *(தொடர்ச்சி உள்ளே 9ம் பக்கத்தில்)*

## கனடா – ஒன்றாறியோ மாகாணம் இன்று வெள்ளி தொடக்கம் மீளியங்கு நிலைக்குத் திரும்பும் முதலாவது கட்டத்துக்கு செல்கிறது



கனடாவில் மாகாண அளவில் வழங்கப்பட்டுள்ள தடுப்பூசி வீதம் மற்றும் கிடைக்கப்பெற்றுள்ள பொது சுகாதார தரவுகளின் முன்னேற்றங்களின் அடிப்படையிலும், ஒன்றாரியோ மாகாணத்தின் சுகாதார தலைமை அதிகாரிகாரியுடனான

ஆலோசனையின் பின்னர் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையிலும் .இன்று வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12:01 மணிக்கு ஒன்ராறியோ அரசாங்கம் மாகாணத்தின் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முதலாம் கட்ட நிலைக்கு செல்லவுள்ளது.

*(தொடர்ச்சி உள்ளே 9ம் பக்கத்தில்)*

## யாழ் வைத்தியசாலை மருத்துவ தேவைகளுக்கு நிதி வழங்கிய கனடா இங்கிலாந்து சித்தன்கேணி ஒன்றியங்கள்

கனடா சித்தன்கேணி ஒன்றியத்துடன் இங்கிலாந்து சித்தன்கேணி மக்களும் இணைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு வைத்திய உபகாரணங்களுக்காக ரூபா 2 மில்லியன் 314 ஆயிரத்துக்கும் அதிகமான நிதியினை சேகரித்து கொடுத்துள்ளார்கள். இந்த நிதியின் காசோலையினை யாழ் போதனா வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்தின் பணிப்பாளர் டாக்டர் ஜமுனானந்தராஜா அவர்களிடம் சித்தன்கேணி ஆன்மிக அறக்கட்டளை தலைவர் லயன்ஸ் மா . தவகுமாரன், னுச சு . கணேசமூர்த்தி மற்றும் ஆன்மிக அறக்கட்டளை போ'கர் சி . ஸ்கந்தமயம் ஆகியோர் 09-06-2021 புதன் கிழமை நேரில் சென்று கையளித்துள்ளனர். இந்த நிதி உதவியில் பங்குபற்றி நிதி வழங்கிய கனடா - இங்கிலாந்து சித்தன்கேணி மக்களுக்கு பாராட்டுக்கள்.



## தமிழ்நாட்டின் ஒரு நாள் தேவை 3 லட்சம். ஆனால் "யானைப்பசிக்கு சோளப்பொரி" போன்று 1 லட்சம் தடுப்பூசிகள் சென்னைக்கு அனுப்பப்பட்டன



தமிழ்நாட்டில் கொரோனா தொற்று இரண்டாம் அலை பரவல் அதிகரித்து பெருமள-வில் உயிர்களை பலி வாங்கி விட்டது.

முதல் அலை பரவலின் போதே இந்தியாவில் தடுப்பூசி தயாரிக்கும் பணி தொடங்கி மக்களுக்குத் தடுப்பூசி போடும் பணி தொடங்கியது. இந்தியாவில் கோவீஷீல்டு, கோவாக்சின் தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றன.

தடுப்பூசிகள் போடும் இயக்கத்துக்கு ஆரம்பத்தில் ஆர்வம் காட்டாத பொதுமக்கள் தற்போது நோய்ப்பரவல் அதிகரித்ததை அடுத்து ஆர்வமாகத் தடுப்பூசி போட்டுக்கொள்கின்றனர்.

18 வயதுக்கு மேற்பட்டோருக்குத் தடுப்பூசி போடும் இயக்கமும் தொடங்கப்பட்டதால் தமிழ்நாட்டில் ஒரு நாளைக்கு 3 லட்சத்துக்கும் மேற்பட்டோர் தடுப்பூசி போட்டு வருகின்றனர்.

*(தொடர்ச்சி உள்ளே 10ம் பக்கத்தில்)*




## கனடா – ரொரன்ரோ பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை அமைவதைக் கொண்டாடும் இணையவழிச் சந்திப்பு

சுமார் 3 வருடங்கள் சவால்கள் நிறைந்த ஒரு போராட்டக் களமாகத் தெரிந்த கனடா- ரொரன்ரோ பல்கலைக் கழக தமிழ் இருக்கைக்காக 3 மில்லியன் கனடிய டாலர்கள் சேகரிக்கும் திட்டம் இறுதியில் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பெற்றது.

அந்த இலக்கை அடைந்த வெற்றியோடு இனிமேல் 'தமிழ் இருக்கை' நிறுவப்படுவதுதான் 'பாக்கி' என்ற கட்டத்தை மேற்படி 'தமிழ் இருக்கை குழு' எட்டியுள்ளது. இதற்காக உலகெங்கும் இருந்து தங்கள் நேசக்கரங்களை மட்டுமல்ல நிதி அன்பளிப்புகளையும் நீட்டியிருந்தார்கள்.

தற்போது தமிழ் இருக்கை அமைவதைக் கொண்டாடும் இணைவழி சந்திப்பு நாளை 12ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

*(தொடர்ச்சி உள்ளே 4ம் பக்கத்தில்)*

